# P2024.

# கிறித்தவம், இஸ்லாம்

# P2024.

# கிறித்தவம், இஸ்லாம்

# Contents


- P2024. கிறித்தவம், இஸ்லாம்
- ஆசிரியரைப் பற்றி

- பாடம் - 1
- பாட அமைப்பு
- 1.0 பாட முன்னுரை
- 1.1 கிறித்தவக் கவிதைகள் - I (மரபுக் கவிதை)
- 1.2 கிறித்தவக் கவிதைகள் - II (புதுக் கவிதை)
- 1.3 கிறித்தவக் கவிதைகள் -III (பிற சமயக் கவிஞர்கள்)
- 1.4 கிறித்தவ வழிபாட்டுப் பாடல்கள் -I (கீர்த்தனைகள்)
- 1.5 கிறித்தவ வழிபாட்டுப் பாடல்கள் - II
- 1.6 தொகுப்புரை

- பாடம் - 2
- பாட அமைப்பு
- 2.0 பாட முன்னுரை
- 2.1 தமிழ் உரைநடை வளர்ச்சியும் கிறித்தவர்களும்
- 2.2. கிறித்தவப் புதினப் படைப்புகள்
- 2.3 கிறித்தவச் சிறுகதைப் படைப்புகள்
- 2.4. கிறித்தவ நாடகப் படைப்புகள்
- 2.5 தொகுப்புரை

- பாடம் - 3
- 3.0 பாட முன்னுரை
- 3.1 கிறித்தவச் சிற்றிலக்கியங்கள்
- 3.2 பெத்லகேம் குறவஞ்சி
- 3.3 திருக்காவலூர்க் கலம்பகம்
- 3.4 தேவமாதா அந்தாதி
- 3.5 அமலகுரு சதகம்
- 3.6 முக்தி வழி அம்மானை
- 3.7 தொகுப்புரை

- ஆசிரியரைப் பற்றி
- பாடம் - 4
- பாட அமைப்பு
- 4.0 பாட முன்னுரை
- 4.1 இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள்
- 4.2 மாலை இலக்கியங்கள்
- 4.3 சமய வரலாறு
- 4.4 சமயக்கருத்துகளும் சடங்குகளும்
- 4.5 இலக்கிய வருணனைகள்
- 4.6 தமிழ் மரபு
- 4.7 தொகுப்புரை

- பாடம் - 5
- பாட அமைப்பு
- 5.0 பாட முன்னுரை
- 5.1 இஸ்லாமிய மெய்ஞ்ஞானியர் சிலர்
- 5.2 இஸ்லாமிய மெய்ஞ்ஞானம்
- 5.3 இஸ்லாமியத் தமிழ் மெய்ஞ்ஞானம்
- 5.4 இஸ்லாமிய மெய்ஞ்ஞானி
- 5.5 மெய்ஞ்ஞானத் திறன்
- 5.6 தொகுப்புரை

- பாடம் - 6
- பாட அமைப்பு
- 6.0 பாட முன்னுரை
- 6.1 இசுலாமிய இலக்கியங்கள்
- 6.2 இக்காலச் செய்யுள் இலக்கியங்கள்
- 6.3 உரைநடை இலக்கியங்கள்
- 6.4 புனைகதை (Fiction) இலக்கியங்கள்
- 6.5 பிற உரைநடை வகைகள்
- 6.6 தொகுப்புரை

- P20241 தன் மதிப்பீடு : வினாக்கள் - I
- P20241 தன் மதிப்பீடு : வினாக்கள் - II

- P20242 தன் மதிப்பீடு : வினாக்கள் - I
- P20242 தன் மதிப்பீடு : வினாக்கள் - II
- P20243 தன் மதிப்பீடு : வினாக்கள் - I
- P20243 தன் மதிப்பீடு : வினாக்கள் - II
- P20244 தன் மதிப்பீடு : வினாக்கள் - I
- P20244 தன் மதிப்பீடு : வினாக்கள் - II
- P20245 தன் மதிப்பீடு : வினாக்கள் - I
- P20245 தன் மதிப்பீடு : வினாக்கள் - II
- P20246 தன் மதிப்பீடு : வினாக்கள் - I
- P20246 தன் மதிப்பீடு : வினாக்கள் - II

# **P2024.** கிறித்தவம், இஸ்லாம்

P20241 இக்காலக் கிறித்தவக் கவிதைகளும் வழிபாட்டுப்பாடல்களும்
P20242 கிறித்தவ உரைநடைப் படைப்புகள்
P20243 கிறித்தவச் சிற்றிலக்கியங்கள்
P20244 இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள்
P20245 இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்கள்
P20246 இக்கால இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள்

# ஆசிரியரைப் பற்றி



பெயர்:-ப.டேவிட் பிரபாகர்
கல்வித்தகுதி:-M.A(தமிழ்)., M.A(மொழியல்).,
எம்.பில்., பி.எச்.டி P.G. Dip,
(App.Linguistics),
சான்றிதழ்(இதழில்)
முகவரி(பணி):-தமிழ்த்துறை சென்னைக்
கிறித்துவக்கல்லூரி, சென்னை-59.
தொலைபேசி:-044-22375675
தொலைநகலி:-044-22377352
பணிநிலை:-விரிவுரையாளர்(முதுநிலை)
ஆய்வுத்துறை:-கணினி மொழியியல்
(Computational Linguistics)
நவீன உரைநடை,
விவிலிய மொழிபெயர்ப்பு.
பிற ஈடுபாடுகள்:-துணை ஆசிரியர், 'தரு' – உலகக்
கிறித்தவத் தமிழ்ப்பேரவை
காலாண்டிதழ்.
வெளியீடுகள்:-7 நூல்கள், 20க்கும் மேற்பட்ட
கட்டுரைகள்.

பாடம் - 1

# P20241 இக்காலக் கிறித்தவக் கவிதைகளும் வழிபாட்டுப் பாடல்களும்

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

இந்தப் பாடம் இக்காலக் கிறித்தவ மரபுக் கவிதைகளையும் புதுக்கவிதைகளையும் அறிமுகப்படுத்துகிறது. கிறித்தவ வழிபாட்டில் இடம் பெற்றுள்ள பாடல்களையும் இந்தப் பாடம் அறிமுகப்படுத்துகிறது.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

இந்தப் பாடத்தைப் படிப்பதால், இக்காலக் கிறித்தவக் கவிதைகளின் தன்மைகளையும் போக்குகளையும் அறிந்து கொள்ளலாம். பிற சமயக் கவிஞர்களும் இயேசுவிடம் ஈடுபாடு கொண்டு பாடியுள்ள சமய வேறுபாடற்ற பண்பினை அறிந்து கொள்ளலாம். மேலும், கிறித்தவ வழிபாடுகளில் பயன்படுத்தப்படும் பாடல்களின் வரலாறு, வகைகள், பண்புகள் போன்றவற்றையும் விளங்கிக் கொள்ள முடியும்.

# பாட அமைப்பு

1.0 பாட முன்னுரை
1.1 கிறித்தவக் கவிதைகள் – I (மரபுக் கவிதை)
1.1.1 பக்தி வெளிப்பாடு
1.1.2 விவிலியச் செய்திகள்
1.1.3 சமுதாய மேம்பாடு
1.2 கிறித்தவக் கவிதைகள் – II (புதுக் கவிதை)
1.2.1 இயேசுவின் வாழ்வு
1.2.2 சிலுவையின் மேன்மை
1.2.3 சமுதாயச் சீர்திருத்தம்
1.3 கிறித்தவக் கவிதைகள் – III (பிற சமயக் கவிஞர்கள்)
1.3.1 கிறிஸ்துவின் அருள் வேட்டல்
1.3.2 மேரி மக்தலேனா
1.3.3 சிலுவை தவயோகி
தன் மதிப்பீடு : வினாக்கள் – I
1.4 கிறித்தவ வழிபாட்டுப் பாடல்கள் – I (கீர்த்தனைகள்)
1.4.1 தோற்றமும் வளர்ச்சியும்
1.4.2 கீர்த்தனைக் கவிஞர்கள்
1.4.3 கிறித்தவக் கீர்த்தனைகளின் பாடுபொருள்
1.5 கிறித்தவ வழிபாட்டுப் பாடல்கள் – II
1.5.1 மெல்லிசைப் பாடல்களின் தோற்றம்
1.5.2 மெல்லிசைப் பாடல்களின் உள்ளடக்கம்
1.5.3 நாட்டுப்புறப் பாடல்கள்
1.6 தொகுப்புரை
தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# 1.0 பாட முன்னுரை

தமிழ்க் கவிதைக்கு நெடிய வரலாறு உண்டு. பல்வேறு சமயங்களைச் சேர்ந்த கவிஞர்கள் காலந்தோறும் தமிழ்க் கவிதைக்கு வளம் சேர்த்துள்ளனர். இந்த வகையில் கிறித்தவக் காப்பியங்களும், சிற்றிலக்கியங்களும் தமிழ்க் கவிதைக்கு வளம் சேர்த்துள்ளன. இது போன்றே இருபதாம் நூற்றாண்டுக் கிறித்தவக் கவிதைகளும் தமிழ்க் கவிதைக்குச் சிறப்புச் சேர்க்கின்றன. கிறித்தவச் சிந்தனைகளைத் தழுவிய இக்காலக் கவிதைகள் இந்தப் பாடத்தில் அறிமுகப்படுத்தப்படுகின்றன. மேலும், கிறித்தவ வழிபாடுகளில் ஆயிரக்கணக்கான பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. அவற்றைப் பற்றியும் இந்தப் பாடத்தில் கூறப்படுகிறது.

# 1.1 கிறித்தவக் கவிதைகள் - I (மரபுக் கவிதை)

கிறித்தவ நெறிக் கவிதைகள் பக்தி உணர்வையும் சமுதாய உணர்வையும் புலப்படுத்துகின்றன. கிறித்தவக் கவிதைகள் தமிழைப் போற்றுவன; தமிழ்ப் பக்தி இலக்கிய மரபைத் தழுவி அமைந்துள்ளன; இயேசு பெருமானின் சிறப்பைப் பாடுவன; விவிலியத்தின் சாரமாக அமைந்துள்ளன. கிறித்தவக் கவிதைகள் பல்வகை யாப்பு வடிவங்களில் அமைந்துள்ளன. பலவகையான உத்திகளும் கற்பனை நயங்களும் இக்கவிதைகளில் வெளிப்படுகின்றன.

திட்டூர் தேசிகர், ஜே.எஸ்.ஆழ்வார் பிள்ளை, மு.நல்லசாமி பண்டிதர், அந்தோணிமுத்துப் பிள்ளை, வீ.ப.கா.சுந்தரம், பொன்னு. ஆ.சத்திய சாட்சி. பவுல் இராமகிருட்டினர், சி.தேவராசன், ச.மரியதாஸ், மோசசு மைக்கேல் பாரடே, பொன், சூசை மாணிக்கம் முதலியோர் குறிப்பிடத்தக்க கிறித்தவக் கவிதைப் படைப்புகளை ஆக்கியுள்ளனர்.

## 1.1.1 பக்தி வெளிப்பாடு

கடவுளைப் போற்றுவதும், தம் குறைகளுக்காக வருந்துவதும், இறை அருளுக்காக ஏங்குவதும் பக்திப் பாடல்களின் பண்புகளாகும். எத்தகைய துன்பங்கள் வந்தாலும் கடவுளை உறுதியாகப் பற்றிக் கொள்ளும் பக்தி வெளிப்பாட்டையும் கிறித்தவக் கவிதைகளில் காண முடிகிறது.

• தருவாய் மோட்ச வாழ்வு

அருட்கடலாகிய இயேசுவிடம், நிலையான மோட்ச வாழ்வை அருள வேண்டும் எனக் கவிஞர் ஆழ்வார் பிள்ளை வேண்டுகிறார். பக்தி இலக்கிய மரபைத் தழுவி, கடவுளின் திருவடிகளைத் தன் தலை மீது சுமந்து, இரு கை கூப்பித் தொழுகிறார் கவிஞர்.

இந்நேரம் வரைக்கும் என் உயிர்காத்த

அருட்கடலே!, இருகை கூப்பி

இந்நேரம் உனைத் தொழுதேன் இனி மேலும்

தொழுவேன்; உன்இருதாள் தூக்கிச்

சென்னிமிசை யிடுகிறேன்: திருமுகத்தோடு

எனது முகம் சேர்த்தேன்: உன்னை

முன்னியே உலவுகின்றேன்: தவறாமல்

அளித்தருள்வாய் மோட்ச வாழ்வே!

(கிறிஸ்தவ அருட்பாக்கள் – பக்:5)

(சென்னி = தலை, முன்னி = நினைத்து)

• இதயத்தில் புகுந்த விந்தை

தம்முடைய இதயமாகிய மனையில் குடியிருக்கும் இயேசுவை வியந்து பாடுகிறார் கவிஞர் மோசசு மைக்கேல் பாரடே. இயேசுவின் வாழ்வு வியக்கத்தக்கது; அவர் செய்த அற்புதங்கள் எண்ணற்றவை. ஆயினும் அற்பனாகிய தம் இதயத்தில் வந்து அவர் குடிகொண்டிருப்பது. கவிஞருக்கு விந்தையாகத் தோன்றுகிறது. இதனை நயமாகப் புலப்படுத்துகிறார் கவிஞர்.

கன்னியின் உதரத்தில் கருவாக நின்றதும்

கட்டாயம் விந்தை இல்லை

'கானா' எனும் ஊரில் தண்ணீரை இரசமாகத்

தந்ததும் விந்தை இல்லை

கண்ணினை – காலினை – கையினை இழந்தோரைக்

கைதொட்டுச் சுகமளித்துக்

கனிவோடு அனுப்பிய கருணையின் கதை எல்லாம்

கடவுளே விந்தை இல்லை

. . . . . . . . . . . . . . . . . . . .

புன்மகன் புலைமகன் என்னுடை இதயத்தில்

புகுந்ததே விந்தை! விந்தை!

(சிலுவையினடியில் சிந்திய மலர்கள்- பக்:3-4)

(உதரம் = வயிறு, 'கானா' = இந்த ஊரில் நிகழ்ந்த திருமணத்தில்தான் இயேசு தண்ணீரைத் திராட்சை ரசமாக மாற்றினார், புன்மகன்= அற்பன், புலைமகன் = தாழ்ந்தவன்)

மேற்குறிப்பிட்டவாறு, இயேசு மீது கொண்ட பக்தியைத் தமிழ்க் கவிதை வாயிலாகச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றனர்.

### 1.1.2 விவிலியச் செய்திகள்

கிறித்தவக் கவிஞர்கள் விவிலியச் செய்திகளை இனிய பாக்களில் பாடியுள்ளனர். இயேசுவின் பிறப்புத் தொடங்கி மறு உயிர்ப்பு வரையிலான வரலாற்றைப் பாடல்களாகப் புனைந்துள்ளனர். இயேசுவோடு தொடர்புடைய இறை மாந்தர்களின் வரலாற்றையும் கிறித்தவக் கவிஞர்கள் பாடியுள்ளனர்.

• இயேசுவின் துன்பம்

கவிஞர் எம்.எஸ்.பொன்னையா தம் சிலுவைச் சிந்து என்னும் கவிதையில் இயேசுவின் துன்பங்களையும், அதனைக் காணும் பெண்களின் நிலையினையும் பாடுகிறார். வேதனையால் இயேசுவின் கால்கள் தள்ளாடுவதையும், இரத்தம் சிந்துவதையும், முகம் சோர்ந்து இருப்பதையும் காணும் பெண்களின் கண்ணீர் ஆறுபோல ஓடுவதாகக் கவிஞர் பாடுகிறார்.

வேதனையால் இயேசு கால்கரங்கள்தடு மாறுதே

குருதி மீறுதே முகம் சோருதே – ஐயோ

வீதியின் நின்றழு மாதரின் கண்ணீரும்

ஊறுதே – ஓடும் – ஆறதே!

(இறையியல் மலர் 3:9,10 : பக்.79)

(குருதி = இரத்தம்)

• குறள் பாக்களில் விவிலியச் செய்திகள்

பாவலர் வீ.ப.கா. சுந்தரம் அருள் குறள் என்றும் தலைப்பில் 1200 குறள் பாக்கள் பாடியுள்ளார். இவை கிறித்தவ நெறியை உணர்த்துபவை: விவிலிய வசனங்களைத் தழுவி அமைந்தவை. குறள் பாக்களுக்கு அடிப்படையான விவிலியப் பகுதியையும் அவர் ஆங்காங்கே சுட்டிக் காட்டியுள்ளார்.

• தேனும் மாமறையும்

வான் வாழ்வுக்கு நம்மைக் கூட்டிச் சேர்க்கும் திருமறை, தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிவான தேனைக் காட்டிலும் இனிமையானது என்று குறிப்பிடுகிறார் கவிஞர். இதனை,

தேன் கூட்டில் வார்க்கும் தெளிதேனில் மிக்கினிதாம்

வான் கூட்டு மாமறை வார்ப்பு

(சங்கீதம் 19:10)
(அருள் குறள் : பக்.4)

என்னும் பாடல் எடுத்துரைக்கிறது.

• <u>ஊசியும் நூலும்</u>

ஊசியை நூலானது பின் தொடர்ந்து செல்வது போல இயேசுவை நாம் பின்பற்றுவது பொருத்தமானது என்று குறிப்பிடுகிறார்.

ஊசியைப் பின்தொடரும் நூலாய் எக் காலமும்

யேசுவைப் பின் தொடர்தல் ஏற்பு

(விவிலியம், மத்தேயு 8:19)
(அருள் குறள் : பக்.50)

என்ற கவிதை இக்கருத்தை வெளிப்படுத்துகிறது.

• நிலைத்து நிற்கும் சொல்

கவிஞர் தே.மனுவேல் ‘திருமறைத் தேன்’ என்னும் தலைப்பில் இறைவாக்கினரான ஏசாயாவின் கருத்தைப் பின்வருமாறு குறள்பாக்களில் ஆக்கியுள்ளார்.

புல்லுலரும் பூவுதிரும்: பொற்பரனின் வாக்காம்

சொல்லதுவோ நிற்கும் நிலைத்து

(ஏசாயா 40:8)
(இறையியல் மலர் 1:5, பக்:5)

புல் உலர்ந்து போகும்; பூ உதிர்ந்து போகும்; பொற்பரனாகிய இயேசுவின் சொல் என்றும் நிலைத்து நிற்கும்.

### 1.1.3 சமுதாய மேம்பாடு

இயேசுவின் பேச்சும் செயலும் சமுதாய மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டவை. கிறித்தவத் தமிழ்க் கவிதைகள் சமுதாயச் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டி, அவற்றைக் களைய முற்படுகின்றன. இக்காலக் கவிதைகளின் பொதுப் பண்பாகவும் இதனைக் கருதலாம்.

• இயேசுவை எங்கே காணலாம்?

இறைவனின் தன்மைகளைக் குறிப்பிடும் முறையிலும் கிறித்தவக் கவிஞர்களின் சமுதாய நோக்கு வெளிப்படுகிறது. கவிஞர் சத்தியசாட்சி இயற்றியுள்ள 'தாமஸ் மலைக் குறவஞ்சி' என்னும் கவிதை உருவகமாக அமைந்த இக்காலக் காவியமாகும். உலா வரும் இயேசுவைக் கண்டு மேதினியாள் காதல் கொள்கிறாள்; பின்னர் அவரைக் காணாது தவிக்கிறாள். தன் தோழி அபரஞ்சி என்பவளைத் தூது அனுப்புகிறாள். தலைவனாகிய இயேசு எங்கே இருப்பார் எனத் தோழி வினவுகிறாள். அதற்குத் தலைவி கூறும் பதில் கவிஞரின் சமுதாய நோக்கைப் புலப்படுத்துகிறது.

• தலைவியின் கூற்று

'மாடி வீடுகளில் இயேசுவைக் காணமுடியாது; கொத்தடிமைகள் கூட்டத்திலும், குப்பை பொறுக்குவோர் கூட்டத்திலும் அவரைக் காணலாம்' என்கிறாள் தலைவி. கல்லுடைக்கும் பெண்மணிகளின் கண்ணீர்த் துளியிலும், குண்டடிபட்டுப் பாயும் குற்றமற்ற இரத்தத்திலும் அவர் இருப்பார் என மேலும் கூறுகிறாள் தலைவி. தலைவியின் கூற்றாக அமைந்த அந்தப் பாடல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

மாடிவீடுகளில் அவன்மலரடி வைப்பதில்லை

தேடித் துருவிப் பாரடி – ஏழைகள்

தெருவினில் திரிவானடி – தேவன்


திருமகன் அவன்தானடி

(தாமஸ் மலைக் குறவஞ்சி – பக்.41)

(மலரடி = மலர் போன்ற அடி, துருவி = ஊடுருவி)

இவ்வாறு, எங்குச் சென்றால் இயேசுவைப் பார்க்கலாம், அவர் எங்கெங்கு இருப்பார் என்பதைக் கூறுகிறார் கவிஞர். இதில் ஏழைகளின் தோழன் இயேசு என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

## 1.2 கிறித்தவக் கவிதைகள் - II (புதுக் கவிதை)



கிறித்தவக் கவிஞர்கள் பலர் கிறித்தவப் பொருள் பொதிந்த புதுக்கவிதைகளைப் படைத்துள்ளனர். மேலும் கிறித்தவக் கூறுகள் குறியீடுகளாகவும் (symbol) படிமங்களாகவும் (image) புதுக்கவிஞர்களால் எடுத்தாளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, சிலுவையைக் குறியீடாகப் பயன்படுத்தும் போக்கைத் தமிழ்ப் புதுக்கவிதைகளில் மிகுதியாகக் காண முடிகிறது.

• சிலுவையும் குறியீடும்

கிறித்தவப் பொருள் பொதிந்த புதுக்கவிதைகளில் இயேசுவின் வாழ்வும், சிலுவையின் மாண்பும் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளன. விவிலியச் செய்திகள் சிறப்பாக எடுத்தாளப்பட்டுள்ளன. இவற்றின் வாயிலாகச் சமுதாய அக்கறையும் சீர்திருத்த நோக்கும் வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

• புதுக்கவிதை நூல்கள்


பிரியகுமாரனின் ‘இவனைச் சிலுவையில் அறையுங்கள்’ ஜெசர் ஜெபநேசனின் சுதந்திரத்தின் பரப்பளவு ஆகிய கவிதை நூல்கள் குறிப்பிடத்தக்க கிறித்தவப் புதுக்கவிதைத் தொகுப்புகள் எனலாம். நிர்மலா சுரேஷின் இயேசு மாகாவியம் புதுக்கவிதையால் இயேசுவின் வரலாற்றைச் சிறப்பாக கூறுகிறது. தே.சுவாமிநாதனின் ‘மண்ணில் இருக்குது மோட்சம்’ ‘இந்தக் கற்கள் உரக்கப் பேசும்’ ‘ஒரு சிங்கம் கர்ச்சிக்கிறது’ போன்ற படைப்புகள் புதுக்கவிதை நடையில் விவிலியச் செய்திகளைக் கூறுகின்றன. கவிஞர் தயா, வலம்புரி ஜான், மதுரை புனிதன்,

மு.அ.எழிலன், குரூஸ், பாரதி கண்ணம்மா, மோகனப் பிரியன், ஆத்தூர் சாதனா, பிளாரான்ஸ் போன்றோர் கிறித்தவப் புதுக்கவிதை படைப்பாளர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

## 1.2.1 இயேசுவின் வாழ்வு

இயேசுவின் பிறப்பும், வாழ்வும், மரணப்பாடுகளும், மறு உயிர்ப்பும் தமிழ்ப் புதுக்கவிதைகளில் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளன. இயேசு கையாண்ட உவமைக் கதைகள், நிகழ்த்திய அருட் செயல்கள், உணர்த்திய அறவுரைகள் ஆகியனவும் புதுக்கவிதைகளில் சிறப்பாக எடுத்தாளப்பட்டுள்ளன.

• இயேசுவின் பிறப்பு



இயேசுவின் பிறப்புக் காட்சியைக் கவிஞர் நிர்மலா சுரேஷ் பின்வருமாறு விவரிக்கிறார். குழந்தை இயேசுவுக்காக வைக்கோலைப் பரப்புகிறார் மரியாள்; மேற்புறத்தில் கூடு கட்டியிருந்த சிட்டுக் குருவிகளும் சில சருகுகளைச் சிந்துகின்றன.

அந்த நடு நிசியின்

அடுத்த நொடியில்

புல் படுக்கையில்

பூமியின் அச்சு -

தேவ சாசனத்தின்

மனித மொழிபெயர்ப்பு -

நிலவிளக்கு பெற்றெடுத்த

நிரந்தர மின்னல்

(இயேசு மாகாவியம் : பக். 33-34)

உலகம் முழுவதையும் இயக்குவதற்கு அடிப்படையாயுள்ள அச்சாகிய இயேசு தோன்றினார். இறைவனின் பிரதிநிதியாக மனித குலத்தில் தேவ கட்டளையை மனித மொழியில் கூற வந்தார் இயேசு. உலகம் எப்போதும் ஒளிபெற்றுத் திகழ, பெற்றெடுத்த நிலையான மின்னல் போன்ற இயேசு பிறந்தார் என்று மேற்குறிப்பிட்ட பாடலுக்குப் பொருள் கூறலாம். மேலும் மின்னல் தோன்றி மறைவது. ஆனால், இயேசு மனித குல வாழ்விற்கு நிலையான ஒளி தருபவர். எனவே, 'நிரந்தர மின்னல்' என்று சுட்டுகிறார் கவிஞர். இயேசுவின் பிறப்பின் சிறப்பினை வெளிப்படுத்துவதற்குக் கவிஞர் எடுத்துக் காட்டும் படிமங்கள் மிகவும் சிறப்பாக உள்ளன.

• இயேசுவின் இரக்கம்

ஹைகூ வடிவில் கவிஞர் பிரியகுமாரன் எழுதியுள்ள கவிதை நம் நெஞ்சை உருக்குவதாக அமைந்துள்ளது. இயேசுவின் கைகளில் ஆணி அடிக்கப்படுகிறது. அடிக்கிறவன் ஆவேசமாக அடிக்கிறான். அப்பொழுது ஆணி அடிப்பவனைப் பார்த்து இயேசு கூறுவதாக அமைந்த கவிதை இது.

ஆணி அறைபவனே

அடி மெதுவாக

உன் விரல் மீது

சுத்தியல் விழுந்து விடப் போகிறது!

(இவனைச் சிலுவையில் அறையுங்கள் : பக்.38)

சித்திரவதைக்குள் அகப்பட்டுள்ள இயேசுவின் கால்களிலும் கூர்மையான ஆணிகள் வேகமாக அடிக்கப்படுகின்றன. அதனால் அவரது உடல் மிகவும் துன்புறுகிறது. இருப்பினும், அத்துன்பங்களைப் பொறுத்துக்கொண்ட இயேசு, பிறருக்கு வரும் துன்பத்திற்கும் இரங்கக் கூடியவர் என்பதனை, 'அடி மெதுவாக; சுத்தியல் உன் விரல் மீது விழுந்து விடப் போகிறது; விழுந்தால் துன்பம் தரும். எனவே மெதுவாக அறை' என்று கூறுவதாக, பாடுகின்றார் கவிஞர்.

தன்னைத் துன்புறுத்துகிறவர்கள் மீதும் இரக்கம் காட்டுபவர் இயேசு என்பது இக்கவிதையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

### 1.2.2 சிலுவையின் மேன்மை

சிலுவை அன்பின் அடையாளம்; தியாகத்தின் குறியீடு; சகிப்பின் உச்சக் கட்டம், மரணப்பாடுகளின் படுக்கை; மானுட மீட்பின் தொடக்கம் என, புதுக்கவிதைகளில் சிலுவையின் மேன்மை பலவாறாகச் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளது.

'சிலுவை – அது, தன்னை அறுத்தவனுக்கே பால் சுரக்கும் அற்புத மரம்; அதற்கு நாம் உரமாக வேண்டும்' என்கிறார் கவிஞர் மோகனப் பிரியன், மேலும் அவர்,

சிலுவை தன் மேல்

தங்கம் பூசப்படுவதை

தாங்கிக் கொள்வதில்லை

ஆணிகளால் கோர்க்கப்படுவதையே

விரும்புகிறது

(தரு : இளவேனில் **1996:**பக்**-11)**

என்று சிலுவையின் பண்பு குறித்துப் பாடியுள்ளார்.

• சிலுவை சுமக்கும் இயேசு

'வெள்ளியிலும் தங்கத்திலும் உருவாகுவதில்லை சிலுவைகள்' எனக் கூறும் கவிஞர் நிர்மலா சுரேஷ், இயேசு சிலுவை சுமக்கும் காட்சியைப் பார்த்துப் பின்வருமாறு வினா எழுப்புகிறார்.

விழுப்புண் பட்ட வீரன்

தன் நடு கல்லைத் தானே

சுமக்கிறானோ**?**

(இயேசு மாகாவியம் : பக் **601)**

(விழுப்புண் = போரில் பகைவரை எதிர்கொண்டு மார்பில் பெற்ற புண், நடுகல் = போரில் மாய்ந்த வீரன் நினைவாக நடும் கல்)

தமிழர் பண்பாட்டில், போரில் மார்பிலே புண்பட்டு வீரமரணம் அடையும் வீரர்களுக்கு அவர்கள் இறந்த பின்னர், நடுகல் நடுவது மரபு. அதில், இறந்த வீரனுக்குப் பிறரே நடுகல் நடுவர். இங்கு, இப்பாடலில், பிறரின் பாவங்களைச் சுமக்கிற இயேசு, பிறர் சுமக்க வேண்டிய கல்லைத் தானே சுமப்பதாகக் கவிஞர் எடுத்துரைக்கிறார்.

### **1.2.3** சமுதாயச் சீர்திருத்தம்

புதுக்கவிதைகள் சமகால நோக்கு கொண்டவை; சமுதாய அக்கறை கொண்டவை; சமுதாயச் சீர்கேடுகளை இடித்துரைக்கத் தயங்காதவை.

• ஐந்து அப்பமும் ஐயாயிரம் பேரும்

கிறித்தவக் கவிஞர்களும் கிறித்தவத் திருச்சபைகளில் காணப்படுகின்ற சீர்கேடுகளையும் கடிந்துரைக்கத் தவறவில்லை.

ஐந்து அப்பங்களை

ஐயாயிரம் பேருக்கு

பகிர்ந்தளித்த வள்ளலே

இங்கே!

ஐயாயிரம் பேரின் அப்பங்களை

ஐந்து பேர்

அபகரிப்பது உன்

கண்களுக்குத் தெரிகிறதா?

எனக் கவிஞர் பிரிய குமாரன் எழுப்பும் கேள்வி சமுதாயச் சுரண்டலை அம்பலப்படுத்துகிறது.

## 1.3 கிறித்தவக் கவிதைகள் -III (பிற சமயக் கவிஞர்கள்)

இயேசு பெருமானின் வாழ்வும் அறநெறிகளும் எவரையும் எளிதில் ஈர்ப்பவை. பிற சமயங்களைச் சேர்ந்த கவிஞர்களும் இயேசு பெருமான் மீது தாம் கொண்ட ஈடுபாட்டினை வெளிப்படுத்தியுள்ளனர். பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன் உள்ளிட்ட பல இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களும் இயேசுவைப் பற்றிப் பாடியுள்ளனர். 'தோத்திரப் பாடல்கள்' என்னும் பகுதியில் 'யேசு கிறிஸ்து' என்னும் தலைப்பில், பாரதியார் பாடியுள்ளார். 'யேசு மொழிந்த தெள்ளமுது' என்னும் தலைப்பில் இயேசுவின் சிறப்பினைப் பாரதிதாசன் பாடியுள்ளார். எளிமையே இறைவன் விரும்பும் கோலம் என்ற கருத்தை வலியுறுத்தி 'ஏசு நாதர் ஏன் வரவில்லை' என்னும் தலைப்பிலும் பாரதிதாசன் பாடியுள்ளார்.

தமிழ்த் தென்றல் திரு.வி.கலியாண சுந்தரனார் 'கிறிஸ்துவின் அருள் வேட்டல்', 'கிறிஸ்து மொழிக் குறள்' ஆகிய நூல்களைப் படைத்துள்ளார். சுத்தானந்த பாரதியார் 'ஏசுநாதர் சரிதை'யை இயற்றியுள்ளார். மேலும் தாம் இயற்றிய பாரத சக்தி மகா காவியத்தில் 'கிறிஸ்து ஜோதி படலம்', 'பைபிள் படலம்' ஆகிய படலங்களைப் படைத்துள்ளார். ச.து.சு.யோகியார் 'மேரி மக்தலேனா' என்னும் காவியத்தைப் புனைந்துள்ளார். கண்ணதாசன் 'இயேசு காவியம்' பாடியுள்ளார். நாமக்கல் கவிஞர் 'பெரியோர் புகழ் மலரில்' இயேசுவைப் போற்றிப் பாடியுள்ளார். 'சிற்பி' பாலசுப்பிரமணியன் 'சிலுவை தவயோகி' என்னும் தலைப்பில் நெடிய புதுக்கவிதை ஒன்றினை எழுதியுள்ளார். இங்கு, இப்பாடத்தில் ஒரு சில கவிஞர்களின் படைப்புகள் மட்டும் விளக்கப்படுகின்றன.

### 1.3.1 'கிறிஸ்துவின் அருள் வேட்டல்'

திரு.வி.கலியாண சுந்தரனார் சமரச சன்மார்க்க நெறியைப் போற்றியவர். கிறிஸ்து பெருமான் மீது ஈடுபாடு கொண்டவர். மலையின் மீது இயேசு மக்களுக்கு ஆற்றிய அறிவுரைகளும், இயேசுவின் அன்பு வாழ்வும் திரு. வி.க. அவர்களைப் பெரிதும் கவர்ந்தன.

• தன்னுள் பிறந்த இயேசு

மனித இருள் போக்க வந்த இயேசுவை, பிழை பொறுக்கும் தெய்வம் எனத் திரு.வி.கலியாண சுந்தரனார் குறிப்பிடுகிறார். இயேசு தன் உள்ளத்தில் பிறந்ததால் தான் அவருக்குள் இறந்ததாகப் பாடுகிறார் கவிஞர். (தான் இறத்தல் என்பது, தான் என்னும் ஆணவம் இழந்ததைக் குறிக்கும்.) கவிஞரின் பாவ வாழ்க்கை தொலைந்து புது வாழ்வு தொடங்குவதை அவர் கீழ்க்குறிப்பிடும் வகையில் பாடியுள்ளார்.

என்னுள்ளே நீ பிறந்தாய் ஏசு பெருமானே

உன்னுள்ளே யான்இறந்தேன் உற்று

(கிறிஸ்துவின் அருள் வேட்டல்: பக்:8)

தன்னை இயேசுவிடம் ஒப்புவித்தமையால், இயேசுவின் அருள் உள்ளம் தன்னிடம் தோன்றியதாகக் கலியாண சுந்தரனார் நயமாகக் குறிப்பிடுகின்றார்.

## 1.3.2 மேரி மக்தலேனா

ச.து.சு. யோகியார் எழுதிய மேரி மக்தலேனா காவியம் 'தமிழ்க் குமரி' என்னும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. இது இரண்டு படலங்களாக அமைந்துள்ளது. இதில் 112 பாடல்கள் உள்ளன.

இக்காவியத்தின் நாயகி பேரழகி; உடலை விற்று வாழ்பவள்; ஆன்மீக அழகு மிக்க இயேசுவின் வரவு கண்டு, தன் பாவ வழியை விட்டு விலகி, புதிய வாழ்வினைப் பெறுகிறாள்.

• மக்தலேனாவின் அழகு

இக்காவியத்தில், மக்தலேனாவின் அழகு பற்றிய பாடல்கள் சந்தப்பாக்களால் ஆக்கப்பட்டுள்ளன. அவள் மன்மதன் தங்கும் அரண்மனை போன்ற அழகுடையவள் என்கிறார் கவிஞர். அவள் தளிர் மேனியையும், காந்தள் மலர் போன்ற விரல்களையும், ஒளி பொருந்திய கூந்தலினையும் கவிஞர் பின்வருவாறு குறிப்பிடுகிறார்.

தழல் பாய்ந்திடும் மின்னல் சுவை

செம் பொன் தளிர் மேனி

கழல் பாய்ந்திடு காந்தள் சிறு

விரலின் கதிர் விரியும்

குழல் பாய்ந்தொளி உண்ணும், இரு

கண் பாய்ந்திருள் கொல்லும்

நிழல் பாய்ந்தவள் நேர்காண ஓர்

சுவரேறியே நிலவும்

(காட்சிப் படலம் பாடல் எண்-19)

(தழல் = தீ, கழல் = பொன் வண்டு, காந்தள் = சிவந்த மலர், குழல் = கூந்தல்)

அக இலக்கியம் பாடும் தமிழ்க் கவிஞர்களின் மரபைப் பின்பற்றி விவிலியத்தில் இடம் பெற்றுள்ள மேரிமக்தலேனாவின் அழகைக் கவிஞர் யோகியார் சிறப்பாகப் பாடியுள்ளார்.

### 1.3.3 சிலுவை தவயோகி

‘சிலுவை தவயோகி’ என்னும் தலைப்பில் அமைந்த நெடிய புதுக்கவிதை சிற்பியின் ‘ஒளிப்பறவை’ தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

• இயேசுவின் மரணப்பாடு

‘சிலுவை தவயோகி’ கவிதையில், மாடு கட்டும் கொட்டில் இயேசு பெருமானுக்குப் பூந்தொட்டிலாக அமைந்ததையும், ‘குன்றி மணி இல்லா குடிசைப் பிறப்பாளியாக’ அவர் பிறந்ததையும் நயமாகப் பாடுகிறார் கவிஞர். இயேசுவின் மரணப்பாடுகளை விவரிக்கும் பகுதியில்,

ஒன்னார் இரும்பாணி

ஓங்கி அடிக்கையிலே

பொன்னார் திருமேனி

பூப்பூவாய் சிதைகிறது

சிலுவையிலே ‘ஐயோ’

சேர்த்து ஆணி அறைகையிலே

எலும்பு துகளாகி

இளம் ரத்தம் கசிகிறது

கிறிஸ்துவுக்கு முன், பின்னாய்க்

காலம் கிழிகிறது

அருள் வதனம் மன்னிப்பின்

அழகில் கனிகிறது

(ஒன்னார் = பகைவர், பொன்னார் = பொன் மேல் பொலிவுடைய, வதனம் =

முகம், துகள் = தூள்)

இங்ஙனம் கிறித்தவச் சமயம் சாராத கவிஞர் பலரும் இயேசுவைப் பலவாறாகப் புகழ்ந்தும் வியந்தும் பாடியுள்ளனர்.

## தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 1.4 கிறித்தவ வழிபாட்டுப் பாடல்கள் -I (கீர்த்தனைகள்)

கிறித்தவ வழிபாடுகளில் பாடல்களுக்குச் சிறப்பிடம் உண்டு. ஆலய வழிபாடுகளில் மட்டுமின்றி இல்ல நிகழ்ச்சிகளிலும் பாடல்கள் பாடப்படுகின்றன. விவிலியத்தில் உள்ள தாவீதின் 'சங்கீதம்' (psalms) பாடல்களாக அமைந்தவை. 'கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள். அவருடைய துதியைப் பாடுங்கள்' என்று விவிலியம் கூறுகிறது. கடவுளின் அன்பையும் அருளையும் எண்ணி,

பாடித் துதி மனமே; பரனைக் கொண்
டாடித் துதி மனமே

என வேதநாயக சாஸ்திரியார் பாடியுள்ளார். இப்பாடல்கள் தனியாகவும் குழுவாகவும் பாடுவதற்கு ஏற்றவை.

### 1.4.1 தோற்றமும் வளர்ச்சியும்

தொடக்கத்தில், செர்மன், ஆங்கிலம் முதலிய மொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட துதிப்பாடல்கள் தமிழ்த் திருச்சபைகளில் பாடப்பட்டு வந்தன. இவை மேனாட்டு இராகங்களில் அமைந்தவை. இத்தகைய பாடல்கள் ஞானப்பாடல்கள் (Hymns) என்ற பெயரில் வழங்கப்படுகின்றன. இவை தமிழிலுள்ள தேவாரப் பாடல்களை ஒத்தவையாகும். இவை ஆழ்ந்த கருத்து வளம் கொண்டவை. தமிழ் யாப்பு அமைப்பிலிருந்து மாறுபட்டவை. செர்மன் பாடல்களில் ஓரசைச் சொற்கள் மிகுதியாக உள்ளன, இவை குறைந்த அடிவரையறை கொண்டவை. இவை இன்றளவும் தமிழ்க் கிறித்தவர்களால் பாடப்பட்டு வருகின்றன. இப்பாடல்களைப் பாடப் பெரும்பாலும் தமிழ்த் திருச்சபைகளில் 'ஆர்கன்' என்னும் இசைக் கருவியும் பயிற்சி பெற்ற பாடகர் குழுவும் இருப்பதைக் காணலாம்.

• கிறித்தவக் கீர்த்தனைகள்

இந்திய இசை மரபில் இயேசுவைப் போற்றிப் பாட வேண்டும் என்ற எண்ணம் எழுந்ததன் விளைவாகத் தமிழில் கிறித்தவக் கீர்த்தனைகள் தோன்றின. 'கீர்த்தி' என்றால் 'புகழ்' என்பது பொருள். இறைவனின் அருள், ஆற்றல், பெருமை முதலியவற்றைப் புகழும் வண்ணம் கீர்த்தனைகள் அமையும். கீர்த்தனைகளில் பல்லவி, அனு பல்லவி, சரணங்கள், தொகையறா முதலிய கூறுகள் இடம் பெறும். கிறித்தவ வழிபாட்டில் பயன்படுத்தப்படும் கீர்த்தனைகள் 'கிறித்தவக் கீர்த்தனைகள்' (Christian Lyrics) என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளன.

• கீர்த்தனைகளின் தன்மைகள்

கீர்த்தனைகள் இனிய பண்களில், இலக்கணப்படி அமைந்தவை. சில கிறித்தவக் கீர்த்தனைகள் தெலுங்குக் கீர்த்தனைகளைத் தழுவி அமைந்தவை. சில பாடல்கள் திருப்புகழ் வண்ணங்களில் அமைக்கப்பட்டவை. சில பாடல்கள் நாடகக் கீர்த்தனைகளைத் தழுவி அமைந்துள்ளன. ஒவ்வொரு கீர்த்தனைக்கும் இராகம், தாளம்

ஆகியன கொடுக்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று நூற்றாண்டுகளாகப் பாடப்பட்டு வரும் கீர்த்தனைகளும் உண்டு. இன்றளவும் வழிபாடுகளில் கீர்த்தனைகளுக்குக் குறிப்பிடத்தக்க இடம் உண்டு. இவை மக்கள் அனைவரும் ஆலயங்களில் ஒன்று கூடிப் பாடுவதற்கும் ஏற்றவை.

• பிற சமயப் பாடல்கள்

திருப்பத்தூரில் கிறிஸ்து குல ஆசிரமத்தை நிறுவிய டாக்டர் சவரிராயன் ஏசுதாசன் என்பவர் தம் ஆசிரம வழிபாட்டு நூலில் திரு.வி.கலியான சுந்தரனார், இராமலிங்க அடிகளார், தாயுமானவர், பட்டினத்தார் ஆகியோர் பாடல்களையும் சேர்த்துள்ளார்.

**1.4.2** கீர்த்தனைக் கவிஞர்கள்

கிறித்தவக் கீர்த்தனைக் கவிஞர்களுள் வேதநாயகம் சாஸ்திரியார். ஜி.எஸ்.வேதநாயகர், வே.மாசிலாமணி, ஜான் பால்மர், மரியான் உபதேசியார், ஞா.சாமுவேல், சவரிராயன் ஏசுதாசன், சந்தியாகு, யோசேப்பு, மு.ஆபிரகாம் பண்டிதர், வீரமாமுனிவர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள், அண்மைக் காலத்தில் வெளி வந்துள்ள கீர்த்தனைத் தொகுப்புகளில் சத்தியசாட்சி, வீ.ப.கா.சுந்தரம், தயானந்தன் பிரான்சிஸ், தாமஸ் தங்கராஜ் போன்றோர் பாடல்களும் இடம் பெற்றுள்ளன. கீர்த்தனைக் கவிஞர்களுள் ஒரு சிலர் குறித்து விரிவாகக் காண்போம்.

• வேதநாயகம் சாஸ்திரியார் (1774-1864)

இவர், தஞ்சைச் சரபோஜி மன்னரின் அவைக்களப் புலவராக விளங்கியவர், பெத்லகேம் குறவஞ்சி இவரது தலைசிறந்த படைப்பாகும். ஞான நொண்டி நாடகம், பராபரன் மாலை, பேரின்பக் காதல் முதலிய ஐம்பதிற்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். இவர் எழுதிய ஐம்பதிற்கும் மேற்பட்ட பாடல்கள் கிறித்தவக் கீர்த்தனைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. ‘ஆகமங்கள் புகழ் வேதா’ ‘தேவ தேவனே ஏகோவா’ ‘பாடித் துதி மனமே’ ‘ஏசுவையே துதி செய்’ ‘வானம் பூமியோ’ எனத்தொடங்கும் பாடல்களையும் சாஸ்திரியார் இயற்றியுள்ளார்.

• ஜான் பால்மர் (1812-1883)

இவர் ‘கிறிஸ்தாயணம்’ என்னும் புகழ் பெற்ற காவியத்தை இயற்றியவர். தமிழிலும் விவிலியத்திலும் புலமை மிக்கவர். விவிலியச் செய்திகளைத் தம் கீர்த்தனைகளில் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்.

இயேசுவின் திருப்பெயர் தேனின் இனிமையை விட சுவையானது; எனவே மனம் அதைத் தேடிச் செல்ல வேண்டும் என்று பாடுகிறார்.

தேன் இனிமையினும் ஏசுவின் நாமம் திவ்விய மதுரமாமே

அதைத் தேடியே நாடி ஓடியே வருவாய், தினமும் நீ

மனமே!

(கீர்த்தனை எண் : 105)

எத்தகைய துன்பம் வந்தாலும் சோர்ந்து போகாமல் இயேசுவை ஆதாரமாகக் கொள் எனத் தம் மனதிற்குக் கூறுகிறார் கவிஞர். அந்தப் பாடல் பின்வருமாறு தொடங்குகிறது.

வாரா வினை வந்தாலும் சோராதே! மனமே
வல்ல கிறிஸ்துனக்கு நல்ல தாரகமே
(கீர்த்தனை, எண்:203)

இயேசு, நமக்கு ஆதாரமாக விளங்குவதால், எத்தகைய துன்பம் வந்தாலும் மனமே சோர்ந்து போகாதே என்று மனத்திடம் வேண்டுகிறார் கவிஞர்.

• மரியான் உபதேசியார்

வேதநாயகம் சாஸ்திரியாருக்கும், ஜான் பால்மருக்கும் அடுத்தபடியாக, மரியான் உபதேசியார் பாடல்களே அதிக அளவில் கிறித்தவக் கீர்த்தனைகளில் சேர்க்கப்பட்டுள்ளன. சாதி வேறுபாடுகளை இவர் கண்டித்தார். இவரது பாடல்கள் உணர்ச்சி ஊட்டுவன. சிறந்த சொல்லடுக்கும் கருத்தோட்டமும் கொண்டவை. ‘தோத்திரம் புகழ் கீர்த்தனம்’ ‘நம்பினேன் உனதடிமை நானய்யா’ எனத் தொடங்கும் பாடல்களை இயற்றிப் புகழ் பெற்றார்.

### 1.4.3 கிறித்தவக் கீர்த்தனைகளின் பாடுபொருள்

பெரும்பான்மையான கீர்த்தனைகள் இயேசுவின் புகழ் பாடுவன; பக்தனின் உள்ளத்து உணர்ச்சிகளைப் புலப்படுத்துவன. சில பாடல்கள் இயேசுவின் அன்பு வாழ்வை எடுத்துரைப்பவை; சில பாடல்கள் குறிப்பிட்ட நிகழ்ச்சி அல்லது திருநாட்களில் பாடுவதற்குப் பொருத்தமாக எழுதப்பட்டவை. சில பாடல்கள் காலை, மாலை வேளைகளில் பாடுவதற்கு உரியவை.

• இயேசு பிறப்புப் பாடல்

‘பெத்தலையில் பிறந்தவரைப் போற்றி துதி மனமே’, ‘வானம் பூமியோ! பராபரன் மானிடன் ஆனாரோ’ ‘பெத்தலகேம் ஊரோரம் சத்திரத்தை நாடி’ எனத் தொடங்கும் பாடல்கள் கிறிஸ்மஸ் நாட்களில் பாடுவதற்குப் பொருத்தமானவை. இயேசுவின் பிறப்பைப் பாடுபவர்கள் இப்பாடலை மிகுதியும் பயன்படுத்துவார்கள்.

• புனித வெள்ளிப்பாடல்

இது போன்றே, 'எங்கே சுமந்து போகிறீர்', 'குருசினில் தொங்கியே குருதியும் வடிய' எனத் தொடங்கும் பாடல்கள் புனித வெள்ளியன்று பாடுவதற்கு மிகவும் பொருத்தமானவை.

• வாழ்க்கை நிகழ்ச்சிப் பாடல்கள்

அன்றாட வாழ்க்கையில் இடம் பெறும் பொழுதுகள், பெயர் சூட்டல் (Christening), திருமணம், மரணம் முதலிய நிகழ்ச்சிகளில் பாடுவதற்கெனச் சிறப்புப் பாடல்களும் பல உள்ளன. எடுத்துக்காட்டாக, காலையில் எழுந்தவுடன் பாடுவதற்காக,

கதிரவன் எழுகின்ற காலையில் இறைவனைத்

துதி செய்ய மனமே – எழுந்திராய்

**(கீர்த்தனை எண்-279)**

என்ற பாடல் எழுதப்பட்டுள்ளது. அதைப் போலவே, இரவில், இறைவன் தனக்குப் பாதுகாவலாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன்,

வினை சூழாது இந்த இரவினில் காத்து ஆள்!
(கீர்த்தனை எண் – 286)

கருணாகர தேவா, இரங்கி இந்தக் கங்குலில் எனக் கா வா!

(கீர்த்தனை எண் – 285)

(கங்குல் = இரவு)

என இறைவனை அழைக்கும் பாடல் மாலை நேரத்தில் பாடுவதற்குரியது.

இவ்வாறு கீர்த்தனைகள் பல சூழலுக்கும் தேவைக்கும் பொருந்தும் வகையில் – பயன்படும் வகையில் கிறித்தவ வழிபாட்டுப் பாடல்கள் உள்ளன.

# 1.5 கிறித்தவ வழிபாட்டுப் பாடல்கள் - II

(மெல்லிசைப் பாடல்களும் நாட்டுப்புறப் பாடல்களும்)
கிறித்தவ வழிபாடுகளில் பாமாலைகளும் (Hymns) கீர்த்தனைகளும் (Lyrics) பயன்படுத்தப்படுவதோடு, மெல்லிசைப் பாடல்களும் பாடப்படுகின்றன. இவற்றைப் 'புத்தெழுச்சிப் பாடல்கள்' என்ற பெயரில் கிறித்தவர்கள் அழைக்கின்றனர். இவை கிறித்தவ பக்தி எழுச்சிக்குப் புத்துயிர் ஊட்டி வருகின்றன. இசைப் பயிற்சி பெறாதவரும் இத்தகைய பாடல்களை எளிதாகப் பாட இயலும். நாட்டுப்புற மெட்டில் அமைந்த கிறித்தவக் கிராமியப் பாடல்களையும் கிறித்தவக் கவிஞர்கள் இயற்றியுள்ளனர்.

## 1.5.1 மெல்லிசைப் பாடல்களின் தோற்றம்

கிறித்தவ மெல்லிசைப் பாடல்கள் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாகக் கிறித்தவ வழிபாடுகளில் பாடப்பட்டு வருகின்றன. புத்தெழுச்சிப் பாடல்களை வழங்கியதில் 'இரட்சணிய சேனை' (Salvation Army) சபையினருக்கு குறிப்பிடத்தக்க பங்கு உண்டு. ஆங்கிலம் மற்றும் மலையாளப் பாடல்களின் மொழி பெயர்ப்புகளும் தமிழ்ப் புத்தெழுச்சிப் பாடல்களுக்கு வளம் சேர்த்துள்ளன. இன்று பலவகைப்பட்ட திருச்சபை பிரிவினரும் இப்பாடல்களை வழிபாட்டில் பயன்படுத்தும் போக்கு காணப்படுகிறது. கடந்த 50 ஆண்டுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தெழுச்சிப் பாடல்கள் தமிழில் எழுந்துள்ளன.

இப்பாடல்களில் காணப்படும் எளிமை, இசை, உணர்ச்சி, கருத்தாழம் ஆகியன யாவரையும் எளிதில் ஈர்ப்பவை. கிறித்தவ ஆன்மீக எழுச்சிக் கூட்டங்களில் இத்தகைய பாடல்களுக்குச் செல்வாக்கு மிகுதி. 'நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு' வெளியிட்டுள்ள 'செயல் வீரர் கீதங்கள்' மதுரையிலுள்ள 'தமிழ்நாடு இறையியல் கல்லூரி' வெளியிட்டுள்ள 'புத்துயிர்ப் பாடல்கள்' தந்தை பெர்க்கமான்சின் 'ஜெபத்தோட்ட ஜெப கீதங்கள்' ஆகியன குறிப்பிடத்தக்க தொகுப்புகளாகும். கிறித்தவ இலக்கியச் சங்கமும் புத்தெழுச்சிப் பாடல்களைக் கீர்த்தனைகளோடு சேர்த்து வெளியிட்டுள்ளது.

## 1.5.2 மெல்லிசைப் பாடல்களின் உள்ளடக்கம்

கிறித்தவ மெல்லிசைப் பாடல்களில் கடவுளைப் போற்றும் துதிப் பாடல்கள் உள்ளன. கடவுளின் அருளுக்காக நன்றி கூறும் பாடல்களும் உள்ளன. பாவ அறிக்கையாக அமைந்த பாடல்களும் உள்ளன. பல்வகைப்பட்ட வாழ்க்கைப் போராட்டங்களில் சிக்கித் தவிக்கும் மனிதனுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் அமைந்த பாடல்கள் அதிகமாக உள்ளன. மேலும் நற்செய்திப் பணிக்கு ஊக்கம் தரும் வகையில் அமைந்த பாடல்களும் உள்ளன.

• நன்றி செலுத்தல்

கடவுளுக்கு நன்றி கூறும் முறையில் அமைந்த பெர்க்மான்சின் பாடல்

பின்வருமாறு தொடங்குகிறது.

நன்றியால் துதிபாடு – நம்இயேசுவை

நாவாலே என்றும் பாடு

வல்லவர் நல்லவர் போதுமானவர்

வார்த்தையால் உண்மையுள்ளவர்

(ஜெபத்தோட்ட ஜெய கீதங்கள்:பாடல் எண்:16)

• ஆறுதல் மொழி

மனிதனுக்குப் பல வகையான வாழ்க்கைப் போராட்டங்கள் உண்டு. நோயுற்றவர்கள் உண்டு. கைவிடப்பட்டவர்கள் உண்டு. இதற்காகக் கண்ணீர் விடுபவர் உண்டு. இத்தகைய மக்களுக்குக் கடவுள் ஒருவரே ஆறுதல் அளிக்க இயலும் என்பதை எடுத்துரைக்கும் கிறித்தவ மெல்லிசைப் பாடல்கள் மிகுதியாக உள்ளன.

‘இயேசு அழைக்கிறார்’ எனத் தொடங்கும் பாடல் புகழ் பெற்ற பாடலாகும். இப்பாடலை இயற்றியவர் எப்.ஜே.செல்லத்துரை என்பவர். இயேசு, தம் கைகளை நீட்டி அழைக்கிறார்; அவர் கண்ணீரைத் துடைப்பார்; எத்தகைய துன்பங்கள் வந்தாலும் நம்மைக் காத்து ஆறுதல் அளிப்பார் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

இயேசு அழைக்கிறார்! இயேசு அழைக்கிறார்!
கார்மேகம் போன்ற கஷ்டங்கள் வந்தாலும்
கருத்துடன் உன்னைக் காத்திடவே – இயேசு
(101 பாடல் பிறந்த கதை: பாடல் எண்:74)

இவ்வாறு மெல்லிசைப் பாடல்களின் உள்ளடக்கம் அமைந்துள்ளது.

**1.5.3** நாட்டுப்புறப் பாடல்கள்

கிறித்தவக் கவிஞர்கள் நாட்டுப்புறப் பாடல் மெட்டுகளில் பாடல்கள் பலவற்றைப் புனைந்துள்ளனர். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில், இசை இனிமை கொண்ட சிந்துப் பாடல்களைக் கிறித்தவக் கவிஞர்கள் இயற்றியுள்ளனர். எண்பதுக்கும் மேற்பட்ட கிறித்தவ அம்மானைகளும், நாற்பதுக்கும் மேற்பட்ட கிறித்தவ கும்மிப்பாடல்களும் தமிழில் வெளிவந்துள்ளன. கிராமிய மணம் கொண்ட வில்லுப்பாட்டு, ஏற்றப்பாட்டு, கைச்சிலம்பு பாடல் முதலியவற்றையும் கிறித்தவக் கலைஞர்கள் படைத்துள்ளனர். இவை கிராமத் திருச்சபையினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணம் எழுதப்பட்டவை. இவை இனிய இசையுடன் எளிமையாக

அமைந்தவை. பேராசிரியர் தியோபிலஸ் அப்பாவு, மோகன்ராஜ் பீட்டர், பெருமாத்தூர் சீராளன், வெ.சாமிக்கண்ணு போன்றோர் இத்தகைய பாடல்களை எழுதியுள்ளனர்.

- அல்லேலூயா பாடல்

தியோபிலஸ் அப்பாவு ‘அல்லேலூயா’ எனத் தொடங்கும் பாடல் ஒன்றினை எழுதியுள்ளார். இப்பாடல், பல வகையான மேளத்தோடும், தாளத்தோடும், ஆட்டத்தோடும் கடவுளை வழிபட மக்களை அழைக்கிறது.

உருமி மேளம் முட்டித் தாளம்

பெரிய மேளம் உடுக்கை ஓலம்

பம்பை மத்தாளத்தோட போடுங்கையா சிங்கிதாளம்

கும்மியாட்டம் ஒயிலு ஆட்டம் வீர சிலம்பாட்டம்ஆடி

கும்மாளமா ஆராதிச்சி பண்ணுங்க ஆர்ப்பாட்டம்,

(புத்துயிர் பாடல்கள்: பாடல் எண்-11)

(உருமி, உடுக்கை, பம்பை = தோல் இசைக் கருவிகள், கும்மி, ஒயிலு, சிலம்பம் = நாட்டுப்புற ஆடல் வகைகள்)

என்னும் பாடல் மேற்குறிப்பிட்டவற்றிற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. ஆயினும், இத்தகைய பாடல்கள் அரிதாகவே வழிபாட்டில் பயன்படுத்தப்படுகின்றன.

## 1.6 தொகுப்புரை

கிறித்தவக் கவிதைகள் இயேசுவின் மேன்மையைப் புகழ்ந்து கூறுவனவாக உள்ளன. பிற சமயக் கவிஞர்களும் இயேசுவின் வாழ்வால் கவரப்பட்டுப் பாடல்களைப் படைத்துள்ளனர். கிறித்தவக் கவிதைகள் சமுதாயச் சீர்கேடுகளைக் கடிந்துரைக்கத் தவறவில்லை.

கிறித்தவ வழிபாட்டுப் பாடல்கள் தனி வகையாகக் கொள்ளத் தக்கவை. இவை கிறித்தவர்களின் அன்றாட வழிபாட்டில் சிறப்பிடம் பெறுகின்றன.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 2

## P20242. கிறித்தவ உரைநடைப் படைப்புகள்

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

இந்தப் பாடம் தமிழ் உரைநடை வளர்ச்சிக்குக் கிறித்தவர்கள் செய்துள்ள பணிகளை எடுத்துக் கூறுகிறது. மேலும், கிறித்தவப் படைப்பாளர்களின் புதினம், சிறுகதை, நாடகம் ஆகிய உரைநடைப் படைப்புகள் சிலவற்றை அறிமுகப்படுத்துகிறது.

### இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

இந்தப் பாடத்தின் வாயிலாகத் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு வழிவகுத்த முன்னோடிகள் பற்றி அறியலாம். தமிழ் விவிலிய மொழி பெயர்ப்புப் பணிகள் தமிழ் உரைநடை வளர்ச்சிக்குத் துணை புரிந்துள்ளதையும் அறியலாம். மேலும் கிறித்தவப் புதினம், சிறுகதை, நாடகம் ஆகிய படைப்புகளின் உள்ளடக்கம், தனித்தன்மைகள் ஆகியவற்றையும் அறிந்து கொள்ளலாம்.

# பாட அமைப்பு

2.0. பாட முன்னுரை
2.1. தமிழ் உரைநடை வளர்ச்சியும் கிறித்தவர்களும்
2.1.1 கிறித்தவ உரைநடை முன்னோடிகள்
2.1.2 விவிலிய மொழிபெயர்ப்புகள்
2.2. கிறித்தவப் புதினப் படைப்புகள்
2.2.1 பெண் மேம்பாடு
2.2.2 வர்க்கப் போராட்டம்
2.2.3 சாதிய ஏற்றத் தாழ்வு
2.2.4 மாறி வரும் சமுதாயப் போக்குகள்
தன்மதிப்பீடு : வினாக்கள்-I
2.3. கிறித்தவச் சிறுகதைப் படைப்புகள்
2.3.1 ஏழ்மை
2.3.2 சொல்லும் செயலும்
2.3.3 எளிமை
2.3.4 குழந்தைத் தொழிலாளர்கள்
2.4. கிறித்தவ நாடகப் படைப்புகள்
2.4.1 மனித உறவுகள்
2.5 தொகுப்புரை
தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# 2.0 பாட முன்னுரை

தமிழ் உரைநடை வளர்ச்சியில் கிறித்தவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. கிறித்தவர்கள் மேற்கொண்ட மொழிபெயர்ப்புப் பணி, அகராதிப் பணி, இலக்கணப்பணி, அச்சுப்பணி, இதழியல் பணி ஆகியன தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்தன. உரைநடை பரவுவதற்கும், உரைநடையில் படைப்பிலக்கியங்கள் தோன்றுவதற்கும் கிறித்தவர்கள் காரணமாக அமைந்தனர். புதினம், சிறுகதை, நாடகம், வாழ்க்கை வரலாறு முதலிய உரைநடை இலக்கிய வடிவங்களைக் கிறித்தவர்கள் கையாண்டுள்ளனர். இப்படைப்புகள் கிறித்தவக் கோட்பாடு, சமுதாய சீர்திருத்தம், தனிமனித அறங்கள் போன்றவற்றை உள்ளடக்கமாகக் கொண்டவை. இப்பாடத்தில் கிறித்தவர்கள் உரைநடை வளர்ச்சிக்குச் செய்துள்ள பங்களிப்புகளும், கிறித்தவர்கள் படைத்துள்ள புதினம், சிறுகதை, நாடகம் ஆகியவையும் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

## 2.1 தமிழ் உரைநடை வளர்ச்சியும் கிறித்தவர்களும்

கிறித்தவர்கள் வருகைக்கு முன்பே, தமிழில் உரைநடை இருந்தது. கல்வெட்டுகள், சாசனங்கள், பண்டை இலக்கிய – இலக்கணங்களுக்கு எழுதப்பட்ட உரைகள் போன்றவை உரைநடையில் அமைந்திருந்தன. ஆயினும், தற்கால உரைநடையின் (Modern Prose) தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஐரோப்பாவிலிருந்து வந்த கிறித்தவர்களும், இந்தியக் கிறித்தவர்களும் முன்னோடிகளாக அமைந்தனர். உரைநடை வளர்ச்சிக்கு உதவியாக அச்சு இயந்திரங்களைக் கிறித்தவர்கள் அறிமுகப்படுத்தினர்; அகராதிகளைப் படைத்தனர்; இதழ்களையும் வெளியிட்டனர். இவை உரைநடை வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்தன. ஓரளவிற்குப் படித்தவர்களும் புரிந்துகொள்ளக் கூடிய எளிய நடையில் கிறித்தவர்கள் எழுதினர். பேச்சுத் தமிழைத் தரப்படுத்தி, எழுதும் தமிழாகச் சீர்மைப்படுத்தியவர்களும் கிறித்தவர்களே. சொற்றொடர்களைச் சங்கிலித் தொடர்போல் எழுதி வந்த வழக்கை மாற்றி, சந்தி பிரித்து, பத்திபத்தியாக அமைத்து எழுதியவர்களும் கிறித்தவர்களே.

### 2.1.1 கிறித்தவ உரைநடை முன்னோடிகள்

பேச்சுத் தமிழுக்கு உயிரூட்டி, பேச்சுத் தமிழுக்கும் செந்தமிழுக்கும் இடைப்பட்ட ஒரு நடையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு கிறித்தவர்கள் தமிழை வளப்படுத்தினர். இவ்வகையில் ஹென்றிக்ஸ் அடிகள், தத்துவ போதகர், வீரமாமுனிவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

• ஹென்றிக்ஸ் அடிகள் (Henriques 1520-1600)

தொடக்கக்காலக் கிறித்தவ உரைநடை நூல்கள் பெரும்பாலும் சமயம் சார்ந்தவை. ஐரோப்பிய மொழிகளிலிருந்து தமிழில் பெயர்க்கப்பட்டவை. தம்பிரான் வணக்கம் என்னும் நூல் அச்சில் வெளிவந்த முதல் தமிழ் நூலாகும். இதனை ஹென்றிக்ஸ் அடிகள் 1578 இல் வெளியிட்டார். இது கிறித்தவ வழிபாட்டு நூலாகும். கிறித்தவ அடியார்களின் வரலாற்றையும் இவர் எழுதியுள்ளார். இவரது நடை எளிமையானது; மக்கள் பேசியும் எழுதியும் வந்த மொழியை அடிப்படையாகக் கொண்டது.

• தத்துவ போதகர் (1577-1656)



இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். இவரது இயற்பெயர் இராபர்ட் டிநொபிலி (Robert de Nobili). இவர் சமயம் பரப்பத் தமிழகம் வந்தவர்; இருபதுக்கும் மேற்பட்ட உரைநடை நூல்களைத் தமிழில் எழுதியுள்ளார்; 'தமிழ் உரைநடையின் தந்தை' எனவும் குறிப்பிடப்படுகிறார்; 'ஞானோபதேசகாண்டம்'.
'ஆத்தும நிர்ணயம்', புனர்ஜென்ம ஆட்சேபம்', 'நித்திய சீவன சல்லாபம்', தேவ மாதா சரித்திரம்' முதலிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை. மேலேகுறிப்பிட்ட அன்றிக்ஸின் நடையில் காணப்படும் போர்ச்சுகீசியச் சொற்களை இவர் தவிர்த்தார். இவர் நீண்ட சொற்றொடர்களைப் பயன்படுத்தி எழுதினார். ஆயினும் புரிந்து கொள்வதற்கு வசதியாக எளிமையாக எழுதினார்.

• வீரமா முனிவர் (1680-1742)



பழந்தமிழ் உரைநடைக்கும் தற்கால உரைநடைக்கும் பாலமாக அமைந்தவர் வீரமா முனிவர். இவரது இயற்பெயர் ஜோசப் பெஸ்கி (Joseph Besche). இலக்கணம், அகராதி, எழுத்துச் சீர்திருத்தம் போன்ற துறைகளில் இவர் செய்த பணிகள் உரைநடை வளர்ச்சிக்குப் பெருமளவில் துணை செய்தன. கற்றோருக்குச் 'செந்தமிழ்' நடையிலும்,

பாமரருக்குப்
பேச்சுத் தமிழை அடிப்படையாகக் கொண்ட 'கொடுந்தமிழ்' நடையிலும் இவர் எழுதினார். செந்தமிழ் நடைக்கு எடுத்துக்காட்டாக 'வாமன் சரித்திரம்' என்ற கதையை எழுதினார். கொடுந்தமிழுக்கு எடுத்துக்காட்டாக, பரமார்த்த குரு என்னும் கதையை எழுதினார். தற்காலப் புனைகதை இலக்கியத்திற்கு முன்னோடியாக இக்கதை கருதப்படுகிறது. அக்கால மடாதிபதிகளின் முட்டாள்தனத்தையும், அவர்களது சீடர்களின் அறியாமையினையும் நகைச்சுவையாக, இக்கதையில் அவர் படைத்துள்ளார். வீரமா முனிவரைப் பின்பற்றிப் பலரும் தமிழில் உரைநடை நூல்கள் எழுதினர்.

**2.1.2.** விவிலிய மொழிபெயர்ப்புகள்

விவிலிய (Bible) மொழிபெயர்ப்புகள் தமிழ் உரைநடை வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெறுகின்றன. முதன்முதலாக சீகன்பால்கு (1683-1719) விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். தரங்கம்பாடியில் அச்சுக் கூடமும் நிறுவினார். இவரது நடை பேச்சு வழக்கை அடிப்படையாகக் கொண்டது. இவருக்குப் பின் பெப்ரிஷியஸ் (1711-1796) என்பவர் விவிலியத்தை முழுமையாக மொழிபெயர்த்து வெளியிட்டார். கற்றோருக்கும் பாமரருக்கும் பயன்பட வேண்டும் என்ற நோக்கில் இவரது நடை அமைந்திருந்தது. இரேனியஸ் (1790-1838), ஹென்றி பவர் (1813-1885), ஆகியோர் செய்த மொழிபெயர்ப்புகளும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை. இலங்கையில் ஆறுமுகநாவலர் துணையோடு பெர்சிவெல் என்பவர் செய்த மொழிபெயர்ப்பு சிறப்புடையதாகும். கால்டுவெல், ஜி.யு.போப் போன்றோரும் தமிழில் உரைநடை நூல்கள் எழுதியுள்ளனர்.

விவிலிய மொழிபெயர்ப்புகள் முக்கியமான இரண்டு விவாதங்களை எழுப்பின. அவை :-

1) பேச்சு வழக்கைக் கையாள்வது பற்றியது
2) சமஸ்கிருதச் சொற்களைக் கலந்து எழுதுவது பற்றியது.

இந்த விவாதங்கள் 19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் எழுந்தன. இக்காலப் பகுதியில் மணிப்பிரவாள நடைக்குச் செல்வாக்கு இருந்தது. கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் புகழ்மிக்க நூலை வெளியிட்டதும் இந்தக் காலக்கட்டத்தில்தான்.

மேற்சுட்டிய விவாதங்களின் அடிப்படையில், பேச்சு வழக்கிற்கும் செந்தமிழ் வழக்கிற்கும் இடைப்பட்ட ஒரு நடையைப் பின்பற்றுவது சரி என்று விவிலிய மொழிபெயர்ப்பாளர்கள் நினைத்தனர்; கூடிய வரை சமஸ்கிருதச் சொற்களைத் தவிர்ப்பது எனவும் முடிவு செய்தனர். இது தமிழ் உரைநடை வளர்ச்சியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.

தமிழ் உரைநடை வரலாறும் விவிலிய மொழிபெயர்ப்பு வரலாறும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. விவிலிய மொழிபெயர்ப்புகளில் காலந்தோறும் பலவகையான நடையியல் மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. விவிலியத்தில் காணப்படும் ஒரு வசனம் (லூக்கா 16:19) பல்வேறு காலக்கட்டங்களில் எங்ஙனம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்பதைப் பின்வரும் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன.

18ஆம் நூற்றாண்டு

அவர் செனங்களைப் பார்த்துக் கொண்டிருக்கச் செய்த
ஒரு பறுபதத்தின் பேரிலே ஏறிப்போனார்

(சீகன்பால்கு-1714)

19ஆம் நூற்றாண்டு

அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின் மேல் ஏறினார்

(பவர் – 1864)

20ஆம் நூற்றாண்டு

இயேசு மக்கள் கூட்டத்தைக் கண்டு மலைமேல் ஏறி அமர...

(பொது மொழிபெயர்ப்பு – 1995)

## 2.2. கிறித்தவப் புதினப் படைப்புகள்

கிறித்தவர்கள் உரைநடை வளர்ச்சிக்குத் துணைபுரிந்ததோடு, உரைநடையில் இலக்கியங்கள் தோன்றவும் வழிவகுத்தனர். கதை இலக்கியங்களில் புராண மாந்தர்களும் மன்னர்களும் கதைத் தலைவர்களாகப் படைக்கப்படுவது பெருவழக்கமாக இருந்தது. இச்சூழலில் கிறித்தவர்கள் தமிழ்ப் புதின இலக்கியத்திற்குத் தோற்றுவாய் செய்தனர்.

• புதினம்

புதினம் உரைநடையில் அமைந்த கதை வடிவமாகும். புராணங்கள், காப்பியங்கள் போன்றவற்றிலிருந்து புதினம் வேறுபட்டது. புதினம் ஆங்கிலக் கல்வியின் தாக்கத்தால் தமிழில் எழுந்தது. அதிகப் புனைவுகள் இல்லாத நடப்பியல் தன்மை கொண்டது. பொதுவாக, சமகாலச் சிக்கல்களைக் கருவாகக் கொண்டது. வரலாற்று நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டும் புதினங்கள் படைக்கப்பட்டுள்ளன. கதை மாந்தர், கதைப்பின்னல், பின்னணி, உத்தி ஆகியன புதின உருவாக்கத்தில் இன்றியமையாதவை. கிறித்தவர்கள் பலர் புதினங்களை எழுதி, தமிழ்ப் புதின வளர்ச்சிக்குத் துணைசெய்துள்ளனர்.

• புதினப் படைப்பாளர்கள்

நீதிபதி வேதநாயகம் பிள்ளை, அருமைநாயகம், ஜெகசிற்பியன், டி.செல்வராஜ், ஹெப்சிபா ஜேசுதாசன், டேனியல், டேவிட் சித்தையா, ஆர்.எஸ். ஜேக்கப், ஐசக் அருமைராஜன், பி.ஏ.தாஸ், கார்த்திகா ராஜ்குமார், மோசஸ் பொன்னையா, தமிழவன், பாமா, விடிவெள்ளி போன்றோர் கிறித்தவப் புதினப் படைப்பாளர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். ஆயினும் இவர்தம் படைப்புகள் அனைத்தையும் கிறித்தவப் புதினங்கள் என்ற வரையறைக்குள் அடக்க இயலாது. மாதவய்யா, க.நா.சுப்பிரமணியம் போன்றோர் கிறித்தவர் அல்லர்; உள்ளடக்கம் நோக்கி இவர்தம் புதினங்கள் கிறித்தவப் புதினங்கள் என்றே கருதப்படுகின்றன. சாமுவேல் பவுல், சரோஜினி பாக்கியமுத்து போன்றோர் கிறித்தவ நாவல்களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளனர். கிறித்தவப் பின்னணி, கிறித்தவப் பாத்திரங்கள் ஆகியவற்றைக் கொண்டு எண்ணற்ற புதினங்கள் தமிழில் எழுந்துள்ளன.

• புதினப் படைப்புகள்

கிறித்தவர்கள் படைத்துள்ள புதினங்கள் பெரும்பாலும் நடப்பியல் சார்ந்தவை. சமகாலச் சமுதாயச் சிக்கல்களை மையமிட்டு எழுதப்பட்டவை. வர்க்க-சாதிய-பாலியல் ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தைக் காண, கிறித்தவப் படைப்பாளர்கள் முற்பட்டனர். கிறித்தவச் சமுதாயத்தில் காணப்படும் குறைபாடுகளை இடித்துரைக்கவும்

அவர்கள் தவறவில்லை. மன்னிப்பு, இரக்கம், எளிமை, அன்பு முதலிய தனி மனித அறங்களை வற்புறுத்தும் புதினங்களையும் கிறித்தவர்கள் படைத்துள்ளனர்.

பெண் மேம்பாடு, வர்க்கப் போராட்டம், சாதிய ஏற்றத்தாழ்வு, தலைமுறை மாற்றம் ஆகியன கிறித்தவப் புதினப் படைப்பாளர்களால் சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. சில புதினங்கள் மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டு இங்கு விளக்கப்படுகின்றன.

### 2.2.1 பெண் மேம்பாடு

• பிரதாப முதலியார் சரித்திரம்

பெண்களுக்கு ஏற்றம் தருவதில் கிறித்தவப் புதினங்கள் முன் நிற்கின்றன. தமிழில் தோன்றிய முதல் புதினமான பிரதாப முதலியார் சரித்திரம் பெண்ணுக்கு ஏற்றம் தரும் வகையில் அமைந்துள்ளது. புதின ஆசிரியரான நீதிபதி வேதநாயகம் பிள்ளை இப் புதினத்தில் இரண்டு இலட்சியப் பெண்களைப் படைத்துள்ளார். ஒருவர் பிரதாப முதலியாரின் தாயார்-சுந்தர அண்ணி, இன்னொருவர் பிரதாப முதலியாரின் மனைவி – ஞானாம்பாள்.

ஞானாம்பாள் கல்வியும் அழகும் நிரம்பியவர். காடு சென்ற கணவன் விபத்தில் சிக்குகிறான். ஞானாம்பாள் அவனைத் தேடிச் செல்கிறாள். ஆண் வேடம் போட்டுக் கொண்டு ஓர் ஊரை அடைகிறாள். எதிர்பாராத விதமாக அவளுக்கு அரசுப் பொறுப்பு கிட்டுகிறது. ஆண் வேடத்தில் ஆட்சி நடத்துகிறாள். குற்றவாளியாகத் தன் முன் நிறுத்தப்படும் கணவனைப் பாதுகாக்கிறாள். நாட்டில் பல சீர்திருத்தங்களையும் செய்கிறாள். பின்னர் உண்மையை எடுத்துக்கூறி அந்நாட்டின் மகுடத்தையும் ஏற்கிறாள். பெண்ணின் அறிவுத் திறனும், ஆட்சித்திறனும் வேதநாயகம் பிள்ளையால் சிறப்பாக இப்புதினத்தில் எடுத்துரைக்கப்படுகின்றன.

வேதநாயகம் படைத்த இன்னொரு நாவலான சுகுணசுந்தரி புதினத்தில் பெண் உரிமைகள் வற்புறுத்தப்படுகின்றன. இப்புதினத்தில் தலைவி நாடு கடத்தப்படுகிறாள். அவள் கன்னி மாடம் ஒன்றில் அடைக்கலம் புகுகிறாள். அங்குப் பெண் கல்விக்கு ஆதரவாகப் பேசுகிறாள். வரதட்சணை, குழந்தைத் திருமணம், கைம்மை போன்றவற்றை எதிர்த்துப் பேசுகிறாள். இவை அக்காலக் கிறித்தவர்கள் வற்புறுத்திய நெறிகள் ஆகும். இங்ஙனம், கிறித்தவப் புதினங்கள் பெண் மேம்பாட்டுச் சிந்தனைகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன.

### 2.2.2. வர்க்கப் போராட்டம்

பணக்கார வர்க்கத்தினரின் சுரண்டலுக்கும் கொடுமைக்கும் ஆளாகும் ஏழைகளின் அவலமும், எதிர்ப்பும், போராட்டமும் கிறித்தவப் புதினப் படைப்பாளர்களால் சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. டி.செல்வராஜ், ஐசக் அருமைராஜன், டேனியல், ஆர்.எஸ்.ஜேக்கப் ஆகியோர் இவ்வகையில்

குறிப்பிடத்தக்கவர்கள். ஐசக் அருமைராஜனின் கல்லறைகள் மற்றும் டி.செல்வராஜின் மலரும் சருகும் ஆகிய புதினங்கள் இங்கு விளக்கப்படுகின்றன.

• கல்லறைகள்

பணக்கார வர்க்கத்தினரின் வெறியாட்டம், அதற்குத் துணை போகும் காவல்துறை, ஏழைகள் படும் துன்பம் முதலியவற்றைக் குமரி மாவட்ட வட்டாரத் தன்மையோடு இப்புதினம் சித்திரிக்கிறது.

இக் கதையில் வரும் செல்வமணி ஓர் ஏழை; சாலை ஓரத்தில் உள்ள புறம்போக்கு நிலத்தில் சிற்றுண்டிக் கடை வைத்துப் பிழைப்பு நடத்துபவர். இவருக்கு இரண்டு பெண்மக்கள். தேவசகாயம் என்பவன் கிழங்குத் தோட்ட முதலாளி; தொழிலாளர்களைத் துன்புறுத்துபவன். கிழங்கு பிடுங்குவோர் சங்கத்தின் தலைவனான சங்கரன், செல்வமணி குடும்பத்துக்கு ஆதரவு தருகிறார். உரிய கூலி கேட்டு நிகழ்ந்த போராட்டத்தில் சங்கரன் சிறையில் அடைக்கப்படுகின்றார். செல்வமணியின் மகள்களைத் தம் ஆசைக்கு இணங்க வைக்க தேவசகாயம் முயல்கிறான். அதில் ஏற்பட்ட தோல்வியால் செல்வமணியைப் பழிவாங்க எண்ணுகிறான். செல்வமணியைத் தேவசகாயத்தின் ஆட்கள் தாக்குகின்றனர். செல்வமணியின் சிற்றுண்டிச்சாலை இடித்துத் தள்ளப்படுகிறது. குடும்பம் நடுத்தெருவிற்கு வருகிறது. அந்த ஊர் பங்குத் தந்தை (Parish Priest) அவர்களுக்கு ஆதரவு தருகிறார். செல்வமணி மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறார்.

இதற்கிடையே தேவசகாயத்தின் மகன் செல்வமணியின் மகளைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறான். இதைத் தேவசகாயத்தால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. செல்வமணியின் இரண்டு பெண்களையும் குடிசையோடு எரித்து விடுகிறான். குடிசைகள் எரிந்த இடத்தில் இருவருக்கும் கல்லறைகள் எழுப்பப்படுகின்றன. குடிசைகள் மட்டுமா எரிக்கப்படுகின்றன? மானுடமே எரிக்கப்படுகிறதல்லவா? கல்லறைகள் மனித நேயத்தைப் புதைத்து எழுப்பப்பட்டன என்பதை நினைக்கும் பொழுது மானுடம் எப்போது வெல்லும் என்ற வினாவை உள்ளத்தில் எழுப்பி அவலத்தை நிரப்புகிறது. இறுதியில் மருத்துவ மனையிலிருந்து திரும்ப வந்த செல்வமணி தம் மக்களின் பரிதாப முடிவைக் கண்டு பயித்தியமாய் அலறுகிறார்.

முதலாளி வர்க்கம் ஏழைகளுக்குக் கொடுக்கும் இன்னல்களையும், ஏழைகள் மானத்தோடு வாழ முடியாத நிலையினையும் இக்கதை எடுத்துக்காட்டுகிறது.

• மலரும் சருகும்

டி.செல்வராஜின் தேனீர், மலரும் சருகும் முதலிய புதினங்களில் வர்க்கப் போராட்டம் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது. இவரது தேனீர் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் இன்னல்கள் பற்றியது.

இவரது மலரும் சருகும் புதினம், வர்க்கப் போராட்டத்தையும், சமுதாய மாற்றத்தையும் மையமாகக் கொண்டது. இப்புதினத்தில் மூன்று தலைமுறைகள் அடங்கியுள்ளன. பழைய தலைமுறையைச் சேர்ந்தவன் மாடசாமி குடும்பன்; மதம் மாறிய அவன் மகன் ஈசாக்கு, மத நம்பிக்கை மிகுந்த அவன் மனைவி பூரணம், புதிய தலைமுறையைச் சேர்ந்த ஈசாக்கின் மகன் மோசே.

மோசே பணம் படைத்தவர்களுக்கு எதிராகப் போராட்டக் குரல் எழுப்புகிறான். தன் தந்தை வாங்கிய கடனுக்காகத் தன் நிலத்தைக் காந்திமதிநாதம் பிள்ளையிடம் இழந்து, அந்த நிலத்திலேயே கூலிக்கு வேலை செய்ய வேண்டிய நிலைக்கு ஆளாகிறான். விவசாயச் சங்கத்தில் சேர்ந்து காந்திமதிநாதம் பிள்ளைக்கு எதிராகப் போராடிச் சிறைக்குச் செல்கிறான். எத்தகைய கொடுமையிது!

கதையின் உச்சக்கட்டமாய் விவசாயப் புரட்சி எழுகிறது. ராணுவ வீரன் ரங்கன் தலைமை ஏற்கிறான். காவல்துறை சிறைப்படுத்துகிறது. காவல் துறை வாகனத்திற்குப் பின்னால் மாடசாமி குழந்தையோடு ஓடுகிறான். அடிபட்டுப் பிணமாகச் சாய்கிறான். அவனது மார்பில் கிடந்த குழந்தை துள்ளுகிறது. மாடசாமி சருகாகி உதிரும்போது, குழந்தை மொட்டாக உயிர்க்கிறது. தலைமுறைகள் உதிரும்போது புதிய தலைமுறைகள் எழுவதை அற்புதமான புதினமாக்கியுள்ளார் டி.செல்வராஜ். எந்த ஓர் இயக்கமும் – மனித மேம்பாட்டுக்காக இயங்கும்போது முற்றுமாக அழிந்துபடுவதில்லை. மாறாகப் புதிய எழுச்சியோடு போராட்டம் தொடர்கிறது. தொடரும் என்ற நம்பிக்கைத் தளிரைத் தருவது தான் ‘மார்பில் கிடந்த குழந்தை துள்ளுகிறது’ என்பது அளிக்கும் அருமையான செய்தி.

ஐசக் அருமைராஜின் கீறல்கள் புதினமும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கது. சமூகக் கீறல்களைக் கொத்திச் சீர்படுத்த முடியாது; இடித்துவிட்டுப் புதிதாக மாற்ற வேண்டும் என்ற கருத்தை வற்புறுத்துகிறார் ஆசிரியர். மேலும் வர்க்கப் போராட்டத்திற்கு எதிராக மதமும் போராட்டத்தில் குதிக்க வேண்டும் என அறைகூவல் விடுக்கிறது இப் புதினம்.

### **2.2.3** சாதிய ஏற்றத் தாழ்வு

இந்திய சமுதாயத்தில் காணப்படும் சாதிய ஏற்றத்தாழ்வும் குறிப்பிடத்தக்க சிக்கலாகக் கிறித்தவப் புதினப் படைப்புகளில் எடுத்தாளப்பட்டுள்ளது. சாதி, பிறப்பினடிப்படையில் மக்களைப் பாகுபடுத்துகிறது. அடிப்படை மனித உரிமைகளை மறுப்பதோடு, மனிதர்கள் ஒதுக்கப்படுவதற்கும் இழிவுபடுத்தப்படுவதற்கும் வழி வகுக்கிறது. மனமொத்த ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதற்குப் பெருந்தடையாகச் சாதி அமைவதைப் பெரும்பாலான புதினங்கள் சிக்கலாக எடுத்துக் கொள்கின்றன. டேவிட் சித்தையாவின் கல்லறைப்பூக்கள் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

- கல்லறைப்பூக்கள்

இன்றைய கிறித்தவரிடையே காணப்படும் சாதிப் பாகுபாட்டை இப்புதினம் காட்டுகிறது. சாதிய ஏற்றத் தாழ்வை அகற்றும் நோக்கில் இப்புதினம் படைக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு சமயங்களைச் சேர்ந்தவர்கள் ஒருவரையொருவர் காதலிப்பதால் ஏற்படும் சிக்கல் ஒரு வகை, கிறித்தவர்களுக்குள்ளேயே சாதி வேறுபாடு காரணமாகக் காதலில் சிக்கல் ஏற்படுகிறது. இதுவே கல்லறைப் பூக்களின் கதை.

• கதை

ஆரோக்கியசாமி செருப்புத் தைக்கும் தொழிலாளி. இவர் மகள் பிரமிளா. இவளைத் தேவநேசம் பிள்ளையின் தங்கை மகன் தயானந்தன் காதலித்துத் திருமணம் செய்து கொள்கிறான். அருளப்பன் என்பவன் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன். நற்குணங்கள் நிரம்பியவன். இவனைப் பொன்னையா நாடாரின் மகள் கிருபா நேசிக்கிறாள். கீழ்க்குலத்தைச் சேர்ந்த ஒருவரின் வளர்ப்பு மகன் செல்லதுரையும் தேவநேசம் பிள்ளையின் மகள் நிர்மலாவும் ஒருவரை ஒருவர் காதலிக்கிறார்கள். சாதி இவர்கள் காதலைப் பிரிக்கிறது. இவர்களது காதல் கல்லறைப் பூக்களாக மலர்கிறது.

சாதியின் ஆணி வேர்கள் சமயங்களின் ஆணிவேரோடு பின்னிப் பிணைந்துள்ளன. இவற்றுள் ஒன்றை அழித்தால் மற்றொன்று அழிந்து விடுமோ என்ற அச்சம் ஆதிக்க வாதிகளுக்கு இருக்கிறது. எழுதப்படாத இப்படிப்பட்ட விலக்குகள் மனித மனங்களைச் சிதைக்கின்றன. மனித உணர்வுகளை மிதிக்கின்றன. ஒரே சமயத்திற்குள் காதல் மறுக்கப்படுகிறது. காதலர்கள் அடிக்கப்படுகிறார்கள்; கொல்லப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களின் காதல் இதயங்களே கல்லறைப் பூக்கள்.

இப்புதினத்தில் ஒடுக்கப்பட்டவர்களின் சமுதாயத்தைச் சேர்ந்த செல்லதுரை பின்வருமாறு குரல் எழுப்புகிறான். "சாப்பாட்டுக்காக நாங்கள் மதம் மாறவில்லை-சம உரிமைகளுக்காகத்தான்.... அதை நீங்கள் எங்களுக்குத் தராவிட்டால் நாங்கள் மறுபடியும் தாய் மதத்திற்குத் திரும்பிப் போய்விட மாட்டோம். உயிர்த்துடிப்போடு இருக்க வேண்டிய முழக்கம் – சமரம் (போர்) தொடங்குவோம்! – சமத்துவத்திற்கான சமரம். சம நீதிக்கான, சம உரிமைக்கான சமரம். . . ! ஏனெனில், ஒடுக்கப்பட்டவர்களின் சார்பாகப் போராடுகிற இறைவன் யார் என்றும், ஓடாக உழைத்துக் களைத்தவர்களுக்கு இளைப்பாறுதல் தருகிற மனிதர் யார் என்றும், அந்தச் சமயம்தான் எங்களுக்கு இன்றைக்கு இனம் காட்டியிருக்கிறது."

மனித நேயத்தை வளர்ப்பதற்குப் பதிலாக, மதமும் சாதியும் மனிதர்களைப் பிரிக்குமானால், கிறித்தவ நெறிகளே அவற்றைக் களைய வேண்டும் என்பதே இப்புதினத்தின் செய்தியாகும்.

## **2.2.4** மாறி வரும் சமுதாயப் போக்குகள்

கிறித்தவம் சமுதாய மாற்றத்தை வரவேற்கிறது. மாறி வரும் சமுதாயப் போக்குகள் குடும்ப உறவுகளிலும் மதிப்புகளிலும் ஏற்படுத்தும் மாற்றங்களைக் கிறித்தவப் புதினங்கள் பதிவு செய்துள்ளன. இதற்கு ஹெப்சிபா ஜேசுதாசனின் புத்தம் வீடு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

• புத்தம் வீடு

'புத்தம் வீடு' வட்டார வழக்குப் புதினமாகும். இப்புதினம் மாறிவரும் சமுதாயத்தின் போக்குகளை ஒரு குடும்பத்தின் கதையாகச் சொல்கிறது. பனைவிளை திருவிதாங்கூர் பகுதியிலுள்ள ஒரு கிராமம். இக் கிராமத்திலுள்ள புத்தம் வீடு பனையேறிகளுக்கும் ஆண்டையான கண்ணப்பச்சி குடும்பத்திற்கும் நிகழும் போராட்டமே இப்புதினமாகும்.

• கதை

பனைவிளை கிராமத்தில் ஓடு போட்ட வீடு கண்ணப்பச்சியின் புத்தம் வீடு ஒன்றுதான். கண்ணப்பச்சிக்கு இரண்டு மகன்கள். இருவரும் பொறுப்பற்றவர்கள்; குடிகாரர்கள்; குலப்பெருமை பேசுபவர்கள். மூத்தவன் பொன்னுமுத்துவுக்கு ஒரு மகள்; அவள் பெயர் லிசி. இளைய மகன் பொன்னுதம்பிக்கும் ஒரு மகள்; அவள் பெயர் லில்லி. புத்தம் வீடு நொடித்துப் போனபோதும் மாதா கோவிலில் அவர்களுக்கு மரியாதை குறையவில்லை.

லில்லி பருவம் அடைந்ததும் வீட்டில் அடைக்கப்படுகிறாள்; அதிகக் கட்டுப்பாடுகள்; பெண்கள் அதிகம் படிக்க முடியாது. ஞாயிற்றுக்கிழமை கோவிலுக்குப் போகலாம். அவ்வளவுதான். பனையேறி குடும்பத்திலிருந்து மருத்துவரான ஒருவருக்கு லில்லியை மணம் முடித்து வைக்கிறார்கள். புத்தம் வீட்டுக்குப் பனையேறியாக வந்த அன்பையன் என்பவரின் மகன் தங்கராசுவை லிசி நேசிக்கிறாள் தங்கராசு அவளுடன் ஐந்தாவது வகுப்பு வரை படித்தவன்.

கண்ணப்பச்சியின் ஆண்மக்களுக்குள் பகை ஏற்படுகிறது. தங்கராசுவின் பனை வீசும் அரிவாளை எடுத்துத் தன் தம்பியைக் கொலை செய்கிறான் அண்ணன். கொலைப்பழி தங்கராசு மீது விழுகிறது. தங்கராசு இந்தக் கொலையைச் செய்திருக்க மாட்டான் என லிசி நம்புகிறாள். ஒரு நாள் லிசியின் தந்தை, தன் தம்பியைக் கொன்றது நான்தான் என்று கூறிவிட்டு இறந்து போகிறார். இது வெளியே தெரிந்தால் குடும்பப் பெயருக்குக் கேடு எனப் புத்தம் வீட்டார் மறைக்கப் பார்க்கின்றனர். குற்றம் நிரூபிக்கப்படாததால், தங்கராசு விடுதலை செய்யப்படுகிறான். நடைமுறை வாழ்வின் மாற்றங்களைப் புரிந்து கொண்ட கண்ணப்பச்சி, லிசி-தங்கராசு திருமணத்திற்குச் சம்மதிக்கிறார். திருமணம் நடைபெறுகிறது.

இக்கதையில் மூன்று தலைமுறைகள். கண்ணப்பச்சி – மகன்கள் – பேத்திகள். தலைமுறை மாறும்போது நடைமுறை மாறுகிறது; குலப்பெருமைகள் மாறுகின்றன. புத்தம்வீடு படிப்படியாகத் தன் நிலையிலிருந்து இறங்குவதை ஹெப்சிபா சிறப்பாகப்

படைத்துள்ளார். பனையேறிகளின் வாழ்க்கை, பெண்களுக்கு இருந்த கட்டுப்பாடு, பொருளாதாரப் பற்றாக்குறை, கூட்டுக்குடும்பம் தொடர்பான செய்திகளையும் இப்புதினம் பேசுகிறது.

## தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 2.3 கிறித்தவச் சிறுகதைப் படைப்புகள்

புதினங்களைப் படைத்த கிறித்தவ அறிஞர்கள் சிறுகதைப் படைப்பிலும் பின் தங்கவில்லை. சிறந்த சிறுகதைகளைப் படைத்து, சிறுகதை வரலாற்றில் தங்கள் முத்திரையைப் பதித்துள்ளனர். விவிலியத்தில் அமைந்த கதைகள் அவர்களுக்குப் பெருந்தூண்டுகோலாய் அமைந்தன. விவிலியத்தில் ஏராளமான கதைகள் உள்ளன. கிறித்து அருளிய உவமைக் கதைகள் சிறுகதைகள் பலவற்றிற்கு மூலமாக விளங்குகின்றன. 'கெட்ட குமாரன் கதை', 'நல்ல சமாரியன் கதை' போன்றவை இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை. வீரமாமுனிவர் எழுதிய 'பரமார்த்த குரு கதை' முதல் தமிழ்ச் சிறுகதையாகக் கருதப்படுவதுண்டு. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்ட இதழ்களின் வளர்ச்சியும் சிறுகதை வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது.

• கிறித்தவச் சிறுகதைகள்

கிறித்தவச் சிறுகதைப் படைப்புகளை டேவிட் சித்தையா மூன்று கட்டங்களாகப் பிரிக்கிறார். முதல் கட்டத்தில் (1940-60) சமயக் கருத்துக்கள் முதன்மை பெறுகின்றன. இரண்டாம் கட்டத்தில் (1961-70) சமூக ஏற்றத்தாழ்வு, தனி மனித மாற்றம் ஆகியன முதன்மை பெறுகின்றன. மூன்றாவது கட்டத்தில் (1971-91) மனித நேயம் முதன்மை பெறுகிறது; வடிவம், உள்ளடக்கம் ஆகியவற்றிலும் வளர்ச்சி காணப்படுகிறது.

• கிறித்தவம் பற்றிய சிறுகதைகள்

சுமார் 600-க்கும் மேற்பட்ட கிறித்தவ எழுத்தாளர்களின் சிறுகதைகள் கிடைக்கின்றன. இவற்றுள் ஐந்தில் ஒரு பங்கு கிறித்தவம் பற்றியவை. இவற்றை இரண்டாகப் பகுக்கலாம்.

1) கிறித்தவக் கோட்பாடுகளை உணர்த்தும் சிறுகதைகள்
2) கிறித்தவத்திற்கு எதிராக உள்ள கிறித்தவர்கள், திருச்சபையில் உள்ள குறைபாடுகள் போன்றவற்றைக் கண்டிக்கும் வகையில் அமைந்த சிறுகதைகள்.

• கிறித்தவச் சிறுகதை ஆசிரியர்கள்

கிறித்தவச் சிறுகதைப் படைப்பாளர்களுள் இரணியல் கலைத்தோழன், இன்னாசி, கார்த்திகா ராஜ்குமார், செல்வி சினேகலதா, டேவிட் சித்தையா, பி.ஏ.தாஸ், ஆர்.ஏ.துரைஜீவன், பிரேம்குமார் தர்மராஜ், பிரசாத் ரிச்சர்ட், ஆர்.பிரசாத், ரதி அகஸ்டின், ஆர்.எஸ். ஜேக்கப், ஹெலன் ஞானப்பிரகாசம், ஸ்வீட்லின் பிரபாகர், பிளாரன்ஸ் வில்லியம், கோயில்வரம், ஹெர்பர்ட் சச்சிதானந்தம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

• கரு

கிறித்தவச் சிறுகதைகள் இரக்கம், அன்பு, எளிமை முதலிய தனி மனிதப்

பண்புகளை வற்புறுத்தும் வண்ணம் அமைந்துள்ளன; ஏழ்மை, வறுமை முதலிய சமுதாய அவலங்களையும், சாதி, பெண்ணடிமைத்தனம் முதலிய சமுதாயச் சிக்கல்களையும் இவை கையாண்டுள்ளன.

**2.3.1.** ஏழ்மை

அடிப்படை வாழ்வுக்குக்கூடப் போதுமான பணவசதி இல்லாதவர்கள் ஏழைகள். இவர்கள் அன்றாடம் துன்பங்களைச் சந்திக்கிறார்கள். இதனை எடுத்துக்காட்டுவதே பின்வரும் கதை.

• ஒலிக்கவில்லை

'சத்திரத்தில் அவர்களுக்கு இடமில்லாமல் இருந்தது' என்ற விவிலிய வசனமே 'ஒலிக்கவில்லை' என்ற கதையின் கரு. இதன் ஆசிரியர் ஆர்.எஸ்.ஜேக்கப்.

முத்து கை வண்டித் தொழிலாளி; அவனது மனைவி பிச்சம்மாள். வீட்டு வேலை செய்பவள். தத்தம் வேலைகளை முடித்துவிட்டு, ஓர் அச்சக வராண்டாவில் தங்கி வந்தனர். பின்னர், குளக்கரையில் சாக்குப்பைகளைக் கொண்டு ஒரு குடில் அமைத்துக் கொண்டு வாழ்கின்றனர். அவர்களுக்கு முதல் குழந்தை பிறக்கிறது. குளிர் தாங்க முடியாமல் அந்தக் குழந்தை இறந்து போகிறது. பிறகு, வீணாகக் கிடக்கும் செங்கற்களைப் பொறுக்கிச் சேர்த்து, சாலை ஓரத்தில் ஒரு மண் குடிசை அமைக்கின்றனர். சொந்த வீடு கட்டிய மகிழ்ச்சி நிலைக்கவில்லை. போக்குவரத்துத் துறையினர் புல்டவுசரை வைத்துக் குடிசையை அகற்றுகிறார்கள். அன்று கிறிஸ்துமஸ். பிச்சம்மாளுக்குப் பிரசவவலி தொடங்குகிறது. அருகிலுள்ள அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறான் முத்து. மருத்துவமனையில் படுக்கை காலியாக இல்லை. மூன்று நாள் கழித்து வரும்படி கூறுகின்றனர். கிறிஸ்துமஸ் ஆராதனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்கள் உள்ளே நுழைகின்றனர். 'சத்திரத்தில் அவர்களுக்கு இடமில்லாதிருந்தது' என்ற வசனத்தை அடிப்படையாகக் கொண்டு குருவானவர் செய்தி அளித்துக் கொண்டிருந்தார். இந்த வசனம் வீதி எங்கும் ஒலித்த போதும், பிச்சம்மாளின் காதில் வேத வசனம் ஒலிக்கவில்லை எனக் கதையை முடிக்கிறார் ஆர்.எஸ்.ஜேக்கப்.

• விவிலியமும் நடைமுறையும்

தினம் வேதம் படிக்கிறோமே தவிர அதன் உட்பொருளை உணர்வதில்லை. ஏசுவின் வாழ்க்கை காட்டும் பாதையில் மக்கள் செல்வதில்லை; அவருடைய எளிமை, அன்பு, நேயம், மன்னிக்கும் பாங்கு எதையும் கற்றுக் கொள்வதில்லை. வெறும் வார்த்தைகளால் ஆகிய வேதத்தை எந்தவித உணர்வுமின்றி இயந்திரகதியில் சடங்காகக் கேட்கும் பண்பு, எதார்த்தம் எவ்வளவு அர்த்தமற்றதாக அவலம் நிறைந்ததாக உள்ளது!

• ஏழைகளின் நிலை

கிறித்து பிறப்பின் போது, சத்திரத்தில் இடமில்லாமல் தவித்ததை விவிலியம்

எடுத்துக் கூறுகிறது. எளியவரோடு தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் இறைவனின் பண்பினை இது காட்டுகிறது. மேலும், உண்பதற்கும் உடுத்துவதற்கும் வழியில்லாது அன்றாடம் துன்பப்படும் எளியவர்களின் அவல வாழ்க்கை, அண்டிப் பிழைப்பதற்குச் சாலை ஓரங்களை நாடும்பொழுது, அரசு அலுவலர்களால் ஆடு மாடுகளைப் போல் விரட்டப்படும் நிலை, குருவிக் கூண்டு போன்ற இவர்தம் குடிசைகளைப் பிய்த்து எறியும் நடப்புகள் ஆகியவற்றை இச் சிறுகதையில் எதார்த்தமாகப் படைத்துள்ளார் ஆசிரியர்.

### 2.3.2 சொல்லும் செயலும்

சொல்லுவது போல் செயல்படுவதுதான் பயனுள்ள வாழ்க்கையாகும். செயல் இல்லாத வெறும் வாய்ச்சொற்களால் பயன் ஏற்படப் போவதில்லை என்பதைப் பின்வரும் கதை உணர்த்துகிறது.

• செருப்பும் செயலும்

கோயில் பிச்சை என்பவனுக்கு ‘அணுகுண்டு பிரசங்கியார்’ என்று பெயர். இவர் ஒரு கிராமத்திற்குப் பிரசங்கம் பண்ண அழைக்கப்பட்டிருந்தார். அதற்காகப் பேருந்து ஒன்றில் ஏறுகிறார். இளைஞன் ஒருவனும் அவசர அவசரமாக ஓடிவந்து அதே பேருந்தில் ஏறுகிறான். அவன் ஒரு கட்டடத் தொழிலாளி. ஏறும் வேகத்தில் அவனது ஒரு செருப்பு பேருந்திலிருந்து தவறி விழுகிறது. பிரசங்கியார் ‘ஐயோ! செருப்பு! செருப்பு!’ எனப் பதறுகிறார். பேருந்து ஓடத்தொடங்கி விட்டது. அந்த இளைஞன் அவசர அவசரமாக அடுத்த செருப்பையும் கழற்றி எறிந்து விடுகிறான். ‘ஏன் தம்பி இப்படி செய்றீங்க’ என்று பிரசங்கியார் கேட்டார் ”எடுக்கிறவன் இரண்டையும் எடுத்துக் கொள்ளட்டும்” என்றான் இளைஞன். பேருந்து தொடர்ந்து சென்று கொண்டிருந்தது. இந்தக் குணம் யாருக்கு வரும்?

• இளைஞனும் பாட்டியும்

கண்டக்டர் ஒரு பாட்டியிடம் எரிச்சலுடன் பேசிக்கொண்டிருந்தார். பாட்டி டிக்கட்டுக்காகக் கொடுத்த பணத்தில் 25காசு குறைந்தது. பாட்டி பரிதாபமாகக் கையை விரித்தார். பாட்டியைச் சிலர் கிண்டலாக ஏசினர். பிரசங்கியாரின் பக்கத்திலிருந்த அந்த இளைஞன் எழுந்து பாட்டிக்குத் தேவையான காசைக் கொடுத்தான். ஆரவாரமின்றி இவன் செய்வது மானுடத்தின் பெருமையைப் பேசுகிறதல்லவா?

• இளைஞனும் குழந்தையும்

பேருந்து தொடர்ந்து போய்க் கொண்டிருந்தது. ஒரு குழந்தை வாந்தி எடுக்கத் துடிக்கிறது. கண்டித்து அடக்குகிறாள் அக்குழந்தையின் தாய். தன் துண்டைக் கொடுத்து உதவுகிறான் அந்த இளைஞன். எத்தகைய உதவி என்றாலும் இயல்பாகச் செய்யும் அந்த இளைஞனின் பண்பு நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. பிரசங்கியார்

இறங்குவதற்கு அடுத்த நிறுத்தத்தில் அவன் இறங்க வேண்டும். இன்னொருவருக்கு இடம் கொடுப்பதற்காக பிரசங்கியாரோடு இறங்கிக்கொண்டு நடக்க ஆரம்பிக்கிறான் இளைஞன் மிக இயல்பாக.

• இளைஞனும் பிரசங்கியாரும்

துண்டும் செருப்பும் இல்லாமல் நடந்து செல்லும் அந்த இளைஞனின் தோற்றம் பிரசங்கியாருக்குத் தேவதூதனாகத் தெரிகிறது. பிரசங்கம் செய்யாமலேயே ஊருக்குத் திரும்புகிறார் பிரசங்கியார். கட்டடத் தொழிலாளியான அவன் செய்கைகளை நினைத்துப் பார்க்கிறார்.

• தேவையறிந்து உதவுக

தேவதூதன் என்பவன் யார்? சிறியதோ பெரியதோ எதுவாக இருந்தாலும் யாருக்கு எப்போது தேவையோ அப்போது இயல்பாக முன்வந்து உதவுகிறவனே தேவதூதன்.
அன்பும் அருளும் மனித நேயமும் உடையவன்தானே
தேவதூதனாக இருக்க முடியும்
செயலில் மனித நேயத்தைக் காட்டும் இவன் செயல்களைக் கண்டு நெகிழ்ந்து போகிறார் பிரசங்கியார். வெறும் பேச்சால் மட்டும் பயனில்லை என்பதை உணர்கிறார் பிரசங்கியார்.

**2.3.3** எளிமை

ஆடம்பரத்தையும் அலங்காரத்தையும் இறைவன் விரும்புவதில்லை. எளிமையை இறைவன் விரும்புவார் என்பதைப் பின்வரும் கதை உணர்த்துகிறது.

• குடில்

கார்த்திகா ராஜ்குமாரின் ‘குடில்’ என்னும் சிறுகதை ‘மனிதம்’ என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. ‘குடில்’ என்பது கிறித்தவர்கள் வீடுகளில் கிறிஸ்துமஸ் காலங்களில் வைக்கப்படுவதாகும். கிறிஸ்து பிறப்பின் காட்சியை வீடுகளில் நவராத்திரிக் கொலுவைப் போல அலங்கரித்து வைப்பார்கள். பெரும்பாலும் குடில் அமைப்பதில் சிறுவர்கள் அதிகம் ஆர்வம் காட்டுவர்.

இக்கதையில் வரும் சிறுவன் பெயர் ஜோ. அவனுக்கு ஒரு தங்கை. பெயர் லீனி. ஜோவிற்குக் குடில் வைக்க ஆசை. அதற்குத் தேவையான வண்ண விளக்குகள் எல்லாம் வாங்க வேண்டும். எப்படியாவது 50 ரூபாய் சேர்க்க வேண்டும். லீனி தான் விரும்பி உண்ணும் இனிப்புப் பண்டங்களைத் தியாகம் செய்து, காசு சேர்த்துக் கொடுத்தாள். தேவையான பணமும் சேர்ந்து விட்டது. ஜோவிற்கு ஒரே மகிழ்ச்சி. ஆலயப் போதகர் பெயர் தோமை. ஜோவுடன் நன்கு பழகுவார். இவன் பூசை

நேரங்களில் அவருக்குத் துணை செய்வான். ஆலயத்தில் ‘குடில் அமைத்தல்’ பற்றிப் பேச்சு வந்தது. அப்பொழுது போதகர், ‘குடில் விஷயத்தில் நாம் தப்பு செய்து கொண்டிருக்கிறோம்’ என்றார். ஜோவிற்கு ஒன்றும் புரியவில்லை; போதகர் விளக்கினார். இயேசு மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். எளிமையான கோலத்தை விரும்பி ஏற்றுக் கொண்டார். அவரைக் கந்தைத் துணியில் சுற்றி வைத்தார்கள். ஆனால் நாம் அவர் பிறந்த கோலத்தை அலங்காரப்படுத்தி வைக்கிறோம். அலங்காரமான இடத்தில் இயேசு பிறப்பாரா? போதகர் சந்தேகத்தை எழுப்பினார். போதகர் சொன்னது ஜோவிற்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. யோசிக்கவும் செய்தான். ஆனாலும், குடில் அமைக்கும் எண்ணத்தை அவன் விட்டுவிடவில்லை.

• ராபியும் ஜோவும்

ஜோவின் நண்பன் பெயர் ‘ராபி’. குடில் அமைப்பதற்கு அவனைத்தான் நம்பியிருந்தான் ஜோ. ராபி நாலைந்து நாட்களாகவே பூசைக்கு வரவில்லை. ராபியின் வீடு கொஞ்சம் தூரம் தள்ளி இருந்தது. ராபி வீட்டிற்குப் புறப்பட்டான் ஜோ. சேர்த்து வைத்த பணத்தையும் எடுத்துக் கொண்டான். வரும்பொழுது ‘வண்ண ஒளிவிளக்குகள்’ எல்லாம் வாங்கி வந்து விட வேண்டும். ராபியையும் உடன் அழைத்து வரவேண்டும் என்பது ஜோவின் திட்டம்.

• ராபியின் துன்பம்

ராபியின் வீட்டில் நிலைமை எதிர்மாறாக இருந்தது. ராபி அழுது கொண்டிருந்தான். அவன் அம்மாவுக்கு உடல் நலமில்லை. அப்பா ஊரில் இல்லை. டாக்டர் மருந்து எழுதிக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார். மருந்து வாங்க அவனிடம் பணம் இல்லை.

• ஜோவின் இரக்கம்

ஜோ ஒரு நிமிடம் ராபியையே பார்த்துக் கொண்டிருந்தான். ஜோ தான் குடிலுக்கு ஆசையாய்ச் சேர்த்த பணத்தை அவனிடம் கொடுக்கிறான். போய் மருந்து வாங்கி வரச் சொல்லுகிறான். அடுத்தநாள் பூசை முடிந்தவுடன், ஜோவிடம் குடில் அமைப்பது முடிந்து விட்டதா? என போதகர் கேட்டார். ஜோவால் நடந்ததைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஜோவைப் பாராட்டுகிறார் போதகர். அவன் செய்தது சரிதான் என்று கூறுகிறார். தன் அறைக்குச் சென்று ஓர் அழகான சின்ன குடில் படத்தையும் ஜோவிடம் கொடுக்கிறார். ‘நிச்சயமாக உங்க வீட்டில்தான் இயேசு பிறக்கப் போறார்; ஏன் என்றால், அவருக்குப் பிடித்தமானதைச் செய்தது நீதான்’ என்று கூறி அவனை அனுப்பி வைக்கிறார். எப்பொழுதும் இல்லாத மகிழ்வு அந்த வருட கிறிஸ்துமஸ் பண்டிகையில் இருந்தது எனக் கதையை முடிக்கிறார் ஆசிரியர்.

### **2.3.4.** குழந்தைத் தொழிலாளர்கள்

குடும்ப வறுமை காரணமாக இளம் வயதிலேயே வேலைக்குச் செல்லும் சிறுவர் சிறுமியரைக் காண்கிறோம். பள்ளிக்குச் செல்ல வேண்டிய பருவத்தில் தொழிலகங்களில் இவர்கள் வாடுகின்றனர். அத்தகைய குழந்தைகளைப் பற்றிய கதை இது;

• பூக்களைப் பறிப்பது வருந்தத்தக்கது

பூங்காக்களில் காணப்படும் 'பூக்களைப் பறிக்காதீர்' என்ற அறிவிப்பை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? நம்மில் பலரும் பலமுறை பார்த்திருக்கிறோம். ஆயினும், அது நம் மனத்தில் என்ன உணர்வை ஏற்படுத்தியது? பெரும்பான்மையும் ஒன்றுமில்லை என்பதுதான் விடையாக இருக்கும். ஏனென்றால் அது ஒரு கட்டளையாக இருப்பதால் நம் உள்ளத்தை ஈர்ப்பதில்லை; அதனால், எந்தவித பாதிப்பும் உண்டாவதில்லை, ஆனால் அதுவே பூக்களைப் பறிப்பது வருந்தத்தக்கது என்ற கதைத் தலைப்பைப் பார்க்கும் போது அது நம் கவனத்தை ஈர்க்கிறதைத் தவிர்க்க முடிவதில்லை. அது நம்மைச் சிந்திக்க வைக்கிறது. மொட்டு மலர்ந்து காயாகிக் கனிந்து விடுவதுதான் அதன் முழுவாழ்வாகும். மலரைப் பறிப்பது அதன் வாழ்நாளைக் குறைப்பது போன்றதுதான். அதனால்தான் 'பூக்களைப் பறிப்பது வருந்தத் தக்கது' என்ற தலைப்பு நம்மைப் பாதிக்கிறது; சிந்திக்கத் தூண்டுகிறது. மலரின் வாழ்வு இடையில் முடிவதே வருந்தத் தக்கது எனின் இளம் வயதில் ஒரு சிறுவனின் வாழ்வு பறிபோவது பெரும் துயரத்தை அளிக்கும். இளம் வயதில் வாழ்வு பறிபோகும் சிறுவன் ஒருவனின் வாழ்க்கையே இந்தக் கதை.

• எபியின் ஆசிரியர்

எபி பத்து வயதுச் சிறுவன். புத்திசாலி, படிப்பில் கெட்டிக்காரன். இவாஞ்சலின் ஆசிரியருக்கு அவனை மிகவும் பிடிக்கும். எபிக்கு தன் ஆசிரியர் மேல் அதிக மரியாதை உண்டு.

• எபியின் கல்வி

எபியின் அப்பா ஒரு கட்டடத் தொழிலாளி. ஒரு நாள் அடுக்குக் கட்டடம் ஒன்றிலிருந்து தவறி விழுந்து விடுகிறார். கை, கால் எலும்புகள் முறிந்து போகின்றன. அப்பா படுத்த படுக்கையாகிறார். குடும்பமும் படுத்து விடுகிறது. எபியின் படிப்பு நின்று போகிறது. அம்மாவும் இவாஞ்சலின் ஆசிரியரும் எபியை ஆறுதல் படுத்துகின்றனர். 'நீதான் பெரிய பையன்; பொறுப்பாக நடந்துக்க! அழுதா எப்படி?' -அவனுக்கு அறிவுரை கூறுகின்றனர்.

• குழந்தைத் தொழிலாளி எபி

குடும்ப பாரம் அவன் தலை மீது விழுகிறது. வேலைக்குப் போகத் தீர்மானிக்கிறான். ஒப்பந்தக்காரரின் தோட்டத்தில் வேலைக்குச் சேர்கிறான். குடும்பச்

சுமை திணிக்கப்படும் ஒரு குழந்தைத் தொழிலாளி ஆகிறான் எபி. அம்மாவின் அரவணைப்பு, ஆசிரியரின் அன்பு ஆகியவை இருந்தாலும் ஏழைகளின் வாழ்விற்கு இதுதான் முடிவு என்பதைக் கார்த்திகா ராஜ்குமார் நன்கு எடுத்துக்காட்டியுள்ளார்,

மலரும் பருவத்திலேயே தம் வாழ்க்கையை இழந்து தவிக்கும் எத்தனையோ குழந்தைத் தொழிலாளர்களை நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறார் இக்கதையின் ஆசிரியர் கார்த்திகா ராஜ்குமார்.

## 2.4. கிறித்தவ நாடகப் படைப்புகள்

கிறித்தவர்கள் தமிழ் நாடக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளனர். கி.பி.16ஆம் நூற்றாண்டில் தமிழகம் வந்த அன்றிக்ஸ் அடிகள், கிறிஸ்துவின் வாழ்க்கையை நாடகமாக்கி, மக்கள் பார்க்கும்படி செய்தார். 17,18ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய 'பள்ளு', 'குறவஞ்சி', 'நொண்டி' முதலிய நாடக வகைகளைக் கையாண்டு கிறித்தவ நாடகங்கள் பல செய்யுளில் எழுதப்பட்டுள்ளன. 'ஞானப்பள்ளு' கிறித்தவப் பள்ளு நூலாகும். இதனைக் கி.பி 1642 இல் ஞானப்பிரகாச அடிகள் இயற்றினார். பெத்லகேம் குறவஞ்சியையும், ஞான நொண்டி நாடகத்தையும் தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார் இயற்றியுள்ளார். மேலும் 'சவிட்டு நாடகம்', 'வாசகப்பா' முதலிய நாடக வகைகளிலும் கிறித்தவர்கள் நாடகங்கள் புனைந்துள்ளனர். இவை மேனாட்டு நாடக வகைகளைத் தழுவியவை. கிறித்தவ நாட்டிய நாடகங்களும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. தற்கால நாடகங்கள் பொதுவாக உரைநடையிலேயே அமைந்துள்ளன.

• பாடுபொருள்

பெரும்பான்மையான கிறித்தவ நாடகங்கள் கிறித்துவின் வாழ்க்கை வரலாற்றைப் பாடுபொருளாகக் கொண்டவை. விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு ரூத், யோசேப்பு போன்ற இறையடியார்களின் வரலாறுகளும் நாடகமாக்கப்பட்டுள்ளன. தோமையர் வரலாறு கற்பனை கலந்து நாடகமாக்கப்பட்டுள்ளது. கிறித்துவின் உவமைக் கதைகளும் நாடகமாக்கப்பட்டுள்ளன. கிறித்தவக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டும் நாடகங்கள் எழுதப்பட்டுள்ளன. சமூகச் சீர்த்திருத்தக் கொள்கைகளை வற்புறுத்தும் நாடகங்களையும் கிறித்தவர்கள் அதிகம் புனைந்துள்ளனர்.

அற்புதா, இரணியல் கலைத்தோழன், இன்னாசி, தி.பாக்கியமுத்து, தி.தயானந்தன் பிரான்சிஸ், தாவீது அதிசயநாதன், பொன்.ரத்தினம், ஜாய்ஸ் பீல், வின்செண்ட், வி.ஆர்.எஸ்.ஜான், வ.ஆசீர்வாதம், சி.ஜே.சாமுவேல் போன்றோர் கிறித்தவ நாடகங்களைப் படைத்துள்ளனர். இங்கு அற்புதாவின் 'நல்ல சமாரியன்' நாடகம் பற்றிக் காண்போம்.

### 2.4.1 மனித உறவுகள்

அன்புதான் மனித உறவுகளுக்கு அடிப்படை. பணம், பதவி, சாதி, மதம் ஆகியன மனிதனைப் பிரிக்கின்றன. அன்பு மட்டுமே மனிதர்களை இணைக்க முடியும் என்பதைப் பின்வரும் கதை உணர்த்துகிறது.

• 'நல்ல சமாரியன்'

நல்ல சமாரியன் கதை விவிலியத்தில் காணப்படுகிறது. இது கிறித்து

சொன்ன உவமைக் கதைகளில் ஒன்று. ‘தமக்கு அயலான் யார்’ என்று வினவப்பட்டதற்கு விடையாக இக்கதையைக் கிறித்து கூறினார். இக்கதையை எளிய நாடகமாக்கியுள்ளார் அற்புதா.

• யூதனும் கள்வர்களும்

இந்நாடகத்தில் ஆறுகாட்சிகள். முதற்காட்சி கள்வர் இருவரின் சுவையான உரையாடலுடன் தொடங்குகிறது. அது ஒரு காட்டு வழிப்பாதை; வழிப்போக்கர் எவரேனும் வருகிறார்களா என்று கள்வர்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். கையில் மூட்டை முடிச்சுகளுடன் ஒரு யூதன் வந்து கொண்டிருக்கிறான். யூதனைத் தாக்கி அவன் உடமைகளைப் பறித்துக் கொண்டு ஓடி விடுகின்றனர். யூதன் குற்றுயிராய்க் கிடக்கிறான்.

• யூதனும் சமாரியனும்

இரண்டாவது காட்சியில், அந்தக் காட்டு வழியில் ஒரு மதக்குரு வருகிறார். அடிபட்டுக் கிடக்கும் யூதனைப் பார்த்தும் பாராமல் சென்று விடுகிறார். மூன்றாவது காட்சியில் ஒரு லேவியன் (லேவியன் = மதக் குருவின் உதவியாளன்) வருகிறான். அவனும் உதவி செய்யாமல் போய் விடுகிறான். இவர்களை அடுத்து வந்த சமாரியன் யூதனுக்கு முதலுதவி செய்கிறான். திராட்சை ரசத்தைக் குடிக்கக் கொடுக்கிறான். அவனை ஒரு சாவடியில் கொண்டுபோய்ச் சேர்க்கிறான். (சாவடி – தங்கும் விடுதி).

அடுத்த காட்சியில், சாவடிப் பொறுப்பாளனுக்கும் சமாரியனுக்கும் நிகழும் உரையாடல் சிறப்பாக அமைந்துள்ளது.

• சமாரியனின் பெருந்தன்மை

சத்திரக்காரன் சமாரியனைப் பார்த்து, ”இவன் யூதனாயிற்றே! சமாரியர்களைக் கண்டால் யூதர்கள் விலகி ஓடுவார்களே! உங்களிடம் தண்ணீர் கூட வாங்கிக் குடிக்க மாட்டார்களே!-” என வினவுகிறான். ஏனெனில், அக்காலச் சமுதாயத்தில் சமாரியர்கள் விலக்கி வைக்கப்பட்டிருந்தனர். ஆபத்துக்குப் பாவமில்லை என்பதை எடுத்துக்கூறி, யூதனைப் பார்த்துக் கொள்வதற்கு இரண்டு வெள்ளிக் காசுகளையும் கொடுத்துவிட்டுச் செல்கிறான் சமாரியன். சத்திரக்காரன் சமாரியனின் பெரிய மனத்தை எண்ணி வியக்கிறான்.

• யூதனின் மனிதநேயம்

ஐந்தாவது காட்சியில், உடல்நலம் தேறிய யூதன், நடந்த நிகழ்ச்சிகளை வியப்போடு கேட்டுக் கொண்டிருக்கிறான். அந்தச் சமாரியனைக் காண்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறான். சமாரியன் வந்த உடன் ஓடிச் சென்று அவனை அணைத்துக் கொள்கிறான். ”ஐயா என்னை விட்டுவிடுங்கள்; நான் தீண்டத் தகாதவன்” என்று கூறி விலகுகிறான் சமாரியன். ”மரத்துப் போன யூதனாய் வாழ்வதை விட

மனிதாபிமான மிக்க ஒரு சமாரியனாய் வாழ்வதே மேல்" என்று கூறி, சமாரியனைத் தன்னுடன் அழைத்துச் செல்கிறான் யூதன்.

• மனிதநேயமில்லா மக்கள்

இறுதிக் காட்சி, யூதனும், சமாரியனும் காட்டு வழியில் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். யூதன் குற்றுயிராய்க் கிடந்த அதே இடம். அங்கு, மத குருவும், லேவியனும், சில யூதர்களும் நின்று கொண்டிருக்கின்றனர். இவர்களைப் பார்த்துக் கேலி பேசுகின்றனர். யூதன் கடவுள் கட்டளைகளையும் சமுதாய நியதிகளையும் மீறி நடப்பதாகக் குற்றம் சுமத்துகிறார்கள், அந்தச் சமாரியனை உதைக்க வேண்டும் என்கிறான் கூட்டத்தில் ஒருவன். அந்தக் கூட்டம் கையிலிருந்த தடிகளோடு அவர்களை நெருங்குகின்றது. சமாரியன் தன் யூத நண்பனை அமைதியாக இருக்கச் சொல்லிவிட்டு, தன் உடைவாளை உருவுகிறான். வாளைக் கண்டவுடன் திரும்பி ஓடுகிறார்கள் வந்தவர்கள்.

• பயனற்ற சடங்குகள்

"உளுத்துப் போன கொள்கைகள் உருப்படாத சடங்குகள் சம்பிரதாயங்கள். . . இந்த மனிதர்களுக்கு மதத்தின் இலட்சியமும் தெரியவில்லை. மானுடத்தின் உயிர்த் துடிப்பும் விளங்கவில்லை." என்று கூறி சமாரியனும், யூதனும் தம் இலட்சியப் பயணத்தைத் தொடர்கின்றனர்.

• மனிதநேயம்

மனித உறவுகளின் அடித்தளங்களையும், ஆணி வேர்களையும் ஆராய்கிற கதை இது. நமக்குப் பகைவர்கள் யார்? நண்பர்கள் யார்? உற்றார் யார்? இவற்றைத் தீர்மானிப்பது எது? எதனையும் எதிர்பாராத மனிதநேயமே இவற்றைத் தீர்மானிக்கிறது. மனித உறவுகள் மதச்சட்டங்களை விட மேலானவை என்பதை இந்நாடகம் உணர்த்துகிறது.

## 2.5 தொகுப்புரை

கிறித்தவர்கள் தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் பல்வேறு வகையில் உதவியுள்ளனர். விவிலிய மொழிபெயர்ப்புகள் தமிழ் உரைநடை வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றியுள்ளன. உரைநடையைப் பரவலாக்கியதற்கும் கிறித்தவர்கள் காரணமாக அமைந்தனர். மேலும், உரைநடையில் படைப்பிலக்கியங்கள் உருவாகவும், பெருகவும் கிறித்தவர்கள் வழிவகுத்தனர். முதல் தமிழ்ப் புதினத்தைப் படைத்தவரும் கிறித்தவரே.

கிறித்தவர் படைத்த கதை இலக்கியங்கள் பெரும்பாலும், விவிலிய மாந்தர் வரலாற்றையும், இயேசு கூறிய கதைகள், அறிவுரைகள் ஆகியவற்றையும் அடிப்படையாகக் கொண்டவை. கிறித்தவக் கோட்பாடுகளை வற்புறுத்தும் வண்ணம் புதினங்களும், சிறுகதைகளும், நாடகங்களும் படைக்கப்பட்டுள்ளன. பெண்கல்வி, சாதி மறுப்பு முதலிய சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களை வற்புறுத்தும் முறையிலும் கிறித்தவப் படைப்புகள் அமைந்துள்ளன. கிறித்தவம் வற்புறுத்தும் மன்னிப்பு, எளிமை, விட்டுக் கொடுத்தல், இரக்கம், அன்பு முதலிய தனி மனித அறங்களை உணர்த்தும் முறையிலும் கிறித்தவ உரைநடை இலக்கியங்கள் அமைந்துள்ளன.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 3

## P20243 கிறித்தவச் சிற்றிலக்கியங்கள்

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

இந்தப் பாடம் கிறித்தவச் சிற்றிலக்கியங்களை அறிமுகப்படுத்துகிறது. குறவஞ்சி, கலம்பகம், அந்தாதி, சதகம், அம்மானை முதலியன சிற்றிலக்கிய வகைகளாகும். ஒவ்வொரு வகைக்கும் ஒரு கிறித்தவச் சிற்றிலக்கிய நூல் தெரிந்து கொள்ளப்பட்டு அவை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

### இந்தப் பாடத்தைக் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

கிறித்தவர் கையாண்ட சிற்றிலக்கிய வடிவங்கள் பற்றியும், கிறித்தவச் சிற்றிலக்கிய முன்னோடிகள் பற்றியும் அறிந்து கொள்ள இயலும். கிறித்தவச் சிற்றிலக்கியங்களின் அமைப்பு, பாடுபொருள் போன்றவற்றையும் அறிந்து கொள்ளலாம். தமிழ் பக்தி இலக்கிய மரபைக் கிறித்தவக் கவிஞர்கள் போற்றுவதையும் காணமுடியும்; தனித்தன்மைகளையும் இனம் காண முடியும்.

## 3.0 பாட முன்னுரை

இலக்கியத்தின் வகையும் வடிவும் காலந்தோறும் மாறுவன. அரசியல், சமுதாயம், பண்பாட்டு நிலைகளுக்கு ஏற்ப இவை மாறுவதுண்டு. 17, 18, 19ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய ‘சிற்றிலக்கியங்கள்’அமைப்பாலும் பண்புகளாலும் காப்பியங்களிலிருந்து வேறுபட்டவை; கற்பனை மிகுந்தவை; கடவுளர், மன்னர் முதலியோரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்படுபவை. இவற்றைப் ‘பிரபந்தங்கள்’ என்ற பெயரால் குறிப்பிடுவதுண்டு.

தமிழில் 96 வகையான சிற்றிலக்கியங்கள் உள்ளதாகக் குறிப்பிடும் மரபு உள்ளது. பாட்டியல் எனப்படும் இலக்கண நூல்கள் சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணம் கூறுகின்றன. பண்டைத் தமிழ் இலக்கியக் கூறுகளாகிய தூது, உலா போன்றவை பிற்காலத்தில் தனித்தனி இலக்கிய வகைகளாக வளர்ந்துள்ளன. ‘கலம்பகம்’ என்னும் சிற்றிலக்கியம் பல கூறுகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. ஆயிரக்கணக்கான சிற்றிலக்கியங்கள் தமிழில் எழுந்துள்ளன. பெரும்பான்மையான சிற்றிலக்கியங்கள் கடவுளரைப் பாடும் பக்திச் சிற்றிலக்கியங்களாகவே அமைந்துள்ளன.

அந்தாதி, அம்மானை, உலா, கலம்பகம், குறவஞ்சி, சதகம், தூது, பதிகம், பள்ளு, பிள்ளைத் தமிழ், மாலை முதலிய பல்வேறு சிற்றிலக்கிய வகைகளில் கிறித்தவச் சிற்றிலக்கியங்கள் எழுதப்பட்டுள்ளன. கும்மி, சிந்து, புலம்பல், வண்ணம் முதலிய வடிவங்களையும் கிறித்தவப் புலவர்கள் கையாண்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட சிற்றிலக்கிய வகைகளுள், அந்தாதி, அம்மானை, கலம்பகம், குறவஞ்சி, சதகம் ஆகிய ஐந்து சிற்றிலக்கிய வகைகள் மட்டும் இப்பாடப்பகுதியில் விரிவாக விளக்கப்படுகின்றன. ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு சிற்றிலக்கிய நூல் தெரிந்து கொள்ளப்பட்டு விளக்கப்படுகிறது.

# 3.1 கிறித்தவச் சிற்றிலக்கியங்கள்

பக்தி உணர்வை வெளிப்படுத்துவதற்குத் தமிழ் சிறந்த மொழியாகும். எனவே, ஒவ்வொரு சமயத்தவரும் கடவுளரைப் பாடுவதற்கும். சமயக் கோட்பாடுகளை விளக்குவதற்கும் பக்தியை வெளிப்படுத்துவதற்கும் பலவகை இலக்கியங்களைத் தமிழில் படைத்து வந்துள்ளனர். இவ்வகையில் கிறித்தவச் செய்திகளைக் கொண்ட சிற்றிலக்கியங்களும் தமிழில் தோன்றியுள்ளன.

கிறித்தவச் சிற்றிலக்கியங்கள், கிறித்துப் பெருமானைச் சிறப்பித்துப் பாடுகின்றன. இயேசுவின் அன்னையையும், தந்தையையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்ட சிற்றிலக்கியங்கள் தோன்றியுள்ளன. இறையடியார்களின் வரலாறுகளும் சிற்றிலக்கியங்களாகப் பாடப்பட்டுள்ளன. விவிலியச் செய்திகளை எடுத்துரைக்கவும், கிறித்தவக் கோட்பாடுகளை விளக்கவும் சிற்றிலக்கியங்கள் பல தோன்றியுள்ளன. தம் குறைகளுக்கு வருந்தி, பக்தியை வெளிப்படுத்தி, நிலையான வாழ்வை நல்க, இறையருளை வேண்டும் பாங்கு கிறித்தவச் சிற்றிலக்கியங்களில் மிகுந்துள்ளது. இயேசு பெருமானைத் தமிழ் மண்ணுக்கும், தமிழ்ப் பண்பாட்டு மரபுகளுக்கும் உரியவர் என்பதை விளங்கச் செய்வதில் கிறித்தவச் சிற்றிலக்கியங்களுக்கும் பெரும் பங்கு உண்டு.

### 3.1.1 கிறித்தவச் சிற்றிலக்கிய முன்னோடிகள்

கிறித்தவச் சிற்றிலக்கிய முன்னோடிகளாக வீரமாமுனிவரையும், வேதநாயக சாஸ்திரியாரையும் குறிப்பிடலாம். இவர்கள் இருவரும் தமிழிலக்கிய வளத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தவர்கள்.

- வீரமாமுனிவர்

வீரமாமுனிவரின் தாய்மொழி தமிழ் அல்ல. ஆயினும், கடும் முயற்சியால் தமிழில் புலமை எய்தி, பல்வகைத் தமிழ்ப் பணிகளைச் செய்தவர். திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, அன்னை அழுங்கல் அந்தாதி, அடைக்கல மாலை முதலிய சிற்றிலக்கியங்களை இவர் படைத்துள்ளார். கிறித்தவக் கோட்பாடுகளுக்கு ஏற்ப, சிற்றிலக்கிய வடிவங்களைத் தேவையான மாற்றங்களுடன் கையாண்டுள்ளார்.

- வேத நாயக சாஸ்திரியார்

வேதநாயக சாஸ்திரியார் குறவஞ்சி, ஞான அந்தாதி, வேத வினா விடை அம்மானை, ஞான உலா, பெண்டிர் விடு தூது, ஜெப மாலை, பராபரன் மாலை, கால வித்தியாச மாலை முதலிய சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளார். சாஸ்திரியாரின் சிற்றிலக்கியப் படைப்புகள் தனித்தன்மை கொண்டவை; கிறித்தவ தத்துவ விளக்கமாக

அமைந்தவை.

• பிற முன்னோடிகள்

மாயூரம் வேதநாயகம் பிள்ளை, அந்தோணிக் குட்டி அண்ணாவியார், சதாசிவம் பிள்ளை, சாமிநாதப் பிள்ளை, பொன்னுசாமி, திட்டூர் தேசிகர், ஜி.எஸ்.வேதநாயகர், சுவீகரன் ஆகியோர் குறிப்பிடத்தக்க சிற்றிலக்கியப் படைப்புகளை அளித்துள்ளனர்

மேலும், சூ.தாமஸ், பேராசிரியர் பொன்னு, ஆ.சத்திய சாட்சி, பவுல் ராமகிருட்டினர், பேராசிரியர் தாவீது அதிசயநாதன், பி.கே.ஜார்ஜ் போன்றோர் இருபதாம் நூற்றாண்டுக் கிறித்தவச் சிற்றிலக்கிய வளர்ச்சிக்குத் துணை புரிந்துள்ளனர்.

**3.1.2** கிறித்தவச் சிற்றிலக்கியங்களின் தனித்தன்மைகள்

1) கிறித்தவ சமய மரபுகளுக்குப் பொருந்தாத சிற்றிலக்கியக் கூறுகளைக் கிறித்தவப் புலவர்கள் தவிர்த்துள்ளனர்; சிலவற்றைப் புதிதாகச் சேர்த்துள்ளனர். சான்றாக, திருக்காவலூர்க் கலம்பகத்தில் வீரமாமுனிவர், ‘ஊர்’, ‘களி’ முதலிய கூறுகளை நீக்கியுள்ளார்; ‘சமூக உல்லாசம்’, ‘ஜெபமாலை’ முதலிய கூறுகளையும் புதிதாகச் சேர்த்துள்ளார். உலா இலக்கியங்களில் ஏழு வகையான பருவப் பெண்டிர் பற்றிய வருணனைகள் இடம் பெறுவதுண்டு. வேதநாயகம் சாஸ்திரியாரின் ‘ஞான உலா’ வில் ஏழு வகை பருவப் பெண்டிர் குறித்த வருணனைகள் இடம் பெறவில்லை. பள்ளு இலக்கியங்களில் மூத்த பள்ளியும் இளைய பள்ளியும் ஏசிக் கொள்ளும் பகுதி இடம் பெறும். ‘ஞான உலா’ வில் இத்தகைய பகுதி இடம் பெறவில்லை.

2) கிறித்தவச் சிற்றிலக்கியப் புலவர்கள், இறை மாந்தர்களின் உடல் அழகைச் சிறப்பித்துப் பாடுவதை விடவும், அவர்தம் பண்பு நலன்களைச் சிறப்பித்துப் பாடுவதற்கு முதன்மை அளித்துள்ளனர். இது போன்றே, இறைவன் குடிகொண்டிருக்கும் தலப்பெருமையைப் பற்றி மிகுதியாகப் பாடாமல் இறைவனின் சிறப்புகளை மிகுதியும் பாடியுள்ளனர்.

3) தமிழ் பக்தி இலக்கிய மரபில், நாயக – நாயகி பாவம் (Bridal Mysticism) போற்றப்பட்டுள்ளது. இதனைக் கிறித்தவப் புலவர்கள் பின்பற்றியுள்ளனர். விவிலியத்திலும் இந்த மரபு காணப்படுகிறது. நாயக – நாயகி பாவம் என்பது கடவுளைக் காதலனாகவும், தன்னைக் காதலியாகவும் உருவகப்படுத்திக் கொண்டு பாடுவதாகும்.

4) கிறித்தவச் சிற்றிலக்கியங்கள் பல உருவகங்களாக அமைந்துள்ளன. பெத்லகேம் குறவஞ்சி, முக்தி வழி அம்மானை முதலிய நூல்கள் முற்றுருவகப் பாங்கில் (Allegory) அமைந்துள்ளன.

5) வேதநாயக சாஸ்திரியாரின் படைப்புகள் பல ‘ஞான’ என்ற அடைமொழி பெற்று விளங்குகின்றன.

## 3.2 பெத்லகேம் குறவஞ்சி

‘குறவஞ்சி’ சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகும். ‘வஞ்சி’ என்ற சொல் பெண்ணைக் குறிக்கும். குறவஞ்சி என்றால் ‘குறப்பெண்’ என்பது பொருள். குறவஞ்சி இலக்கியத்தில் இடம் பெறும் கதை மாந்தர்களுள் குறப்பெண் சிறப்பிடம் பெறுகிறாள். கதைத் தலைவர் கடவுளராகவோ மன்னராகவோ இருப்பர். குறவஞ்சி இலக்கியம் நாடகப் பாங்கான கதை அமைப்பைக் கொண்டது; ஆங்காங்கு இசைப் பாடல்கள் கலந்து எழுதப்படுவதாகும். கிறித்தவக் குறவஞ்சி நூல்களுள் ‘பெத்லகேம் குறவஞ்சி’ (1800) தனிச் சிறப்பு வாய்ந்தது. இதனை எழுதியவர் வேதநாயகம் சாஸ்திரியார். அண்மையில் ‘தாமஸ் மலைக் குறவஞ்சி’ என்ற நூலும் வெளிவந்துள்ளது. இதனை இயற்றியவர் பேராசிரியர் சத்தியசாட்சி. 18ஆம் நூற்றாண்டில் எழுந்த ‘மருதப்பக் குறவஞ்சி’யில் கிறித்தவக் கோட்பாடுகள் இடம் பெற்றுள்ளன.

• ஆசிரியர்

வேத நாயகம் சாஸ்திரியார், தஞ்சை சரபோஜி மன்னரின் அவைக்களப் புலவராக இருந்தவர். நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ளார். இவர் ஞான அந்தாதி, ஞான உலா, பெண் விடு தூது, பராபரன் மாலை முதலிய சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளார். இவற்றில் கும்மி, ஏத்தப்பாட்டு, புலம்பல் முதலிய நாட்டுப்புற இலக்கிய வடிவங்களைக் கையாண்டுள்ளார்.

### 3.2.1 பெத்லகேம் குறவஞ்சி – அமைப்பும் பொருளும்

பெத்லகேம் குறவஞ்சி இறைவாழ்த்து, இயேசுவின் உலா, தேவ மோகினி காதல், குறத்தி குறி கூறல், சிங்கன் வருகை என்னும் ஐந்து பெரும் பகுதிகளைக் கொண்டது; பாயிரம் முதலாக வாழ்த்து ஈறாக 72 உட்பிரிவுகளைக் கொண்டது

• இறைவாழ்த்து

இப்பகுதியில் வரும் கடவுள் வாழ்த்து, சரணத் தரு, தோடையம், மங்களம், தோத்திரத் தரு ஆகியன இறைவாழ்த்தாக அமைந்துள்ளன. ‘மங்களம்’ என்னும் பகுதியில் இடம் பெற்றுள்ள,

சீரேசு நாதனுக்கு செய மங்களம்,

ஆதி திரியேக நாதனுக்குச் சுப மங்களம்

எனத் தொடங்கும் பாடல் இன்றளவும் கிறித்தவர் வழிபாட்டில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

(சீரேசு = சீர்+இயேசு, சிறப்பு வாய்ந்த இயேசு; திரி = மூன்று, ஏகம் = ஒன்று, மூவொரு கடவுள்)

• இயேசுவின் உலா

கட்டியங்காரனாக யோவான் வருகிறார். அவர் இயேசு உலா வரப் போவதை முன்னரே அறிவிக்கிறார். இயேசுவின் பெருமைகளை எடுத்துரைக்கிறார். இயேசுவின் வருகைக்காக எருசலேம் நகரம் விழாக் கோலம் கொள்கிறது. நகர மாந்தர்களும், தேவத்தூதர்களும் கூடுகின்றனர்; திருச்சபை கன்னியரும் கூடுகின்றனர்; இயேசு உலா வருகிறார்.

• இயேசுவைக் கண்ட மகளிர்

உலா வரும் இயேசுவைப் பார்த்து அனைவரும் வியக்கின்றனர். ஒளி பொருந்திய மகளிர் தம் கைகளில் உள்ள இலைக் கொத்துக்களை அசைக்கின்றனர்: ‘ஓசன்னா’ என்ற வாழ்த்தொலியை எழுப்புகின்றனர்.

தேசு மாதர்கள் பாசமாய்

வாச மேவு விலாச மரக்கிளை

மாசிலாது எடுத்து ஆசையா

யோசன்னா, பவ நாசன்னா என

ஓசையாய் கிறிஸ்தேசுவே

நீச வாகன ராசனே எங்கள்

நேசனே எனப் பேசவே – பவனி

(பவனிச் சிந்து – பாடல் 3)

இவ்வாறு, இயேசு பெருமான் உலா வருகிறார்.

(தேசு = ஒளி; பவ நாசன் = பாவத்தை அழித்தவன்; நீச வாகனம் = கழுதை; ஓசன்னா = மகிழ்ச்சியில் எழுப்பப்படும் குரல் (மூலம் : எபிரெய மொழி)

• கதைத் தலைவி அறிமுகம்

சீயோன் மகள் என்னும் தேவ மோகினி இக்கதையின் தலைவி. திருச்சபையே தலைவியாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. தலைவி அழகு நிறைந்தவள்; பக்தி மிகுந்தவள்; கருணை மிக்கவள். இயேசுவைக் கண்டு காதல் கொள்கிறாள். காதல் மிகுதியால் நிலவு சுடுகிறது; தென்றலும் சுடுகிறது. அவற்றைப் பழித்துப் பேசுகிறாள்;

மன்மதனையும் பழித்துப் பேசுகிறாள். இத்தகைய தலைவியின் அழகினை வேதநாயகம் சாஸ்திரியார் மிகச்சிறப்பாகப் பாடியுள்ளார்.

வில்லைப் புருவம் அமைத்து எல்லைப் பொருது முத்துப்

பல்லினாள் – வேத

மேன்மை அனைத்தும் கற்று ஞான மனத்தைப் பெற்ற

சொல்லினாள்

(நாட்டியத்தரு – பாடல் – 3)

என, தலைவியின் அழகை வருணிக்கிறார்.

• குறவஞ்சியின் வருகை

தலைவி உணவும் உறக்கமும் இன்றி, தலைவனை நினைத்து ஏங்கித் தவிக்கிறாள். இவ்வேளையில் குறத்தி (சிங்கி) வருகிறாள். இடுப்பில் கூடையுடன், கையில் கோலுடன் அவள் ஒய்யாரமாக நடந்து வருகிறாள்.

சிங்கி வந்தனளே – விசுவாசச்
சிங்கி வந்தனளே
(சிங்கி வரவுச் சிந்து – பல்லவி)

என, குறத்தியின் வருகையைச் சாஸ்திரியார் பாடுகிறார்.

• நாடு, நகர், மலைவளம்

சிங்கியின் வரவு கண்டு, தலைவி அவளை அழைத்து வருமாறு சொல்கிறாள். குறத்தி தன்னுடைய நாட்டுவளம், நகர் வளம், மலை வளம் ஆகியவற்றை நயம்பட எடுத்துக் கூறுகிறாள். அப்பொழுது விவிலியச் செய்திகளையும், இயேசுவின் சிறப்புகளையும், கிறித்தவர்களின் மேன்மைகளையும் குறத்தி பலவாறு எடுத்துரைக்கிறாள். தம் தலப் பெருமை பற்றிக் கூறும் குறத்தி பின்வருமாறு கூறுகிறாள். இப்பகுதியில் இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன.

நாசரேத்து ஆண்டவனார் வாழ்ந்த தலம் அம்மே

தேசிகனார் பாடுபட்டு மரித்த தலம் அம்மே

(தலவளம் – பாடல் – 4)

(நாசரேத்து = இயேசுவின் ஊர்; தலம் = ஊர்; தேசிகனார் = கிறிஸ்துவைக் குறித்து வருகிறது)

மேலும் ஏசுவின் அருளால் நிகழ்ந்த அற்புதங்களைச் சுட்டிக் கூறுகிறாள்.

• குறத்தி குறி கூறல்



இயேசுவின் பெருமைகளைக் கேட்கக் கேட்கத் தலைவி நாணம் கொண்டு முகம் சிவக்கிறாள். தன் கரத்தினைக் குறி சொல்லும் குறத்தியிடம் நீட்டுகிறாள். தலைவியின் கரங்களைப் புகழ்ந்து, தன்குறி பொய்க்காதிருக்கக் கடவுளை

வணங்குகிறாள் குறத்தி. பின் குறி சொல்லத் தொடங்குகிறாள். ‘பெத்லகேம் நாதர் உன்னை மணம் கொள்ள நாளை வருவார்; சேலை வரும்; மாலை வரும்; சிலுவை முத்திரை மோதிரமும் வரும்’ என குறத்தி குறி சொல்கிறாள். இதனைக் கேட்ட தலைவி மகிழ்ச்சி அடைகிறாள். குறத்திக்குப் பொன்னும் பொருளும் பரிசாகக் கொடுத்து அனுப்பிவைக்கிறாள்.

• சிங்கன் வருகை

சிங்கன் பெத்லகேம் நாதனைப் பாடிக் கொண்டே வருகிறான். பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை முதலிய பாச வலைகளில் சிக்கித் தவிக்கும் மக்களைச் சேர்க்கும் ‘ஞான வலை’ அவனிடம் இருக்கிறது. பறவை வேட்டையில் சிங்கனுக்கு எதுவும் கிடைக்கவில்லை. சிங்கியின் நினைவு வருகிறது. குறத்தியைத்தேடி, சிங்கன் வருகிறான். பின்னர் சிங்கன் சிங்கியைக் கண்டுவிடுகிறான். அவர்களிடையே நிகழும் உரையாடல் சுவையாக அமைந்துள்ளது.

இத்தனை காலமாய் என்னிடம் கேளாமல்

எங்கே நீ சென்றனை சிங்கி? – மா

பெத்தலே கேம் நகர் சீயோன் குமாரிக்குப்

பத்திக்குறி சொலச் சிங்கா

(சிங்கன் சிங்கியோடு சம்பாஷித்தல் – பாடல் -1)

(பத்தி = பக்தி)

இவ்வாறு இருவரும் உரையாடுகின்றனர்.

குறத்தி அணிந்துள்ள பல்வேறு அணிகலன்களையும் பார்த்து வியந்து சிங்கன் வினவுகிறாள். அதற்குச் சிங்கி நயமாகப் பதிலளிக்கிறாள். பின்னர் இருவரும் கடவுளைப் போற்றுகின்றனர், இறுதியில் வாழ்த்து அமைந்துள்ளது.

## 3.3 திருக்காவலூர்க் கலம்பகம்

கிறித்தவக் கலம்பகங்களாக ஆறு கலம்பகங்கள் கிடைக்கின்றன. சாமிநாதப் பிள்ளை இயற்றிய 'நசரைக் கலம்பகம்' (1885), ஜெகராவு முதலியார் எழுதிய 'திரு எண்ணூர்க் கலம்பகம்' (1914), பவுல் இராம கிருட்டினர் எழுதிய 'ஆதிக் கலம்பகம்' (1977) ஆகியன குறிப்பிடத்தக்கவை. இங்குப் பாடமாக அமைந்துள்ளது திருக்காவலூர்க் கலம்பகம். இதனை வீரமாமுனிவர் இயற்றினார். இந்நூல் 1843இல் வெளிவந்துள்ளது.

- ஆசிரியர்

வீரமாமுனிவர் இத்தாலி நாட்டினர். சமயப் பணிக்காகத் தமிழகம் வந்தவர்; தேம்பாவணி என்னும் காப்பியத்தைப் படைத்தவர். மாலை, அந்தாதி, அம்மானை வகை சிற்றிலக்கியங்களையும் படைத்தவர். தற்காலத் தமிழ் உரைநடையின் முன்னோடிகளில் ஒருவர். இவர் சதுரகராதியையும் வெளியிட்டுள்ளார். திருக்குறளை இலத்தீனில் மொழிபெயர்த்துள்ளார்.

### 3.3.1 திருக்காவலூர்க் கலம்பகம் – அமைப்பும் பொருளும்

திருக்காவலூர் என்பது திருச்சி – அரியலூர் அருகே உள்ள ஒரு சிற்றூர். வீரமாமுனிவர் இங்குக் கிறித்தவச் சபையைத் தோற்றுவித்து, ஓர் ஆலயமும் கட்டினார். இவ்வூருக்குத் 'திருக்காவலூர்' எனப் பெயரும் வழங்கினார். திருக்காவலூரில் கோவில் கொண்டுள்ள அடைக்கல மாதாவே இக்கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவி ஆவார். இந்நூலில் அன்னையின் பெருமைகளும், கிறித்துவின் புகழும் கூறப்பட்டுள்ளன.

- அன்னையின் பெருமை

வீரமாமுனிவர் அன்னை மீது கொண்ட பக்தி உணர்வு, கிறித்தவக் கோட்பாடுகளில் உள்ள உறுதி ஆகியன இந்நூலில் சிறப்பாக வெளிப்படுகின்றன. தாமரையை ஒத்துள்ள அன்னையின் திருவடிகளை நிலா சுமந்து கொண்டிருக்கிறது. அதைப் போல வண்டாய் மாறி, புகழ்ந்து பாடிக் கொண்டு அன்னை அணிந்துள்ள மாலையில் உள்ள தேனை உண்ண மாட்டேனா! எனப் பலவாறு ஏங்கிப் பாடுகிறார் புலவர்.

தாளணிந்த மதிமுதலாத் தமியனுமக்

கமலத்தாள் தாங்கிலேனோ

கோளணிந்த குழலணிதார் குடைவண்டார்ப்ப

புகழ்பாடி மதுவுண் ணேனோ

(பாடல் எண் – 36)

(மதி = நிலவு; தமியன் = வறியவன்; கமலத்தாள் = தாமரையைப் போன்ற திருவடி; கோள் = விண்மீன்)

• அன்னையின் கையில் ஜெபமாலை

அன்னையின் கையில் ஜெபமாலை உள்ளது. அதனை வியந்து போற்றுகிறார் புலவர். எளியவர்கள் மீட்புப் பெற வானோர்கள் இட்ட வடமோ, வினை தீர்க்கும் பாசமோ! அன்புடைய உயிர்களை இணைக்கும் பிணையோ! என ஜெப மாலையைப் புகழ்ந்து போற்றுகிறார் புலவர்.

‘எளியவர்க் கிரங்கி கதியேற வானோர் இடும் வடமோ?

தெளிவற்ற தீவினை கொய்தெறியும் பாசமோ தேவரருளால்

களி அன்பருயிரைப் பிணிக்கும் தளை கொலோ’

(பாடல் எண் – 65)

(வடம் = கயிறு; தீவினை = பாவவினை; தளை = பிணை; கதி = மீட்பு)

• அன்னை தரும் நன்மைகள்

அன்னையை நாடுவோர் அடையக் கூடிய நன்மைகளை எடுத்துக்கூறுகிறார் புலவர். அன்னையின் அருள் நிலைத்திருப்பதால்தான் பக்தர்கள் வருத்தம் இல்லாமல் உள்ளனர் என்றும், பயிர்கள் செழிக்கின்றன என்றும் கூறுகிறார். இனிய அமுதாக, பாவம் போக்கும் மருந்தாக, முக்திக்கு வழித்துணையாக நம்மைக் காக்கவே காவலூரில் அன்னை தங்கியிருக்கிறாள் என்கிறார். கருணை கொண்டவள்; மீட்பு நல்குபவள்; கனிவு உடையவள்; முடிவில்லாதவள்; எனவே, அன்னையின் பொலிவுடைய திருவடிகளை நாளும் தொழ வேண்டும் என மக்களை அழைக்கிறார் வீரமாமுனிவர்.

கருணையள் கதியினள் கனிவினள் கடையிலள்

பூவடி நாளும் பணிந்து தொழுவீர்.

(பாடல் எண் – 38)

• அன்னையின் அழகுக் கோலம்

அன்னை தேரில் வரும் காட்சியை அழகுறப் பாடுகிறார் புலவர். விண்மீனைத் தலையில் சூடி, சந்திரனைத் திருவடிகளில் ஏந்தி, சூரியனை ஆடையாக உடுத்தி ஒளி சிறந்து விளங்கும் அன்னையின் தோற்றத்தைப் பக்தி உணர்வு பொங்கப் பாடுகிறார்

புலவர்.

இங்ஙனம், அன்னையின் சிறப்புகளைப் பலவாறாகப் பாடி மகிழ்கிறார் வீரமாமுனிவர்.

## தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 3.4 தேவமாதா அந்தாதி

பதினைந்திற்கும் மேற்பட்ட கிறித்தவ அந்தாதிகள் கிடைத்துள்ளன. விவிலியச் செய்திகளை அடியொற்றி அந்தாதிகள் சில அமைந்துள்ளன. இயேசு பெருமான், மற்றும் மரியாள் வாழ்வைக் கூறும் அந்தாதிகள் உள்ளன. கடவுளின் திருவருளைப் போற்றியும் நாடியும் கிறித்தவ அந்தாதிகள் அமைந்துள்ளன. வீரமாமுனிவர், அன்னை அழுங்கல் அந்தாதியைப் பாடியுள்ளார். ஜே. ஆர். அர்னால்டு எழுதிய 'வெல்லை அந்தாதி'யும், துரைசாமி எழுதிய 'வேதபுரியந்தாதி'யும் குறிப்பிடத்தக்கவை. யூ.தாமஸ் என்பவர் 'வேளையந்தாதி' பாடியுள்ளார். இங்குப் பாடமாக இடம் பெறும் தேவமாதா அந்தாதி (1873) மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் இயற்றியது. இவர் திருவருள் அந்தாதியையும் (1873) எழுதியுள்ளார்.

- ஆசிரியர்

வேதநாயகம் பிள்ளை மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றியவர். தமிழில் முதல் தினத்தைப் படைத்தவர். 'சர்வசமய சமரசக் கீர்த்தனைகள்' என்னும் நூலையும் வெளியிட்டுள்ளார். அறம் வலியுறுத்தும் 'நீதிநூல்' இவர் படைப்பாகும். இவர் பெண் விடுதலைக்காகப் பாடுபட்டார்; பெண் கல்வியை வற்புறுத்தினார். இதற்கென 'பெண் மதி மாலை', 'பெண் கல்வி', 'பெண் மானம்' முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

### 3.4.1 தேவமாதா அந்தாதி – அமைப்பும் பொருளும்

தேவமாதா அந்தாதி நூறு வெண்பாக்களால் ஆனது. இதனை 'நூற்றந்தாதி' எனலாம். நூலின் தொடக்கத்தில் காப்புச் செய்யுள் அமைந்துள்ளது. இந்த நூலினை இரண்டாகப் பகுக்கலாம். முதற்பகுதியில் அமைந்த வெண்பாக்கள் பல்வேறு பெயர்களில் வழங்கும் மாதாவின் பண்புகளைப் பேசுகின்றன. எஞ்சியுள்ள பாக்கள் பொதுவாக அன்னையின் அருளுக்காக ஏங்கும் பக்தனின் இறை வேண்டலாக அமைந்துள்ளன.

- மாதா புகழ் பாடுதல்

மாதாவின் அருளை வேண்டும் புலவர், புத்தமுதே, கதி நிலையே, சோதி உடு சேகரியே, ஓதற்கு அரியாளே, துறவோர் நாடும் சுகமே, மறை புகழும் மாண்பாளே எனப் பல்வேறு அடைமொழிகளால் மாதாவைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

- குறை நினைந்து வேண்டுதல்

தன் குறைகளை நினைத்து வருந்தி, தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு இறைவனிடம் வேண்டுகிறார் புலவர். இப்பாடல்களில் பக்திச் சுவை மிகுந்துள்ளது. என்னிடம் செல்வம் இல்லை; நற்குணம் இல்லை; ஞானமும் இல்லை; ஆயினும்

உன்னை நம்பியிருக்கிறேன் என்று பாடுகிறார் புலவர்.

'தானம்இலேன் சாந்தம் இலேன் சற்குணங்கள் ஏதுமிலேன்

ஞானம் இலேனேனும் உனை நம்பினேன்'

(பாடல் – 24)

மேலும், தான் பேசுவது பொய், செய்வது பாவம், ஏசுவது மறையை என்றும், என்னிடம் நலம் இல்லை, ஞானம் இல்லை, வினை நீக்க வலிமை இல்லை. ஆயினும் தன்னைக் கைவிடாது ஏற்குமாறு வேண்டுகிறார் புலவர்.

பேசுவதெல்லாம் பொய்யே பேணுவதெல்லாம் பவமே

ஏசுவதெல்லாம் மறையை என் தாயே-காசினியில்

நீயே இரங்கி நெறியை அருளாயேல்

நாயேனுக்கு (உ)ண்டோ நலம்

(பாடல் – 81)

நலம் இல்லேன் ஞானம் இல்லேன் நை வினையை நீக்கப்

பலம் இல்லேன் பண்பில்லேன் பாடும் – புலம் இல்லேன்

என் தாயே நீ தான் இனியரையே கைவிடேன்

என்றாயே ஆள்வாய் இனி.

(பாடல் – 82)

(காசினி = உலகம்; நாயேன் = நாயைப் போன்றவன்; நைவினை = துன்ப வினை; புலம் = அறிவு)

• இலக்கிய நயம்

தேவமாதா அந்தாதி பக்திச்சுவை மிகுந்து விளங்குவதைப் போன்றே, இலக்கியச் சுவையும் கொண்டு விளங்குகிறது.

நீர் இல்லாமல் தாமரை தோன்றாது; வான் இல்லாமல் ஞாயிறும் நில்லாது. மாதாவே நீ பிறவாதிருந்தால், இயேசு பெருமான் யாரிடத்தில் அவதரிப்பார் என

வினவுகிறார் வேதநாயகம் பிள்ளை.

யார் இடத்தில் அம்மா நீ பண்டு பிறவாதிருந்தால்

ஆரிடத்தில் ஐயர் அவதரிப்பார்-நீரிடத்தில்

அல்லாது (உ)ண்டாமோ அரவிந்தம் வானில் அன்றி

நில்லாது சூரியனும் நேர்.

(பாடல் – 62)

(அரவிந்தம் = தாமரை)

தாய்ப்பசு, பொய்க் கன்றுக்கும் பால் பொழியும்; நான் உனக்கு மெய்க் கன்று. எனவே, என்னைக் கைவிடுதல் நீதியோ? எனக் கேட்கிறார் புலவர். மேலும், எங்கும் அகண்ட பரிபூரணராய் விளங்கும் இயேசுவை எப்படி உன் வயிற்றில் அடக்கினாய்; எனக்குப் புகல்வாயாக! எனவும் நயமாகக் கேட்கிறார் வேதநாயகம் பிள்ளை. இவ்வாறு, மாதாவின் புகழை இலக்கிய நயத்தோடு பாடியுள்ளார் வேதநாயகம் பிள்ளை.

# 3.5 அமலகுரு சதகம்

சதகம் நூறு பாடல்களைக் கொண்ட சிற்றிலக்கிய வகையாகும். ‘சதம்’ என்னும் வட சொல்லுக்கு ‘நூறு’ என்பது பொருள். இதன் காரணமாகவே இவ்வகை நூல்கள் ‘சதகம்’ எனப் பெயர் பெற்றன என்பர். ‘சதம்’ என்ற சொல்லுக்கு ‘நிலைத்திருப்பது’, ‘இறுதி’ ஆகிய பொருள்களும் உண்டு. தமிழில் இருநூறுக்கும் மேற்பட்ட சதக இலக்கியங்கள் தோன்றியுள்ளன. கிறித்தவப் பொருண்மை கொண்டவையாகப் பத்திற்கும் மேற்பட்ட சதகங்கள் தமிழில் எழுந்துள்ளன. அர்னால்டு சதாசிவம் பிள்ளை எழுதிய இயேசு நாதர் திருச்சதகம் (1850), மரிய சவேரிப் பிள்ளை எழுதிய மரியம்மன் சதகம் (1872), மாசில்லாமணி இயற்றிய சத்திய சபை விளக்க சதகம் (1875) முதலியன குறிப்பிடத்தக்கன. பேராசிரியர் தாவீது அதியசநாதன் திருக்குமார சதகத்தை எழுதியுள்ளார். இனி, ஜி.எஸ். வேதநாயகர் இயற்றிய அமலகுரு சதகம் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன.

- ஆசிரியர்

ஜி.எஸ். வேதநாயகர், ‘சற்குரு சதகம்’ என்னும் சதக நூலையும் படைத்துள்ளார். மேலும், ஆடவர் கும்மி, மாதர் கும்மி, நெஞ்சுருவு கட்கம், இருமை நெறிக்குறள், நித்தியானந்த காதல் உள்ளிட்ட பல நூல்களையும் எழுதியுள்ளார். இவர் சென்னையில் திருச்சபை குருவாகப் பணியாற்றியவர். இவரது அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகள் இப்படைப்புகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன.

### 3.5.1 அமலகுரு சதகம் – அமைப்பும் பொருளும்

அமலகுரு சதகம், நீதி நூல் வகையைச் சேர்ந்ததாகும். ‘அமல’என்பதற்குக் ‘குற்றமற்ற’ என்பது பொருளாகும். (அமலம் = அ + மலம்; அ – எதிர்மறை முன்னொட்டு, மலம் – குற்றம்) குற்றமற்ற குருவாகிய இயேசு பெருமானிடம் வெளிப்படுத்தும் விண்ணப்பங்களாக அமைந்த நூறு பாடல்களின் தொகுப்பே இந்நூல். நூலின் தொடக்கத்தில் காப்புச் செய்யுள் அமைந்துள்ளது பன்னிரு சீர்களையுடைய ஆசிரிய விருத்தப்பாக்களால் ஆக்கப்பட்டுள்ளது. இந்நூலில் ‘அமலகுருவே’ என்பது ஈற்றுத் தொடராக இடம் பெற்றுள்ளது.

இந்நூலில் உள்ள நூறு பாடல்களும் ஏழு பிரிவாக அமைந்துள்ளன. அவை 1) சுத்த ஜீவியம், 2) குழந்தைக் கிருத்தவர்கள் 3) ஆச்சரிய அன்பு, 4) உபதேச மயக்கம், 5) தெளிதல், 6) அகோசர அன்பு, 7) விசுவாச வாழ்க்கை என்பவையாகும்.

இறைவனின் அருள் வேண்டல், இறைப் பணியில் தமக்குள்ள உறுதியை வெளிப்படுத்தல் ஆகியன இவர் பாடல்களில் முதன்மை பெறுகின்றன. திருச்சபையிலும் கிறித்தவர்களிடத்தும் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, அவற்றை நீக்கும் நோக்கிலும் இவரது பாடல்கள் அமைந்துள்ளன.

• துன்பத்தில் பங்கு வேண்டும்

எப்பொழுதும் எதிலும் இறைவனைக் காண விரும்புகிறார் கவிஞர். இயேசுவின் அடையாளங்களை எல்லாம் தாமும் பெற வேண்டும் எனக் கவிஞர் கேட்கிறார். முள் முடியிலும், சாட்டையடியிலும், இகழ்ச்சியிலும், கொடுமையிலும் தமக்குப் பங்கு வேண்டும் என இறைஞ்சுகிறார் கவிஞர். பாடல் இதோ.

கே(டு) ஒன்றும் செய்யாத அரசே! நீர் தரித்த முள்

கிரீடத்தில் பங்கு வேண்டும்

கீணர் உன் முகத்தினில் உமிழ்ந்த கொடுமையிலும் பங்கு

கிடைக்கவும் அதிஷ்டம் வேண்டும்.

(பாடல் – 71)

(கீணர் = அற்பர்)

• பக்தி மரபு

இறைவனின் திருவடிகளில் அடியாரின் தலை ஒன்றுவதைச் சைவ சமயம் சிறப்பிக்கிறது. ‘தாடலை’ (தாள் + தலை) என்னும் இம் மரபைத் தழுவி, கிறித்துவின் திருவடிகளைத் தம் தலைமேல் சுமக்க விரும்புகிறார் கவிஞர். இயேசுவின் கால்களில் அடிக்கப்பட்ட இரும்பு ஆணிகள் தன் தலையிலும் ஊடுருவுவதாகப் பாடுகிறார் கவிஞர்.

மேலும், இந்த ஏழையின் வாயிலாக நீர் செய்கிற நற்பணிகளால் ஏற்படும் புகழ் உமக்கே உரியதாக வேண்டும். தீயிலிட்ட இரும்பு தீயின் சாயலைப் பெறுவதைப்போல் நான் உன் சாயலைப் பெற வேண்டும். இதனை,

கலை மூண்ட இரும்புபோல் உன்சாயல் இலங்க இக்
கசடன் காணாது ஒழியவும்.

(பாடல் – 81)

என்று கூறுகிறார்.

‘செடியாகிய உம்மில் கொடியாக நான் விளங்கிக் கனி தர என்னை உருவாக்கும்’ என்று கேட்கும் கவிஞர்,

உனில் உறும் கொடியாக உன்சாரம் பெற்று என்றும்

உன்னதக் கனி பெருகவும்

உடைத்து என்தன் இதயத்தை உன் சித்தப்படி வரைந்து

உருவாக்கும் அமலகுருவே.

(பாடல் – 81)

என அமலகுருவிடம் வேண்டுகிறார்.

மேலும், விவிலியச் செய்திகளை நேரடியாகவும் உருவகங்களாகவும் நயம்படக் கையாண்டுள்ளார் கவிஞர்.

## 3.6 முக்தி வழி அம்மானை

அம்மானை என்பது பெண்கள் ஆடும் ஒருவகை விளையாட்டு. இது மூன்று காய்களில், ஒன்றை மாற்றி மாற்றி மேலே வீசி இரு கைகளாலும் பிடித்தாடும் விளையாட்டாகும். இப்படி ஆடும்பொழுது, இரண்டு கைகளும் ஒரே வேகத்தில் காய்களை வீசியும் பிடித்தும் சிறுமிகள் விளையாடும் போது, அவர்கள் வளையல்கள் ஒலிக்கின்றன. மேலே சென்ற காயை நோக்கும்போது காதணிகள் அசைகின்றன. தலை குனிந்து கீழே நோக்கும்போது, கூந்தல் கலைகிறது.

அம்மானை விளையாட்டைப் பாடிக்கொண்டே ஆடுவதுண்டு. இத்தகைய பாடல்கள் தனி இலக்கிய வகையாகத் தமிழில் உருவெடுத்துள்ளது. அம்மானை என்பது ‘அம்மனை’ என்பதன் விளி ஆகும். இதன் பொருள் ‘அம்மா’ என்பதாகும்.

தமிழில் நூற்றுக்கணக்கான அம்மானைகள் தோன்றியுள்ளன. கிறித்தவப் பொருண்மை கொண்ட எண்பதுக்கும் மேற்பட்ட அம்மானைகள் காணப்படுகின்றன. அக்கினேச அம்மானை (1843), வீரமாமுனிவரின் கித்தேரியம்மாள் அம்மானை (1849), தாவீது அம்மானை (1865), சவேரியார் அம்மானை (1913) முதலியன அவற்றுள் சில.

• ஆசிரியர்

‘முக்தி வழி அம்மானை’ இங்குப் பாடமாக அமைந்துள்ளது. இதனைச் சுவீகரனார் இயற்றியுள்ளார். இதனை, 1887 இல் ‘நற்போதகம்’ இதழில் முதலில் இவர் வெளியிட்டார். ஜான்பனியன் எழுதிய ‘மோட்சப் பிரயாணம்’ என்னும் நூலை இவர் நன்கு படித்தவர். சுவீகரனார் திருநெல்வேலி மாவட்ட ஆழ்வார்த்தோப்பு என்னும் ஊரைச் சேர்ந்தவர்.

### 3.6.1 முக்தி வழி அம்மானை – அமைப்பும் பொருளும்

முக்தி வழி அம்மானை, அடி வரையறை இல்லாத கலி வெண்பாவில் ஆக்கப்பட்டுள்ளது. எதுகை அமையப் பெற்றது. ஈரடிக் கண்ணிகள் ஆறாயிரம் உடையது. 165 விருத்தப்பாக்களும் இடையிடையே காணப்படுகின்றன. இதன் கண்ணிகள், ‘தான தான தந்த தானதான தந்த தானா தானனா’ என்பது போன்ற சந்தத்தில் பாடத்தகுந்தது.

பாயிரத்தில் கடவுள் வாழ்த்து, நூல்பொருள், நூல் பயன், அவையடக்கம் முதலியன கூறப்பட்டுள்ளன. இந்நூல் தழுவல் படைப்பாகும். ஆங்கிலத்தில் ஜான் பனியன் எழுதிய ‘மோட்சப் பிரயாணம்’ (Pilgrim’s Progress) என்ற நூலைத் தழுவி இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. சாமுவேல் பவுல் ஐயர் இந்நூலை உரைநடைக் காவியமாகத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். சுவீகரனார் இதனை அம்மானையாகப்

பாடியுள்ளார்.

• கதை

மூல நூலைத் தழுவி முக்தி வழி அம்மானையும் முற்றுருவகப் படைப்பாக அமைந்துள்ளது. அதாவது, இந்நூலில் உள்ள கதை மாந்தர்கள் அனைவரும் உருவகமாகப் படைக்கப்பட்டுள்ளனர். இக்கதையின் தலைவனாகிய ‘கிறித்தவன்’ முக்தி வழியில் முன்னேறிச் செல்கிறான்; இன்னல்கள், தடைகள், வேதனைகளைக் கடந்து செல்கிறான். இறைவனின் துணை கொண்டு முக்தி வழியில் வழுவாது சென்று பேரின்பம் அடைகிறான். இதுவே முக்தி வழி அம்மானையின் கதையாகும். இதனைச் சுவைபட விவரித்துள்ளார் கவிஞர்.

• கிறித்தவனின் பயணம்

கந்தை அணிந்த ஒரு மனிதன். அவன் பெயர் கிறித்தவன். முதுகில் பாரமான சுமை ஒன்று அவனை அழுத்துகிறது. அது பாவச் சுமை. கைகளில் விவிலியம் விரித்து வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் படிக்க படிக்க அவன் கண்களில் கண்ணீர் வழிகிறது. இந்த நகரம் அழிந்து விடும்; நாம் தப்ப முடியாது என உணர்கிறான். கடவுளின் கோபத்திற்குத் தப்ப வழி தேடுகிறான். சுவிசேடகன் வழிகாட்ட ‘திட்டி வாசல்’ நோக்கி ஓடுகிறான். திட்டி வாசல் என்பது நிலையான வாழ்வை வழங்கும் இயேசுவைக் குறிக்கிறது. ஊரார் இவனைப் பைத்தியம் என்கின்றனர்; ஏசுகின்றனர்; வழி விட மறுக்கின்றனர்; அடர்ந்த காட்டு வழியாகச் செல்கிறான்; முதுகுச் சுமையால் தள்ளாடித் தள்ளாடிச் செல்கிறான் கிறித்தவன். சேற்று ஆறு குறுக்கிடுகிறது. அபயக் குரல் எழுப்புகிறான்.

உலையின் மெழுகாய் உருகினான் உள்ளம் எல்லாம்

கன வருத்தம் ஆகி அவன் கைகால் உளைவதிலும்

மன வருத்தம் இப்பொழுது மட்டு மிஞ்சி வந்ததுவே

வந்த துயராலே மனதை அசையாது இருத்தி

அந்தரத்தை நோக்கி அபயம் இட்டான் அம்மானை.

(முக்தி வழி அம்மானை – பக்கம் – 28)

(கன வருத்தம் = மிகுதியான வருத்தம்; அந்தரம் = வானம்; அபயம் = அடைக்கலம் வேண்டி எழுப்பும் குரல்)

• சிலுவைக் காட்சி

பல்வகைத் துன்பங்களைக் கடந்து செல்கிறான் கிறித்தவன். பின்னர்

வழிப்போக்கர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள மணி மாளிகையில் கிறித்தவன் தங்குகிறான். வழியில் கண்ட காட்சிகள் பற்றி அங்குள்ள பெண்டிர் வினவுகின்றனர். கிறித்தவன், தான் கண்ட சிலுவைக் காட்சி பற்றியும், தன் முதுகில் இருந்த மூட்டை தானாக விழுந்தது பற்றியும் கூறுகிறான்.

இயேசுவின் சிலுவைப்பாடுகளை எல்லாம் மகளிர் விவரிக்கின்றனர். ஏழைப் பரதேசிகளை உய்விக்க வந்த சீயோனின் திருப்பாலரான இயேசுவின் பெருமைகளைக் கூறுகின்றனர். பிச்சைக்காரர்களையும் பரதேசிகளையும் பிரபுக்களாக்கிய இயேசுவின் மாண்பைக் கூறுகின்றனர்.

பீடுபெறு பூவுலகில் பிச்சை எடுப்போர்களையும்

வீடுமின்றிக் குப்பையதின் மேடுகளிலே வசித்து

இரக்கும் பரதேசி ஏழைகளிலே பலரைச்

சிறக்கும் பிரபுக்கள் போல் செய்துவிட்டார் கண்டாயே!

(முக்தி வழி அம்மானை – பக்கம் – 122)

• உச்சிதப் பட்டணம் சேரல்

நம்பிக்கை என்பவன் கிறித்தவனோடு சேர்ந்து கொள்கிறான். அவர்கள் நதியைக் கடந்து உச்சிதப்பட்டணம் சேர்கின்றனர். பின்னர் அலங்கார வாசலுக்கு வருகின்றனர். பல துன்பங்களையும் சோதனைகளையும் கடந்து வந்த அவர்களின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. சொல்லுதற்கு அரிய மகிழ்ச்சியைப் பயணிகள் வெளிப்படுத்துகின்றனர். இறுதியில் கிறித்தவனும், நம்பிக்கையும் முக்தி வீடு அடைகின்றனர் எனக் கதை முடிகிறது. தடைகளை எதிர்கொண்டு நம்பிக்கையுடன் முன்னேறினால் எந்த இலக்கையும் அடையமுடியும் என்பது முக்தி வழி அம்மானை தரும் செய்தியாகும்.

## 3.7 தொகுப்புரை

வீரமாமுனிவர், வேதநாயக சாஸ்திரியார், மாயூரம் வேதநாயகம் பிள்ளை முதலியோர் கிறித்தவச் சிற்றிலக்கிய முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். இவர்கள் சிற்றிலக்கிய வடிவங்கள் பலவற்றைத் திறம்பட கையாண்டுள்ளனர். இப்படைப்புகளில் பக்தி உணர்வும், இலக்கிய நயமும் ஒருங்கே வெளிப்படுகின்றன.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# ஆசிரியரைப் பற்றி



முனைவர்:-எம்.எம்.ஏ.காதர்
கல்வித்தகுதி:-எம்.ஏ., எம்.பில்., பி.எச்.டி.,
பணி:-சிறப்பாய்வாளர்
இஸ்ஸாமிய இருக்கை தமிழ்ப்
பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.
பி.எச்.டி – ஆய்வு:-இஸ்ஸாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் மசலா இலக்கியங்கள்.
வெளியீடுகள்:-

1. மதுரை சுல்தானியர் கால
நாணயங்கள்.
2. மதுரை சுல்தானியர் வரலாறு.
3. சேது சுல்தானியர் வரலாறு.
4. சுல்தான் அலாவுதீன் வரலாறு.
5. சிக்கந்தர்பாதுஷா வரலாறு.
6. மாபரின் முஃதி ஜமாலுதீன்.
7. ஆதிநபி ஆதம் முதல் தூதர்
நபி நாதர்வரை.
8. ஒன்றே இறையுமா ஒன்றே
குலமும் – இஸ்லாமிய நோக்கு.
9. நால்வர் நான்மணி மாலை
10. வள்ளல் சீதக்காதிப் பிள்ளைத்தமிழ்.
11. நபி மணியின் தமிழ்க்காதல்.
12. சீறாப்புராணமும் சீறா
கீர்த்தனையும் – ஒப்பீடு.
13. யாக்கூப் சித்தரின்
குழூஉக்குறிகள் – ஆய்வு.

# பாடம் - 4

## P20244 இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள்

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

தமிழ் இலக்கியத்துக்கு இஸ்லாம் சமயம் ஆற்றியுள்ள தொண்டினைப் பற்றிக் கூறுகிறது.

இஸ்லாம் சமய அறத்தைப்பற்றியும், அறம் உரைத்த நாயகர்களின் வரலாற்றையும் கூறுகிறது.

இஸ்லாமியப் புலவர்கள் பாடிய காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் பற்றி விளக்குகிறது.

இஸ்லாமிற்கு முற்பட்ட சமயங்களான இஸ்ரேலிய, யூத, கிறித்தவ சமய வரலாற்றைத் தெரிவிக்கின்றது.

இஸ்ரேலிய, யூத, கிறித்தவ, இஸ்லாமிய சமயங்கட்கு மூலப்பிதா ஒருவரே என்பதை உணர்த்துகின்றது.

இஸ்லாமிய மெய்ஞ்ஞானப் படித்தரங்களை விளக்குகின்றது.

### இந்தப் பாடத்தைக் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களின் தொகையும் வகையும் தெரிந்து கொள்ளலாம்.
- இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் அறபு நாட்டாரின் சமய வாழ்வைப் பாடிய போதிலும் தமிழ் மரபைப் பின் பற்றியிருப்பதைக் காணலாம்.
- அறபு நாட்டில் பிறந்த நபிகள் பெருமானாருக்குத் தமிழ் மொழியின் மேல் இருந்த விருப்பத்தை அறியலாம்.
- எந்தச் சமயத்தவர்கள் ஆயினும் இறையருள் பெற இறைநம்பிக்கையே அடிப்படையான காரணம் என்பதனை அறிந்து கொள்ளலாம். அறாபிய – இஸ்ரேலிய நாட்டுச் சமயங்களைப் பற்றிய வரலாற்றை விரிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

# பாட அமைப்பு

4.0 பாட முன்னுரை
4.1 இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள்
4.1.1 தமிழ் மரபு வழிப்பட்ட சிற்றிலக்கியங்கள்
4.1.2 புதுவகைச் சிற்றிலக்கியங்கள்
4.1.3 மக்கட் பிரபந்தங்கள்
4.2 மாலை இலக்கியங்கள்
4.2.1 பல்சந்த மாலை
4.2.2 மிகுராசு மாலை
தன் மதிப்பீடு : வினாக்கள் – I
4.3 சமய வரலாறு
4.3.1 இப்ராஹிம் நபி
4.3.2 இஸ்லாம் சமயம்
4.4 சமயக் கருத்துகளும் சடங்குகளும்
4.4.1 எல்லாம் வல்ல இறைவன்
4.4.2 வேதநூல் கூறும் மெய்ஞ்ஞானம்
4.4.3 தொழுகை
4.5 இலக்கிய வருணனைகள்
4.5.1 நாடும் நகரமும்
4.5.2 புறாக் எனும் மின்பாரி
4.6 தமிழ் மரபு
4.6.1 ஆலாத்தி எடுத்தல்
4.7 தொகுப்புரை
தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# 4.0 பாட முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் இஸ்லாம் சமயம் ஆற்றியுள்ள தொண்டு சிறப்புடையது. அறபு நாட்டில் கால்கொண்ட இஸ்லாம் சமய அறத்தையும், அறம் உரைத்த நாயகர்களின் வரலாற்றையும் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் இலக்கியங்களாகப் படைத்துள்ளனர். காப்பியங்களாகவும் சிற்றிலக்கியங்களாகவும் உரைநடை, நாடகம் மற்றும் மெய்ஞ்ஞான இலக்கியங்களாகவும் படைத்துத் தமிழன்னைக்குத் தன்னிகரற்ற அணிகலனாகச் சூட்டியுள்ளனர். இவர்கள் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட அளவில் இவ்வகை இலக்கியங்களை இயற்றியுள்ளனர்.

## 4.1 இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள்

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட இலக்கியப் பரப்பினைக் கொண்ட இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களுள் சிற்றிலக்கியங்கள் மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கையைக் கொண்டுள்ளன. இவற்றை

1) தமிழ் மரபு வழிப்பட்ட சிற்றிலக்கியங்கள்
2) புதுவகைச் சிற்றிலக்கியங்கள்
3) மக்கட் பிரபந்தங்கள்

என இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆய்வாளர்கள் பாகுபாடு செய்கின்றனர்.

### 4.1.1 தமிழ் மரபு வழிப்பட்ட சிற்றிலக்கியங்கள்

இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் தமிழ் இலக்கிய வகைமை வளர்ச்சி வழி நின்று, பன்னிருபாட்டியல் முதலான சிற்றிலக்கிய இலக்கண நூல்கள் கூறும் முறையில் அருளிய சிற்றிலக்கியங்களைத் தமிழ் மரபு வழிப்பட்ட சிற்றிலக்கியம் என்பர். இவ்வகையில் பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை, ஆற்றுப்படை, அந்தாதி, மாலை முதலிய பிரிவுகளில் கணக்கற்ற சிற்றிலக்கியங்களை இயற்றியுள்ளதைக் காணலாம்.

### 4.1.2 புதுவகைச் சிற்றிலக்கியங்கள்

தமிழ்ச் சிற்றிலக்கிய இலக்கண நூல்கள் கூறும் இலக்கணத்தைப் பின்பற்றாமல், அறபு மொழிச் செய்யுள் இலக்கண மரபைத் தழுவி, தமிழ் யாப்பு வகையில் புனையப்பட்ட சிற்றிலக்கியங்கள் புதுவகைச் சிற்றிலக்கியங்கள் ஆகும். இவை கிஸ்ஸா, நாமா, மசலா, படைப்போர், முனாஜாத்து என ஐவகைக் கட்டமைப்பில் அமைகின்றன.

கிஸ்ஸா இலக்கியம் இருபதும், நாமா இலக்கியம் இருபத்தைந்தும், மசலா இலக்கியம் நான்கும், முனாஜாத்து இலக்கியம் இருபதுமாக மொத்தம் எண்பத்துமூன்று இலக்கியங்களை இஸ்லாமியத் தமிழ்ப்புலவர்கள் தந்துள்ளனர்.

### 4.1.3 மக்கட் பிரபந்தங்கள்

சாதாரண மக்களிடம் வழக்கிலிருக்கும் திருப்புகழ், கீர்த்தனை, அம்மானை, ஏசல், சிந்து, கும்மி, தாலாட்டு, பாட்டு என மக்கட்பாடல் வகையில் அமைந்த இலக்கியங்களை மக்கட் பிரபந்தம் என்பர். இவ்வகைப் பொருளில் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் மிகுதியான சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளனர்.

## 4.2 மாலை இலக்கியங்கள்

இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் அருளிச் செய்த தமிழ் மரபுவழிப்பட்ட சிற்றிலக்கியங்களில் மாலை இலக்கியங்கள் மிகுதியாகும். எண்ணிக்கையளவில் இருநூறுக்கும் மேற்பட்ட மாலை இலக்கியங்கள் கிடைக்கின்றன.

இஸ்லாமிய இலக்கிய வரலாற்றில் தோன்றிய முதல் இலக்கியமே மாலை இலக்கியம் ஆகும். பல்வேறு மலர்களால் தொடுக்கப்பட்டது. மாலையாக அமைவதைப் போல, பல்வேறு செய்யுள் யாப்புகளைக் கொண்டு இம் மாலை இலக்கியங்கள் அமைகின்றன.

### 4.2.1 பல்சந்த மாலை

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் காணும் முதல் இலக்கியம் பல்சந்த மாலையாகும். இந்நூல் இதுவரையிலும் முழுமையாகக் கிடைக்கவில்லை. அகத்துறைப் பொருளில் அமைந்த எட்டு செய்யுட்களே கிடைத்துள்ளன. 1931ஆம் ஆண்டு பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை பதிப்பித்த களவியல் காரிகை என்னும் நூலில் இச்செய்யுட்கள், மேற்கோள் செய்யுட்களாகக் காணப்படுகின்றன.

பல்சந்த மாலை என்பது 96 சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று. பன்னிருபாட்டியலார் பல்சந்தமாலைக்கு இலக்கணம் வகுத்திருக்கிறார். இந்தப் பல்சந்தமாலை அந்த இலக்கணத்தோடு பொருந்தவில்லை. இந்நூலில் உள்ள எட்டாம் செய்யுளில்
அல்லா என வந்து சாத்திய நந்தா வகை தொழும் சீர்
நல்லார் பயிலும் பழனங்கள் சூழ்தரு நாட்டகமே
என வரும் அடிகள் இவ்விலக்கியம் இஸ்லாமிய இலக்கியம் என்பதனை நிறுவுகின்றது.

பல்சந்தமாலை இலக்கியத்தின் ஆசிரியர் பெயரும் காலமும் தெரிந்து கொள்ள இயலவில்லை. இதில் அமைந்துள்ள சொல்லாட்சிகளைக் கொண்டு பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை இவ்விலக்கியத்தின் காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டு என நிறுவுகின்றார்.

### 4.2.2 மிகுராசு மாலை

பல்சந்தமாலைக்குப் பின் கிடைத்திருக்கும் மாலை இலக்கியம் மிகுராசு மாலையாகும். இவ்விலக்கியம் முழுமையாகவும், இயற்றிய ஆசிரியரின் பெயரும் காலமும் தெளிவாகவும் தெரிந்து கொள்ளுமாறு உள்ளது. ஆதலால் முதல் இஸ்லாமியச் சிற்றிலக்கியம் மிகுராசு மாலையே எனலாம். இது இஸ்லாம் சமய வரலாற்றிலும்

இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளமையால் இஸ்லாமியச் சிற்றிலக்கியங்கள் என்னும் பாடத்தில் மிகுராசு மாலையைப் பற்றிப் படிப்போம்.

- நூலின் பெயர்

மெஹ்ராஜ் என்பது அறபு மொழிச் சொல்லாகும். தமிழ் வழக்கில் மிகுராசு என்று வழங்கப்படுகிறது. இதற்கு ஏற்றம் பெறுதல், உயருதல் என்று நேரடிப் பொருள் ஆகும். ஆனால், இச்சொல் இஸ்லாம் சமயத் தீர்க்கதரிசியாகிய நபிகள் பெருமானார் புறாக் என்னும் மின்பரி (வானத்துக் குதிரை) யில் ஏறி வானுலகு சென்று உருவமில்லாது திகழும் இறைவனாகிய அல்லாஹ்வை வணங்கி, இஸ்லாம் சமயத்தவர்க்கு விதிக்கப்பட்ட கடமைகளையும் இறைவனின் விந்தை மிகு படைப்புகளையும் கண்டு மீண்ட நிகழ்ச்சியினையே குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. ஆதலால் மிகுராசு என்பதற்கு நபிகள் பெருமானாரின் விண்ணேற்றப் பயணம் எனப் பொருள் கொள்ளலாம்.

- நூலாசிரியர்

மிகுராசு மாலையை இயற்றிய ஆசிரியர் ஆலிப் புலவர் ஆவார். இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மங்கை நகர் என்னும் சிற்றூரில் பிறந்தவர்.

மிகுராசு மாலை, காப்புச் செய்யுள் நீங்கலாகப் பன்னிரண்டு இயல்களையும் 743 செய்யுட்களையும் கொண்டுள்ளது. ஆசிரியர் இயல்களுக்கு இயல் எனப் பெயரிடவில்லை. சிறப்பு எனப் பெயரிட்டுள்ளார். காயல் பட்டினத்தில் காஜியாராக இருந்த ஷெய்க் முகம்மது அலாவுதீன் என்னும் ஆன்றோரிடம் அறபு மொழி நூல்களிலிருந்து விளக்கம் பெற்று மிகுராசு மாலையைத் தாம் இயற்றியதாக ஆலிப்புலவர் இந்நூலில் காட்டுகின்றார்.

ஆலிப்புலவர் மிகுராசு மாலை என்னும் தமிழ் நூலை இயற்றிய பின்னர், அதனை அறிஞர் பெருமக்கள் நிரம்பிய அவையில் அரங்கேற்ற விரும்பினார். திருநெல்வேலி, காயல்பட்டினம் முதலான பேரூர்களில் வாழும் இஸ்லாமிய அறிஞர் பெருமக்களிடம் வாய்ப்பினை வேண்டித் தோல்வியுற்றார். அந்நிலையில் நாஞ்சில் நாடு (இன்றைய கன்னியாகுமரி மாவட்டம்) வந்தார். கோட்டாறு ஜமாஅத்தார்களிடம் (ஜமாஅத் = சமயக்குழு) வேண்டினார். "அடுத்த வாரம் வாருங்கள் பார்க்கலாம்" என்னும் பதிலைப் பெற்றார். மனம் வருந்தினார். உச்சி வெயில் வேளையில் தெருவில் இருந்த ஒரு வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்தார். அப்போது அவருடைய மாணவர் சிவலிங்கம் என்பார் எதிர்ப்பட்டார். பிறசமயத்தவர்களின் முன்னிலையிலேனும் மிகுராசு மாலையை அரங்கேற்றிவிட வேண்டும் என்ற விருப்பம் கொண்டார், புலவர். தன் மாணவரிடம் விருப்பத்தைத் தெரிவித்தார். மாணவரும் ஆசிரியரைத் தேற்றினார். அவ்வூரில் பாவாடைச் செட்டியார் என்னும் செல்வந்தர் இருப்பதாகவும், அவர் குருடர் என்றும் கூறினார். இறையருள் ஒன்றாலன்றி அவருக்குப் பார்வை திரும்ப வழியில்லை என மருத்துவர்களால் கைவிடப்பட்டவர் என்றும் விவரித்துக் கூறினார்.

அத்தகையவருக்கு ஒருவேளை உங்கள் காப்பியம் அரங்கேறும் அருளால் பார்வை திரும்பக் கூடும் என்றும் கூறினார். இருவரும் அச்செல்வந்தரை அணுகினர். அவரும் ஒப்புக் கொண்டார். அரங்கேற்றத்திற்கான நாளும் குறிக்கப்பட்டது. இஸ்லாமிய மாதத்தில் ஏழாம் மாதமாகிய ரஜ்ஜப் மாதம் 12ஆம் நாள் வெள்ளிக் கிழமை அரங்கேற்றம் என அறிவிக்கப்பட்டது.

மிகுராசு மாலைச் செய்யுட்கள் ஒவ்வொன்றையும் ஆலிப்புலவர் உரத்தகுரலில் இசையுடன் பாடிப் பொருளுரை, விளக்கவுரை ஆகியவற்றைக் கூறி வந்தார். கடவுள் வணக்கம், நாட்டுச் சிறப்பு என ஒவ்வொரு இயலாக முடித்து ஐந்தாவது இயலான பைத்துல் முகத்தீஸ் சிறப்பு என்னும் இயலைப் படிக்க முற்பட்டார். பைத்துல் முகத்தீசு என்பது ஜெருசலேம் நகரில் உள்ள பள்ளி வாசல் ஆகும். இதனைத் தாவூது நபியின் மகனான சுலைமான் (சாலமான்) நபி, தன்னுடைய நான்காம் ஆட்சியாண்டில் (கி.மு 986) தொடங்கி பதினொன்றாம் ஆட்சியாண்டில் (கி.மு. 975) முடித்தார்.

தொடக்கக் காலத்தில் நபிகள் நாயகம் இறைவழிபாட்டிற்கு முன்நோக்குத் திசையாக பைத்துல் முகத்தீசையே கொண்டிருந்தார். மிகுராசு மாலையில் தாவூது நபிக்கு ஜபூர் என்னும் வேதம் அருளப்பட்ட வரலாறும் சுலைமான் நபியின் வரலாறும் காணக்கிடக்கிறது.

புறாக் என்னும் மின்பரி ஏறி மக்காவிலிருந்து புறப்பட்ட நபிகள் பெருமானார், இந்த இறை இல்லத்தில் இறங்கித் தொழுது விட்டு விண்ணேற்றம் பெற வேண்டும் என்பது இறைக் கட்டளையாகும். எனவே பைத்துல் முகத்தீசு பள்ளியில் இறங்கிய நபிகள் நாயகம் தான் பயணம் செய்து வந்த விண்பரியை அங்கிருந்த கோலத் தூணில் கட்டிவிடக் கருதினார். எல்லாம் வல்ல அல்லாஹ்வை மனத்துள் எண்ணித் தன் கைவிரலை எழில்மிக்க அந்த வலிய தூணில் வைத்ததும் அதில் ஒரு துளை ஏற்பட்டது. இப்பொருளில் அமைந்த செய்யுளை (செய்யுள் 111) மிக்க உற்சாகத்துடன் ஏறிய குரலில் முடித்துவிட்டு, ஏறிய வாசியை தூண் துளையில் கட்டி (வாசி = குதிரை) என அடுத்த (செய்யுள் 112) அடியைத் துவக்கும் பொழுது விண்ணில் பேரொளி தோன்றியது. அவ்வொளியை யாவரும் கண்டனர். அந்தகரான பாவாடைச் செட்டியாரும் பார்த்தார். ஆம்! பார்வையைப் பெற்றார். அதேசமயம் ஆலிப்புலவரின் செவியில் ”ஆலியே! இஃது என் அல்லாஹ்விற்கும் எனக்கும் விண்ணவர் கோனாகிய ஜிப்ரயீலுக்கும் மட்டுமே தெரியும். உனக்கு எப்படித் தெரியும்!” என மெல்லிய குரல் கேட்டது.
அத்திருக்காட்சியையும் பேச்சொலியையும் கேட்ட புலவர் உணர்வுப் பெருக்கால் மயக்கமுற்று விழுந்தார். நாயகப் பேரொளியைக் கண்ட கண்ணால் இனி வேறெதனையும் காணமாட்டேன் என, கண்களைக் கட்டிக் கொண்டு அந்தகர் போல் வாழ்ந்து, இஸ்லாமிய மாதத்தில், ஒன்பதாம் மாதமாகிய ரமலான் மாதம் இருபத்தேழாம் நாள் வெள்ளிக்கிழமை மதியநேரத் தொழுகையை நெல்லை பாளையங்கோட்டையில் இருந்த ஒரு தோப்பில் தொழுது கொண்டிருக்கும் போது சஜ்தா என்னும் சிரவணக்க நேரத்தில் ஆவி அடங்கப் பெற்றார்.

- காலம்

மிகுராசு மாலையை இயற்றிய புலவர் இவ்விலக்கியத்தின் காலத்தை ஹிஜிரி 998 (செய்.18) என்றும் கொல்லம் 765 (செய்.19) என்றும் தருகின்றார். இவ்விரு ஆண்டுகளும் ஆங்கில ஆண்டுக் கணிப்பின்படி கி.பி. 1590ஆம் ஆண்டாகும். எனவே மிகுராசு மாலை இலக்கியத்தின் காலம் கி.பி. 1590 எனலாம்.

- மிகுராசு மாலையின் சிறப்பு

ஆலிப்புலவர் அருளிய மிகுராசு மாலை இலக்கியத்திற்குப் பின், அதனை முதல் நூலாகக் கொண்டு கி.பி. 1751 இல் மதார்சாகிப் புலவர் மிகுராசு நாமா அருளினார். மெய்ஞ்ஞானி தக்கலை பீர் முகம்மது அப்பா மெய்ஞ்ஞான தத்துவப் பொருளில் மிகுராசு வளம் வெளிப்படுத்தினார். காளை ஹசனலிப்புலவர் மிகுராசு-லி-ஆ-ரிஃபீன் என பக்திப் பரவசத்தில் படைத்தார். பின்னும் ஆலிப்புலவரைத் தழுவி இதே பொருளில் சிற்றிலக்கியங்கள் பல வந்துள்ளன.

இவ்வகையில் மிகுராசு மாலை இலக்கியம் இஸ்லாமியச் சிற்றிலக்கிய வரலாற்றில் தலை சிறந்த சிற்றிலக்கியமாக அமைந்துள்ளது எனலாம்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 4.3 சமய வரலாறு

சமய வரலாறு என்பது ஒவ்வொரு சமயமும் இவ்வுலகில் தோன்றி வளர்ந்த வரலாற்றுப் பின்னணியே ஆகும். இவ்வரலாற்றுப் பின்னணியில் அந்தந்தச் சமயங்களைத் தோற்றுவித்தவர்கள் முன்னணி வகிப்பர். காலத்தாக்கத்தால் அவ்வப்போது வந்த சமயத்தலைவர்களும் சிற்சில மாற்றங்கள் தேற்றங்கள் தந்தவர்களும் அச்சமய வரலாற்றில் இடம் பெற்று, சமய வரலாறு விரிவாக்கம் பெறும். இவ்வகையில் நோக்கும் பொழுது சமய வரலாறு என்பது சமயத் தத்துவங்களோடு கூடிய சமயச் சான்றோர்களின் வரலாறே எனலாம்.

மிகுராசு மாலையில் இஸ்லாம் சமயவரலாறு மிக விரிவாகவே காட்டப்பட்டுள்ளது. இஸ்லாம் சமயம் ஆதி மனு ஆதம் நபியிலிருந்து தொடங்குகின்றது. காலந்தோறும் வந்த சமயச் சான்றோர்களால் புனருத்தாரணம் பெற்று, அறபு நாட்டில் பிறந்த முகம்மது நபி நாயகம் (ஸல்) என்னும் ஆன்ற (ஆன்ற = மாட்சியமைப்பட்ட) பெயர் கொண்ட சான்றோரால் இவ்வுலகிற்கு அடையாளம் காட்டப்பட்டது. அன்னார் அடையாளம் காட்டுவதற்கு முன்னர், அறபு நாட்டில் இஸ்ரேலிய, யூத, கிறித்தவ சமயங்கள் ஆதிக்கம் பெற்றிருந்தன. மிகுராச மாலையில் இச்சமயங்களை நிறுவிய நாயகர்கள் தொட்டுக் காட்டப்பட்டுள்ளனர். இந்நான்கு சமயங்களும் இப்ராஹிம் நபி என்ற மூலப்பிதா ஒருவரிலிருந்தே தொடங்குவதால் மூலப்பிதாவின் வரலாறு சற்று விரிவாகவே அமைந்துள்ளது.

### 4.3.1 இப்ராஹிம் நபி (கி.மு. 2160-1985)

இஸ்ரேலிய, யூத, கிறித்தவ, இஸ்லாமிய சமயங்களுக்கு மூலப்பிதா இப்ராஹிம் நபி ஆவார். இஸ்ரேலிய, யூத, கிறித்தவ சமயங்கள் இவரை ஆப்ரஹாம் என்றும் இஸ்லாம் சமயம் இப்ராஹிம் நபி என்றும் அழைக்கின்றன.

இப்ராஹிம் நபி தென் இராக்கில் உள்ள ஊர் என்னும் பேரூரில் கி.மு. 2160 இல் பிறந்தார். அரூபியான ஏக இறைவன் (ஒரே கடவுள்) ஒருவனுக்கு முற்றிலும் சரணடைந்த தீர்க்கராக (அருட்செல்வராக) வாழ்ந்தார். அக்காலத்தில் அந்நாட்டை ஆண்ட நமுறூது என்ற மன்னனோ மக்களோ இவருடைய இறைக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்நிலையில் இவர் அங்கிருந்த கோயிலுக்குள் புகுந்து பெரிய சிற்பம் ஒன்றைத் தவிர ஏனைய யாவற்றையும் சிதைத்து அழித்தார். அதனைக் கண்ணுற்ற மக்கள் மன்னனிடம் முறையிட்டனர். ஆத்திரமுற்ற மன்னன் இவரை நெருப்புக் குண்டத்தில் கிடத்துமாறு ஆணையிட்டான். நின் என்னும் சனீஸ்வரன் கோயிலுக்கு முன்பாக நெருப்பு மூட்டப்பட்டது. இப்ராஹீம் நபி நெருப்புக் குண்டத்தில் தூக்கிக் கிடத்தப்படும் போது பெருமழை பெய்து நெருப்பை அணைத்தது. அதேசமயம் தொகுதி தொகுதியாகக் கொசுக்கள் பறந்து வந்து மன்னன் நமுறூது மூக்கில் நுழைந்து

மூளை வரை சென்று குடைந்து அவனை இறப்பிற்குள்ளாக்கியது. அவ்வாறே ஓரிறைக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளாதோரும் மடிந்து வீழ்ந்தனர். இந்நிகழ்ச்சி மிகுராசு மாலையில் இப்ராஹிம் நபியின் கூற்றாக

உருப்பமாய் எனைநமுறூது போட்டதோர்

நெருப்புமாலதனிடை நின்று மேயெனை

பெருப்பமாய்க் காத்தவன் பெண்ணோ டாணல்லா

திருக்கும்நா யன்தனை ஏற்றிப் போற்றுவார்

(செய். – 128)
(பெருப்பமாய் = பெருக்கமாய், மிகுதியாய்)

என அமைந்துள்ளது.

இப்ராஹிம் நபி இருதாரங்களை மணம் கொண்டிருந்தார். மூத்த மனையாள் சாரா என்பார் நெடுங்காலம் பிள்ளைப் பேறில்லாமல் இருந்தார். இளையநங்கை ஹாஜிரா என்பார் இஸ்மாயில் என்னும் மகனைப் பெற்றார். 16 ஆண்டுகள் கழிந்த பின்னர், மூத்தவரான சாரா, இஸ்ஹாக் என்னும் ஆண் மகனைப் பெற்றார். இஸ்ஹாக்கின் மகன் யாக்கூப்; யாக்கூபின் பிள்ளை லேவி என்பாரின் வழியில் இஸ்ரேலிய மார்க்கத்தை நிறுவிய மூசா (மோசஸ்) நபியும், இன்னொரு பிள்ளையான யூதாவின் வழியில் யூத, கிறித்தவ மார்க்கங்களை நிறுவிய தாவீது (தாவீது ராசன்), ஈசா (இயேசு நாதர்) நபியைப் பெற்ற அன்னையாரும் தோன்றினர். தலைமகனான இஸ்மாயில் நபியின் மரபில் இஸ்லாம் சமயத்தைக் காட்டிய நபிகள் நாயகமும் பிறந்தார்.

- உயிர்ப் பலி

இறைவன் இப்ராஹிம் நபிக்குச் சில கட்டளைகள் இட்டுச் சோதித்தான். அவற்றில் ஒன்று தலை மகனைப் பலியிடக் கூறியதாகும். இப்ராஹிம் நபி தன் மகன் இஸ்மாயிலை இறைவழியில் பலியிடக் கனவு கண்டார். பொழுது புலர்ந்ததும் அதனைத் தன் மகனிடம் கூறினார். மகனும் மகிழ்வுடன் மனம் ஒப்பினார். தந்தையும் மகனும் மோரியா மலைக்கு விரைந்தனர். மலையின் மேல் சிறிது தூரம் ஏறியதும் சமவெளி ஒன்றைக் கண்டனர். மகனைப் பலியிட அதுவே ஏற்ற இடம் என இப்ராஹிம் தேர்ந்தார். மகன் இஸ்மாயிலின் கைகால்களைக் கட்டிப் படுக்க வைத்தார். கத்தியைக் கூர்மையாகத் தீட்டினார். தன்னுடைய கண்களையும் கட்டிக் கொண்டு கழுத்தில் கத்தியைச் செலுத்தினார். ரத்தம் பீரிட்டுப் பாய்ந்தது. பகீரென்ற மனத்துடன் தன்னுடைய கண்களில் கட்டி இருந்த கட்டை அகற்றினார். அறுபட்ட இடத்தை

நோக்கினார். ஆடு ஒன்று அறுபட்டுக் கிடந்தது. மகன் இஸ்மாயில் எவ்விதச் சேதமும் இன்றி அருகில் நின்றிருக்கக் கண்டார். இறையருள் பாலிப்பு எய்தப் பெற்றார். இதனை ஆலிப்புலவர்,

எந்தனன் மகனிசு மாயீல் தன்னையே

வந்த நல்லேவலால் வதைக்கக் கத்தியை

கந்தரத் திருத்திய காலந் தன்னிலே

அந்தநற் கத்தி கொண்டறுப்ப தன்றியே

(செய். – 129)

(கந்தரம் = கழுத்து)

என்றும்

தாக்கிய கத்தியின் தாரை மேல்வர

வாக்கிய செம்மறி யருங் கடாய்தனை

நோக்கியே விடுத்து மென்னுறு மைந்தனைக்

காக்குநா யனுக்கெல்லாம் புகழ்ச்சி காணுமே

(செய். – 130)

என்றும் காட்டுகின்றார்.

இப்ராஹிம் நபி இறை வழியில் தன் மகனைப் பலிதர அதற்குப் பரிகாரமாக இறைவன் ஆடு ஒன்றை அளித்த இவ்வரலாற்றை இஸ்லாமியர் ஹஜ்ஜுப் பெருவிழா நாளில், பக்ரீத் பண்டிகை என ஆடு பலியிட்டுக் கொண்டாடுவதை இன்றும் காணலாம். இஸ்ரேலிய, யூத, கிஸ்துவர்களிடம் இச்சடங்கு இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### 4.3.2 இஸ்லாம் சமயம்

இஸ்லாம் சமயத்தை நிறுவியவர் முஹம்மது நபி நாயகம் (ஸல்) ஆவார். இவர் அறபு நாட்டில் கி.பி. 571ஆம் ஆண்டு பிறந்தார். இவர் இப்ராஹிம் நபியின் தலைமகனான இஸ்மாயில் நபியின் கிளையில் வந்தவர் ஆவார். மிகுராசு மாலையில் நபிகள் பெருமானாரின் வாழ்வியல் நிகழ்ச்சிகள் பலவற்றை ஆலிப்புலவர் குறிப்பிடுகின்றார்.

- இல்வாழ்க்கை

நபிகள் பெருமானாரின் துணைவியார் கதீஜா பிராட்டியார் ஆவார். இவர், குவைலீது என்னும் செல்வரின் மகள். மேலும் அவர் சிறந்த கொடை வள்ளலும் ஆவார். இதனை,

கணங்கொள் முகிற் செங்கைக் குவைலீது செல்வி கதீஜா

(செய். – 324)

எனக் குறிப்பிடுகின்றார்.

வியத்தகு நிகழ்ச்சிகள்

நபிகள் பெருமானார் வாழ்வில் நிகழ்ந்த வியத்தகு நிகழ்ச்சிகள் சில மிகுராசு மாலையில் காட்டப்பட்டுள்ளன. அவைகளும் இங்குக் காணத்தக்கவை.

- மேகக்குடை

நபிகள் பெருமானார் இளமையில் கதீஜா பிராட்டியாரிடம் பணிக்கு அமர்த்தப்பட்டார். அவருடைய கூர்த்த மதியைக் கண்ட கதீஜா பிராட்டியார் அவரைச் சிரியா நாட்டிற்குச் சென்று வணிகம் செய்து வர அனுப்பினார். அவருக்கு ஓர் ஒட்டகமும் அதனை நடத்திச் செல்லப் பணியாளும் கொடுத்தார். ஆனால் அந்தப் பணியாள், 'சிறிய நபிபிரானுக்கு இத்தனைச் சிறப்பா' எனப் பொறாமை கொண்டான். ஊர் எல்லையைத் தாண்டி வணிகக் குழு வந்ததும் நபிபிரானை ஒட்டகத்தை விட்டு இறங்கி நடந்து வருமாறு செய்தான். ஏற்கெனவே அவருடைய தலைக்கு மேல் நிழலிட்டு வந்த மேகம் இன்னும் அகலப் பரவி நிழலிட்டது. இந்நிகழ்ச்சியை மிகுராசு மாலையார்.

மேகம் கவித்த குடையார்

(செய். – 639)

என்றும்

செல்லார் குடை நிழல் மீதிடைச் செகமேல் வருபவரே

(செய். – 406)

என்றும் காட்டுகிறார்.

- நகத்தால் நீர் அழைத்தது

மக்கமா நகரத்தில் நபிகள் பெருமானார் பரப்பி வந்த ஓரிறைக் கோட்பாட்டை அவ்வூரார் ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்வாறு ஏற்றுக் கொள்ளாத எதிர்ப்பாளர்களுக்குத் தலைவராக அபுஜகில் என்பார் அமைந்தார். நபிகள் பெருமானாரைக் கொன்று விடக் கருதிய அபுஜகில் நபிபிரானிடம் ஊருக்கு வெளிப்புறம் உள்ள வெட்ட வெளிக்கு வந்தால், தான் இஸ்லாம் சமயத்தை ஏற்றுக்கொள்வதாகக் கூறினான். நபிபிரானும் ஒப்புக் கொண்டு புறப்பட்டார். இருவரும் நடந்து பெரும் வனாந்தரத்திற்கு வந்தனர். அபுஜகில் தனக்குத் தாகம் எடுப்பதாகவும், இங்கு நீர்ச்சுனை ஒன்றைத் தோற்றுவித்தால் அத்தண்ணீரைக் குடித்தபின், தான் இஸ்லாம் சமயத்தை ஏற்றுக்கொள்வதாகவும் கூறினான். அவ்வளவில் நபிகள் பெருமானார் இறைவனின் திருநாமத்தை மனத்தில் நினைத்து கைநகத்தால் தரையைக் கீறினார். உடனே குபுகுபுவென்று இன்சுவை நீர் வெளிப்பட்டது. இதனை,

நகமீது மிக்கபுனலே யழைத்தநபி (செய். – 310)

என மிகுராசு மாலையார் காட்டுகின்றார்.

- பிறையைப் பிளந்தது

டமாஸ்கஸ் நகரத்தை ஹபீப் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவ்வரசரின் அதிகார பலத்தைக் கொண்டு நபிபிரான் நவிலும் ஓரிறைக் கோட்பாட்டைக் கைவிடச் செய்துவிடலாம் என எதிரிகள் கருதினர். நல்லதொரு நாளில் ஹபீப் அரசரும் மக்காவிற்கு வந்தார். நபிபிரானை அழைத்து வருமாறு ஏவலர்கள் அனுப்பப்பட்டனர். ஏவலருடன் நபிபிரான் ஹபீபரசரின் முன்வந்தார். அவரைக் கண்டதும் ஹபீப் அரசரின் உள்ளத்தில் ஒருவித பக்திப் பெருவெள்ளம் பாய, தன்னையறியாமல் எழுந்து நின்று நபிபிரானை வரவேற்றார். இவர் இறையருள் பெற்ற நபி என ஹபீபரசரின் உள்ளுணர்வு கூறியது. ஆனால் அதனை மற்றவர்களுக்கும் உணர்த்த விரும்பினார். எனவே நபிகள் பெருமானிடம் கூறினார். "அமாவாசை இரவில், நீங்கள் வானில் முழுமதியை வரவழைக்க வேண்டும். அது தன்னளவில் குறையாது வானில் எழுந்து பிரகாசிக்க வேண்டும். பின் அம்முழுமதி தரைக்கு இறங்கிக் காபாவை வலம் வந்து உயரே வானிற்குச் செல்ல வேண்டும். பின் உங்கள் விரல் அசைவால் அதனை இருதுண்டாகப் பிளவுபடுத்தி அவற்றைத் தனித்தனியே நிறுத்திக் காட்டிய பின்னர் ஒன்றாக இணைக்க வேண்டும்" என்றார்.

நபிகள் பெருமானாரும் அதற்கு ஒப்புக் கொண்டு, எல்லாம் வல்ல இறைவனின் அருளால் அவ்வாறு நிகழ்த்திக் காட்டினார். இந்நிகழ்ச்சி மிகுராசு மாலையில்

பிறையைப் பிளவு செய்தோர் (செய் – 410)

என அமைந்துள்ளது.

இவ்வகையில் மிகுராசுமாலையில் இஸ்லாம் சமயத்தை நிறுவிய நபிகள் பெருமானாரின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன.

## 4.4 சமயக்கருத்துகளும் சடங்குகளும்

இறைவனின் தனித்தன்மை, கலிமா வேதநூலில் கூறப்படும் மெய்ஞ்ஞானம் ஆகியவற்றை மிகுராசு மாலை குறிப்பிடுகின்றது. (கலிமா = இஸ்லாம் சமய மூலக்கொள்கை) தொழுகை, நோன்பு ஆகிய சடங்குகளைப் பற்றியும் கூறுகின்றது.

### 4.4.1 எல்லாம் வல்ல இறைவன்

மிகுராச மாலையில் இஸ்லாம் சமயக் கருத்துகள் மிக விரிவாகவே அமைந்துள்ளன. இறைவன் அல்லாஹ் என்ற அறபு மொழிச் சொல்லால் குறிக்கப்படுகிறான். இச்சொல் ஆண், பெண் என்ற பால் சுட்டாத பொதுச் சொல்லாகும். இதனை,

பெண்ணே டாணல்லா திருக்கும் நாயன் (செய். – 128)

எனவரும் செய்யுளடி காட்டுகின்றது. இறைவன் தனித்தவன்; இணைதுணை இல்லாதவன்; அவன் யாரையும் பெறவுமில்லை; யாராலும் பெற்றெடுக்கப் படவுமில்லை. அரூபி என இஸ்லாமிய இறையியல்புத் தத்துவத்தை இது குறிப்பிடுகின்றது. மிகுராசு மாலையில் இக்கருத்து.

மாதா பிதாவு மிலையான தூய வல்லோன் (செய். – 305)

என்றும்,

இணைஇலான் (செய். – 182)

என்றும் இடம் பெற்றுள்ளது.

”மிகுராசு மாலைக் கடவுள் வாழ்த்து”ப் பகுதியில் மெய்ப்பொருளாய் இருப்பவன்; அயர்விலாதான்; அண்டமும் பிண்டமும் பேரண்டமும் பொருந்தி இருப்பவன்; எல்லாப்புகழும் அவனுக்கே உரியது; அவன் தனித்தவன்; நிகரில்லாதவன்; தனக்கு நிகர் தானே என்னும் தன்மையன் (செய். – 1) என்கிறார். மேலும், நிகரற்ற அவன் அன்னையின் கருவறைக்குள் சுக்கிலமாய்ச் சென்ற துளி நீரை முறைப்படுத்தி, தசைக்கட்டியாக்கி, உடலாக்கி உயிர்கொடுத்தான்; இதைச் செய்தது அவனையன்றி வேறு யாருமில்லை. ஆதலால் வல்லமை மிக்க அவனையே வணங்குகின்றோம்” என்று வணக்கத்திற்குரிய காரண காரியத்தைக் காட்டுகின்றார்.

இக்கருத்து இஸ்லாமியத் திருமறையாகிய அல் குர்ஆனில் 17ஆம் அத்தியாயத்தில் 37 முதல் 39 வரை பயின்று வரும் திருவசனத்தின் கருத்தாகும்.

- கலிமா

இஸ்லாம் சமய மூலக்கொள்கை கலிமா எனப்படுகின்றது. இதற்கு மொழிதல் என்று பொருள். வணக்கத்திற்குரிய பாத்திரவான் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. நபிகள் பெருமானார் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட திருத்தூதுவர் ஆவார் என்னும் பொருளில் அறபு மொழியில்

லாயிலா ஹா இல்லல் லாஹு முஹம்மதுற் றசூலுல் லாஹி

என அமைந்த திருவசனமே கலிமாவாகும்.

இதனை நாவால் மொழிந்து மனத்தால் உண்மை எனக்கொள்வதே இஸ்லாமிய நம்பிக்கையாகும். இத்தகைய நம்பிக்கையுடன் இறைவழிபாடு செய்பவர்களே சொர்க்கம் புகுவார் என மிகுராசு மாலை (செய். – 3) யில் குறிப்பிடப்படுகிறது.

**4.4.2** வேதநூல் கூறும் மெய்ஞ்ஞானம்

இஸ்லாம் சமயத்தவர்க்கு அருளப்பட்ட புனித வேதநூல் அல் குர்ஆன் ஆகும். அல்குர்ஆன் என்பதற்கு விளக்கவுரை, தெளிவுரை, விரிவுரை என்று பொருள். இது முப்பது பாகங்களும் 114 அத்தியாயங்களும் 6666 திருவசனங்களும் கொண்டுள்ளது. இம்மை மறுமைக்குரிய வாழ்வியல் அணுகுமுறைகள் இதனில் அமைந்துள்ளன.

இம்மை மறுமையாகிய இருமையின் வெற்றிக்கு பக்குறா, ஆல, இம்ரான் ஆகிய இருஅத்தியாயங்கள் மிகவும் ஆழ்ந்த பொருளில் அமைந்துள்ளதாக மிகுராசு மாலை குறிப்பிடுகின்றது. (பஃறொடை வெண்பா.10)

பக்குறா, ஆல, இம்ரான் என்பவற்றிற்கு முறையே பசு, இம்ரானின் சந்ததிகள் என்று பொருள். இவை அல்குர்ஆனின் இரண்டாம் மூன்றாம் அத்தியாயங்களின் பெயர்களாகும். இவை இம்மை, மறுமை வாழ்விற்கு வெற்றிதரும் அத்தியாயங்களாக மிகுராசுமாலை குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது.

- மெய்ஞ்ஞானம்

இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறியின் ஊற்றுக்கண் நபிகள் பெருமானார் ஆவார். இவர் மெய்ஞ்ஞானத்தை மிகுராசுப் பயணத்தின் போது அறிந்ததாக மிகுராசுமாலை குறிப்பிடுகின்றது.

இஸ்லாமியம், இறைத்தலத்தை அறுஷ் என்றும், இறைவன் வீற்றிருக்கும் சிங்காதனத்தைக் குறுஷ் என்றும் வழங்குகிறது. இறைவனின் ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய செயற்பண்புகளை அறியும் நிலையை ஜபரூத் என்பர். ஜபரூத்

எனப்படும் சக்தியின் பண்புகள் வெளிப்படும் போது உருவாகும் ஆன்ம – வானவர் உலகு மலக்கூத்து எனப்படும். மெய்ஞ்ஞான மாட்சிமையாகிய ஜலால் ஜமால் என்னும் பேறுகளைப் பெற்று ஒருமைநிலையை அடைவது பறுதானியத்து எனப்படும்.

மெய்ஞ்ஞானியாகிய பயணி, ஒவ்வொரு நிலையை அடையும் போதும் அங்கே இருக்கும் தடுப்புத் திரைகள் ஹிஜாப் எனப்படும். நபிகள் பெருமானார் இவ்வகையில் ஒவ்வொரு தடுப்புத் திரையையும் தாண்டி மெய்ஞ்ஞானம் உற்றதை மிகுராசு மாலை பின்வரும் வகையில் காட்டுகின்றது.

நபிகள் பெருமானார் விண் தலத்தில் நுண்துகள் பொங்கித் துள்ளும் வெண்மையான பனிப்படலத் திரைகள் பலவற்றைக் கடந்து சென்றார். (செய். – 557) பின்னர் நபிபிரான் தனிநிலை யுற்றதையும், அடுத்தடுத்து இவ்வாறே ஒவ்வொரு தடுப்புத் திரையும் கடந்து சுல்தானி என்னும் ஆதிக்க நிலை எய்திய தன்மையையும் மிகுராசு மாலையார் மிகத்தெளிவாகவும் விரிவாகவும் காட்டுகின்றார்

**4.4.3** தொழுகை

இஸ்லாம் சமயத்தவர்கள் தினம் ஐந்து வேளை இறைவழிபாடு செய்ய வேண்டும் என்பது கட்டாயக் கடமை ஆகும். இக்கடமை விதிப்பு மிகுராசுப் பயணத்தின்போது இறைவனால் அருளப்பட்டதாகும்.

நபிகள் பெருமானார் விண்ணேற்றம் பெற்று அல்லாஹ்வின் திருமுன் அவனுடைய சன்னிதானம்வரை சென்றார். இன்ன தன்மை எனச் சொல்ல முடியாத பேரொளிப் பிழம்பாக இறைக்காட்சியைக் கண்டார் (செய். – 579). யாருக்கும் கிடைத்தற்கரிய காட்சியைக் கண்ட நபிகள் பெருமானார் தம்மைப் பின்பற்றுவோருக்குரிய இறைக்கட்டளையை அருளுமாறு வேண்டினார். அந்நிலையில் பல்வேறு கட்டாயக் கடமைகள் அருளப்பட்டு தினம் 50 வேளை இறைவணக்கம் செய்ய வேண்டும் என்னும் இறையாணை பிறந்தது. நபிபிரான் ஒப்புக்கொண்டு திரும்பும்போது, மூசா நபி எதிர்ப்பட்டு தங்களைப் பின்பற்றும் மக்களால் இதைச் செய்ய இயலாது எனக்கூறி, திரும்பச் சென்று மிகக்குறைந்த வேளையைப் பெற்று வருமாறு அறிவுறுத்தினார். நபி பிரானும் மீண்டும் இறைச் சன்னிதானத்திற்குச் சென்று தினம் 5 வேளை இறைவனைத் தொழ வேண்டும் என்ற ஆணையுடன் திரும்பினார். (செய். – 640)

எனவே, இறைவனின் ஆணையால் இஸ்லாமியர் தினமும் இறைவனை ஐந்து வேளை தொழுகின்றனர் எனலாம்.

- நோன்பு

இஸ்லாமியர்க்கு விதிக்கப்பட்ட கட்டாயக் கடமைகளுள் நோன்பும் ஒன்று ஆகும்.

ஐயாறு முப்பது நோன்பை தொகுத்த தையும் ஆதிதன்

மெய்யாய் விதித் திடக்கைக்கொண்டு

**(செய். – 638)**

எனவரும் அடிகள் காட்டுகின்றன.

## 4.5 இலக்கிய வருணனைகள்

காப்பியங்களில் இடம் பெற வேண்டிய உத்தி வகைகளில் ஒன்று வருணனை என்று தண்டியலங்கார ஆசிரியர் தண்டியார் குறிப்பிடுகின்றார். மிகுராசு மாலைச் சிற்றிலக்கியத்தில் இத்தகைய வருணனைகள் இடம் பெற்றுள்ளன. இவற்றை நோக்கிய இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆய்வாளர்கள் மிகுராசு மாலையைக் குறுங்காப்பியம் எனக் கொள்கின்றனர். ஆதலால், மிகுராசு மாலையில் அமைந்துள்ள வருணனைகளில் இன்றியமையாத சிலவற்றைக் காண்போம்.

### 4.5.1 நாடும் நகரமும்

மிகுராசு மாலையின் நிகழிடம் அறபு நாடாகும். இந்நாடு பெருமணல் செறிந்த பாலை வன நாடாகும். இந்நாட்டை ஆலிப்புலவர் நீர்வளம், நிலவளம் மிக்க தமிழ் நாட்டைப் போல் நோக்குகின்றனர்.

அறபு நாட்டில் எங்கு நோக்கினும் செந்நெல் விளையும் நிலம் நிறைந்துள்ளது. மாவும், கரும்பும், வாழையும் அடுத்தடுத்து விளைந்து கொழிக்கின்றன. மாங்கனி பழுத்துச்சிந்தும் சுவைமிக்க தேன், நீருடன் கலந்து கரும்பு விளையும் நிலத்தை அடைகிறது. கரும்பு, சுவைமிக்க அந்தத் தேனை உறிஞ்சிக் கணுக்கள் தோறும் முத்துகளைத் தேக்குகின்றது. கணுக்கள் தோறும் முத்து விளைந்து சிந்துகின்றன. இரு வரப்புகளுக்கு இடையிலுள்ள நீரோடையில் சிதறிய முத்துகள் தேன் போன்று சுவைமிகுந்த வாழை மரத்துடன் முகம் புதைத்துத் தலைசாய்த்து நிற்கும் செந்நெற் பயிரின் பாதங்களில் சேரும். இவ்வகையில் நாட்டுச் சிறப்பு வருணிக்கப் படுகின்றது.

இவ்வகையில் நாட்டை வருணித்த புலவர், வாழையுடன் செந்நெல் முகம் புதைத்துத் தலைசாய்த்து நிற்கும் பாங்கை, குருவினிடம் பணிந்து நிற்கும் சீடனுக்கு ஒப்பாகவும் வருணிக்கின்றார். இத்தகைய மனம் கவரும் அழகிய வருணனையை,

மாங்கனியின் செழுந்தேறன் மடைச்சாடி

வயற்கரும்பின் வந்து பாய

பூங்கரும்பின் கணுக்கள்தொறும் புதுத்தரளம்

தனையீன்றுப் புளகித் தேகித்

தேங்கதலி யுடனிகலிற் செவ்விமுகம்

புதைத்து நிற்குஞ் செந்நெற் சீடர்

பாங்கருடன் குருபாதம் பணிவதுபோல்

தலைசாய்த்துப் பணியுந் தானே

(செய். 42)

(தேறல் = தேன்; தரளம் = முத்து; புளகித்து = இன்புற்று; ஏகி = சென்று; கதலி = வாழை; இகலில் = ஊடலில்; செவ்வி = அழகிய)

எனவரும் செய்யுளில் காணலாம்.

வளங்கொழிக்கும் நாடாக விளங்கிய அறபு நாட்டில் நடுநாயகமாக விளங்கும் நகரம் மக்கமா நகரம் ஆகும். இந்நகரத்தின் தெருக்களில் எல்லாம் ஊசலோசையும் குரவை ஓசையும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. ஒருசிறிது குங்குமம் கலந்த சந்தனத்தில் கடைந்த வடிவுடைய அரிவையர், அம்மானை ஆடும் ஓசை தெருவெங்கும் கடல் அலையின் ஓசையைப் போல் ஒலித்துக் கொண்டிருக்கிறது. (செய். – 32) இவ்வகையில் மிகுராசு மாலையில் நகர வருணனை காணக்கிடக்கிறது.

### 4.5.2 புறாக் என்னும் மின்பரி

நபிகள் நாயகம் விண்ணேற்றம் பெறுவதற்குப் பயன்பட்ட வாகனம் புறாக் என்னும் மின்பரியாகும். புறாக் என்பது அறபுமொழிச் சொல். அதன் நேரடிப் பொருள் மின் என்பதாகும். ஆதலால் இதனை மின்பரி என்றும் பொருள் கொள்ளலாம். மிகுராசு மாலையார் இதனை விண்பரி என்றும் வியன்பரி என்றும் குறிப்பிடுகின்றார்.

புறாக், கோவேறு கழுதையைக் காட்டிலும் சற்றுக் குட்டையான வடிவம்; ஆனால் சாதாரணக் கழுதையைக் காட்டிலும் உயர்ந்த தோற்றம். எழில் மிக்க மனித முகம்; குறைபாடில்லாத வெண்மை நிறத்தில் அகன்ற நெற்றியும் பரந்த மார்பும் கொண்டது. இதனை,

கழுதையின் உயர்கோவேறு கழுதையின் பணிந்த தோற்றம்

வழுவகல் வெள்ளை வடிவது மனுவைப் போல

பழுதகல் சென்னி உன்னிப் பைத்தலைப் போல நெஞ்சு

(செய். – 58)

எனக் குறிப்பிடுகின்றார்.

புறாக்கிற்கு வால் இருந்தது; அது மாட்டின் வால் போல் நீண்ட வாலாகும். யானையின் கால்களைப்போல உறுதியான கனத்த கால்களும் கொண்டது. இதனுடைய செவிகள் மரகதத்தால் அமைந்தவை. ஜொலிக்கும் தாரகை போல் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் நீண்ட விழிகளும் கொண்டது. நவமணிகளால் அமைந்த நல்ல நெஞ்சும் கழுத்தும் கொண்டுள்ளது. மனிதர்கள் விடும் மூச்சினைப் போல அது மூச்சினை விட்டது.

மேலும்,

கருடனின் சிறகுகளைப் போல விரிந்து பரந்த இரு

வெண்மையான

சிறகுகளும் அதனில் முழுவதும் நவமணிப்பதிப்பும்

**(செய். – 68)**

கொண்டுள்ளது. இத்தகைய உன்னத எழில் மிக்க புறாக் வாகனத்திலேறி நபிகள் நாயகம் விண்ணுலகப் பயணத்தை மேற்கொண்டார். இவ்வகையில் மிகுராசு மாலையில் வருணனைகள் அமைந்துள்ளன.

## 4.6 தமிழ் மரபு

இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் தமிழ் மண்ணின் மைந்தர்கள் ஆவர். தமிழ் மரபிற்கு உரியவர்கள் ஆவர். அறபு நாட்டு மண்ணிற்கும் மரபிற்கும் உரிய இஸ்லாமியத்தைக் காப்பியங்களாகவும் சிற்றிலக்கியங்களாகவும் அவர்கள் புனைந்த போதிலும் அவற்றில் தமிழ் மண்ணையும் மரபையும் காட்டத் தவறவில்லை. மிகுராசு மாலையில் அத்தகைய தமிழ் மரபுகள் மிகப் பரவலாக அமைந்துள்ளன. அவற்றில் ஒன்றை மட்டும் காண்போம்.

### 4.6.1 ஆலாத்தி எடுத்தல்

தமிழ் மக்கள், பிறருடைய பார்வை தம்மேல் படுவதால் ஊறு நேரும் என நம்பினர் – அஞ்சினர். இதனைத் தீர்ப்பதற்கும் அணங்குகள் அணுகாமல் இருப்பதற்கும் சங்ககாலப் பெண்கள் நெய்யுடன் வெண்கடுகு பூசி நீராடினர். இவ்விருபதாம் நூற்றாண்டில் இந்நம்பிக்கை உலகெல்லாம் பரவியுள்ளதாக தமிழர் சால்பு என்னும் நூலில் சு. வித்தியானந்தன் குறிப்பிடுகின்றார். இக்காலத்தில் இவ்வகைக் கண்ணேறு கழிப்பதற்குத் தட்டில் மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த நீர் பெய்து அதில் வெற்றிலையைக் கிள்ளியிட்டுச் சுற்றி எறிதல் மரபாக இருக்கிறது. இதனை ஆலாத்திச் சுற்றி எறிதல் என்பர். இத்தகைய ஆலாத்தி சுற்றும் மரபை மிகுராசுமாலையில் காணலாம்.



நபிகள் பெருமானார் தம் மிகுராசுப் பயணத்தில் பைத்துல் முகத்தீசில் மின்பரியைக் கட்டிய பின்னர் விண் தலத்திற்கு ஏறிச்செல்லும் வகையில் வானவர்கள் ஏணி ஒன்றை இறக்கினர். நபிகள் பெருமானாரை, பிஸ்மில்லாஹ் என இறைவனின் திருநாமத்தால் தொடக்கம் செய்து வலக்கால் வைத்து ஏறிச் செல்லுமாறு வானவர் பணித்தனர்.

செயல் தொடக்கத்தில் வலது கால் வைத்துத் தொடங்கும் மங்கல மரபு தமிழகத்திற்கு உரியது.

நபிகள் பெருமானார் தமது வலது காலை வைத்து முதற்படியில் ஏறினார். அப்பொழுது பூரண நிலவாகத் திகழும் முகம்மது நபியின் திருப்பாதங்களைச் சொர்க்கத்தில் உள்ள துகிலினைக் கொண்டு தேவமாதர் ஆயிரம்பேர் தம் கரங்களால் ஒற்றி எடுத்து, பின் ஆலாத்தி எடுத்தனர்.

வலக்காலதை முன்னிற்படி வைத்தே றின தப்போ

தலமாகிய சொர்க்கப்பதி தனிலேயுள துகிலான்

அலமாமதி முகம்மது நறையோடு துடைத்தே

யலராலிமை யவராயிர ராலாத்தி யெடுத்தார்

(செய். **188)**

இவ்வாறே தொடர்ந்து நபிகள் பெருமானார் ஒவ்வொரு படியிலும் ஏறிச் செல்லச் செல்ல, ஈராயிரம் மூவாயிரம் என, தேவ மாதர் குழுமி நின்று, ஆலாத்தி எடுத்ததாக மிகுராசு மாலை குறிப்பிடுகின்றது.

இவ்வகையில் மிகுராசு மாலைச் சிற்றிலக்கியப் பாடம் பயில்வாருக்குப் பயனுள்ள பரந்த இஸ்லாமிய சமய அறிவை – தெளிவைத் தரவல்லதாய் இருப்பதை அறிந்து கொள்ளலாம்.

## 4.7 தொகுப்புரை

மிகுராசு மாலை இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பிறந்த முதல் முழு இலக்கியம் ஆகும். இவ்விலக்கியத்தின் அரங்கேற்றத்தின் பொழுது நபிகள் பெருமானார் தோன்றி, புலவர் வாய்ச்சொல் கேட்டார். அப்பொழுது நபிகள், அரங்கேற்றத்திற்கு உதவிய குருடருக்குப் பார்வை கொடுத்தார். இத்தகைய சிறப்பினை உடையது மிகுராசு மாலை. மேலும், மிகுராசு மாலையை முதல் நூலாகக் கொண்டு மிகுராசு நாமா, மிகுராசு வளம், மிகுராசு-லி-ஆரிஃபீன் என்னும் சிற்றிலக்கியங்களும் தோன்றியுள்ளன.

மிகுராசமாலை இஸ்லாம் சமயத் தீர்க்கதரிசியாகிய நபிகள் பெருமானார் புறாக் என்னும் மின்பரியிலேறி வானுலகடைந்து இறைத்தரிசனம் பெற்று மீண்ட வரலாற்றைக் கூறுகின்றது. இப்பயணத்தால் நபி நாயகத்தைப் பின்பற்றும் இஸ்லாம் சமயத்தவர்கள் தினமும் ஐந்து தடவை இறைவழிபாடு செய்ய வேண்டும் என்ற கட்டாயக் கடமை பெறப்பட்டது.

இஸ்லாம் சமயத்திற்கும் மூலப்பிதா இப்ராஹிம் நபி என்பதை அவர்தம் வரலாற்றின் மூலம் மிகுராசு மாலை தெளிவு படுத்துகின்றது. இஸ்லாமியர்களிடம் காணும் பக்ரீத் பண்டிகை இப்ராஹிம் நபி வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சி என்பதை இவ்விலக்கியத்திலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

இவ்வகையில் மிகுராச மாலைச் சிற்றிலக்கியம் பல வகையிலும் சிறப்பாக அமைந்துள்ளது எனக் கூறலாம்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

## பாடம் - 5

# P20245 இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்கள்

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

இஸ்லாம் சமய மெய்ஞ்ஞான நெறியின் பெயரும் அதன்பொருள் விளக்கமும் அளிக்கிறது. இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறியின் அடிப்படைத் தத்துவத்தை விளக்குகின்றது. இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறி தரும் பேறுகளைக் காட்டுகின்றது. தமிழகத்தில் இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறி சைவ சித்தாந்தச் சாயல் பெற்றிருப்பதைத் தெளிவுபடுத்துகிறது.

### இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- அறபு – பாரசீக நாடுகளில் தோன்றிய இஸ்லாமிய மெய்ஞ்ஞானச் சித்தாந்தங்களைத் தெரிந்து கொள்ளலாம்.
- இந்திய – இஸ்லாமிய சமயத் தத்துவங்கள் வேறுபட்டிருப்பினும் ஆன்மிக ஞானப் பயணம் ஒன்றுபட்டிருப்பதை அறிந்து கொள்ளலாம்.
- இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறி இந்நாட்டு மெய்ஞ்ஞானச் செல்வங்களைத் தன்வயமாக்கி இருப்பதை உணர்ந்து கொள்ளலாம்.
- இந்நாட்டு இஸ்லாமிய மெய்ஞ்ஞானியர் காட்டிய வேற்றுமையில் ஒற்றுமை, சமய நல்லிணக்கம், சமுதாயத் தொண்டுகளைப் பயின்று படிப்பினையாகக் கொள்ளலாம்.

# பாட அமைப்பு

5.0 பாட முன்னுரை
5.1 இஸ்லாமிய மெய்ஞ்ஞானியர் சிலர்
5.2 இஸ்லாமிய மெய்ஞ்ஞானம்
5.2.1 நான்கு படித்தரங்கள்
5.2.2 பெறும் பேறுகள்
5.2.3 ஞான பீடங்கள்
5.2.4 இந்திய நாட்டு ஞான பீடங்கள்
தன் மதிப்பீடு : வினாக்கள் – I
5.3 இஸ்லாமியத் தமிழ் மெய்ஞ்ஞானம்
5.3.1 யோக நிலை
5.3.2 நாடிகள்
5.4 இஸ்லாமிய மெய்ஞ்ஞானி
5.5 மெய்ஞ்ஞானத் திறன்
5.6 தொகுப்புரை
தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# 5.0 பாட முன்னுரை

இஸ்லாமிய மெய்ஞ்ஞான (தத்துவ) இலக்கியங்கள் என்பன இஸ்லாம் சமயம் கண்ட மெய்ஞ்ஞான நெறியாகிய சூஃபிச் சித்தாந்தங்களைச் சொல்லும் இலக்கியமாகும், இவ்வகை இலக்கியங்கள் அறபு நாட்டில் அரும்பிப் பாரசீக நாட்டில் வளர்ந்து, தன் தனித்தன்மை குன்றாமல் உலகளாவிய நிலையில் மணம் பரப்பிய இலக்கியங்கள் ஆகும். இந்தியத் திரு நாட்டிற்குச் சூஃபி மெய்ஞ்ஞான நெறி கி.பி 12ஆம் நூற்றாண்டில் வருகை தந்தது. ஆனால் இந்நாட்டுக் கலாச்சார சங்கமங்களை ஏற்றது. இந்நாட்டுச் சித்தர்களின் இயல்புத் தத்துவங்களையும், சைவசித்தாந்தக் கோட்பாடுகளையும் தன்வயமாக்கிக் கொண்டது. வேற்றுமையில் ஒற்றுமை, சமய நல்லிணக்கம், சமுதாயத் தொண்டு போன்றவைகளை மெய்ஞ்ஞான நெறியில் ஓர் அங்கமாகக் கொண்டு மலர்ச்சி பெற்றது. சூஃபி மெய்ஞ்ஞானம் கடிந்துரைக்கும் துறவு நெறியை இம்மெய்ஞ்ஞானியர்கள் பலர் மேற்கொண்டனர். சீராடையின்றி மானம் மட்டும் மறைக்கும் வகையில் – இடையில் – ஓராடையுடன், சடைமுடியும், முகமுடியும் வளர்த்துக் கொண்டு தவமிருந்தனர். சூஃபி மெய்ஞ்ஞான நெறியின் முதற்படியான ஷரீஅத்தைப் புறக்கணித்து, உள்வணக்கம் எனக் கூறிக்கொண்டு மலை முகட்டிலும் பிலத்திலும் (பிலம் = குகை) மரத்திலும் தொங்கிக் கொண்டு மெய்ஞ்ஞானம் அருளினர்.

துறவுக் கோட்பாட்டை அவர்களாகவே

தோற்றுவித்துக் கொண்டனர். இறைவன்

அதனை அவர்கள் மீது கட்டாயமாக்க வில்லை.

இறைவனின் திருப்தியைப் பெறும் முயற்சியில்

அவர்கள் தாமாகவே இந்த முறையைத்

தேர்ந்தெடுத்துக் கொண்டனர்.

என இஸ்லாமியத் திருமறையாகிய அல்குர் ஆனின் திருவசனம் (57 : 27) கூறுகிறது. இந்த ஞானியர் உலகத்தைக் கண்டும் காணா முகத்தினராக இருந்து கொண்டனர். பெண்மையைப் போற்றக் கூறும் இஸ்லாமியத்திற்குப் புறம்பாக பெண்மையைப் பழித்தனர்; இழித்துரைத்தனர்; மாயை என்றனர். இவர்களிடம் இருந்ததெல்லாம் சமய மீறலே என்றாலும் தமிழ் மரபைத் தன்வயமாக்கும் துணிபே எனலாம்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் மெய்ஞ்ஞானத் தமிழிலக்கியங்கள் தனிப்பிரிவாக அமைந்துள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட இஸ்லாமிய மெய்ஞ்ஞானியர் பல்லாயிரக் கணக்கான இஸ்லாமிய மெய்ஞ்ஞானச் சித்தாந்தங்களைச் செய்யுட்களாக அருளிச் செய்துள்ளனர். தமிழகத்தில் இவர்களுடைய வரலாறு கி.பி 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த தக்கலை பீர்முகம்மது அப்பாவிலிருந்து தொடங்குகின்றது. இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறியின் படித்தரங்களான ஷரீஅத், தரீக்கத், ஹகீகத், மாரிஃபத் என்னும் நான்கு நெறிகளும் இறைவனை அறியும் நெறிகளாகும். இதனை,

ஆதியை அறிய வேண்டில் அழகிய நிலைமை நாலாம்

ஓதிய ஷரீஅத் தென்றும் உவந்திடும் தரீக்கத் தென்றும்

நீதிசேர் ஹகீகத் தென்றும் நெறியுளார் மாரி பத்தால்

ஆதியைக் காண லாமென்று அகுமதார் அருளிச் செய்தார்

(ஞானமணி மாலை, செய்யுள் – 11)

எனத் தக்கலை பீர்முகம்மது அப்பா குறிப்பிடுகின்றார்.

ஆதி என்பது இறைவனையும், அகுமதார் என்னும் பெயர் நபிகள் பெருமானாரையும் சுட்டும்.

## 5.1 இஸ்லாமிய மெய்ஞ்ஞானியர் சிலர்

தக்கலை பீர் முகம்மது அப்பா தென்காசியில் பிறந்து கேரள மலைப் பகுதியில் ஆன்மீகத் தவம் மேற்கொண்டார். இவர் தவமிருந்த பகுதி பீர்மேடு என்று இன்றும் வழங்கப்படுகிறது. கேரள மாநில இடுக்கி மாவட்டத்தில் இப் பீர்மேடு அமைந்துள்ளது. இவர் அங்கிருந்து பல்வேறு இடங்களைச் சுற்றி மெய்ஞ்ஞானம் பரப்பி, இன்றைய கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தக்கலைக்கு வந்தார். வாழ்வின் இறுதிவரை அங்குத்தங்கி மெய்ஞ்ஞானம் போதித்து இருபத்தைந்து மெய்ஞ்ஞான நூல்களை அருளியுள்ளார். இவற்றில் பதினெண்ணாயிரம் செய்யுட்கள் அடங்கியுள்ளன.

- பெரிய நூகு லெப்பை ஆலிம்

பெரிய நூகு லெப்பை ஆலிம் காயல்பட்டினத்தில் பிறந்து நாஞ்சில் நாட்டில் உள்ள பூவாறு என்னும் ஊரில் கி.பி 1741 இல் அடங்கப் பெற்றவர் ஆவார். 26 படலங்களும் 910 செய்யுட்களும் கொண்ட வேதபுராணம் என்னும் மெய்ஞ்ஞான நூல் தந்துள்ளார்.

- சேகுனா செய்கு உதுமான்

கி.பி 1699 முதல் 1784 வரை வாழ்ந்தவர் சேகுனா செய்கு உதுமான் ஆவார். கடையநல்லூரில் வாழ்ந்தவர். இவர் அருளிய ஞானப்பிரகாச நவமணி மாலை என்னும் மெய்ஞ்ஞான நூல் சிஸ்தியா என்னும் ஞானபீடத் தத்துவத்தை உள்ளடக்கமாகக் கொண்டது. இதனில் உள்ள சிவராமங்கலம் முகம்மது இப்ராஹிம் அருளிய கப்பல்பாட்டு சைவ சித்தாந்தச் சாயலைக் கொண்டுள்ளது.

- கோட்டாறு ஞானியார் சாகிப்

கோட்டாறு ஞானியார் சாகிப், செய்கு முகம்மதலி என்னும் இயற்பெயர் உடையவர் ஆவார். மலுக்கு முகம்மதலி என்றும் அழைக்கப்பட்டார். கி.பி 1754 இல் பிறந்து 1794 இல் மறைந்தார். 1500 திருவிருத்தப் பாக்களைக் கொண்ட மெய்ஞானத் திருப்பாடற்றிரட்டு என்னும் நூல் அருளி உள்ளார்.

- மெய்ஞ்ஞானி பஷீரொலி

நெல்லை மாவட்டத்தில் உள்ள மேலப்பாளையத்தில் கி.பி 1728 இல் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் முஹயித்தீன் என்பதாகும். இளமையில் ஏற்பட்ட அம்மை நோயால் கண் பார்வையை இழந்தார். பெற்றோர் ஆறாத் துயரடைந்தனர். இவர்களின் குருவாக விளங்கிய கோஸ்முகம்மது பார்வையற்ற அந்தக் குழந்தையைத் தன் மகனாகக் கொண்டார். முதுகில் எழுதப்பெற்று, தமிழ் இலக்கண இலக்கியங்களும் திருமறையாகிய அல் குர் ஆனும் கற்றார். கடையநல்லூர்

மெய்ஞ்ஞான சற்குரு ஷெய்கு உதுமான் ஒலியுல்லாவிடம் தீக்கை பெற்றுப் பஷீர் என்னும் பெயர் பூணப் பெற்றார். இவர், அருஉரு வென்றுரை விண்ணப்பம், இல்லல் லாஹ்கு (கப்பல் பாட்டு) போன்ற எட்டு மெய்ஞ்ஞான இலக்கியங்களை அருளியுள்ளார். இவர் கி.பி 1802 ஆம் ஆண்டு மறைந்தார்.

இவர்களைத் தவிர, தொண்டியில் பிறந்து சென்னையில் மறைந்த குணங்குடி மஸ்தான் சாகிப் (1788 – 1835), தொண்டி மோனகுரு மஸ்தான் சாகிப் (1865 – 1919) போன்றோர் அருளிய மெய்ஞ்ஞானப் பாடல்கள் தமிழ் மெய்ஞ்ஞானச் சாயலுடன் அமைந்த தன்னேரில்லாத தனிச்செல்வம் எனலாம்.

பெண்பால் மெய்ஞ்ஞானியர்களான கீழ்க்கரை ஆசியா உம்மா, தென்காசி ரசூல்பீவி, கச்சிப்பிள்ளை அம்மாள் போன்றோரும் அறியக் கிடக்கின்றனர். இவர்கள் இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறியை இன்றமிழில் அருளிய நங்கை நல்லார் ஆவார்.

இவ்வகையில் நூற்றுக்கும் மேற்பட்டுப் பயிலும் மெய்ஞ்ஞான இலக்கியங்களுக்குள் பெரிய நூகு லெப்பை ஆலிம் அருளிய வேதபுராணம் என்னும் மெய்ஞ்ஞான இலக்கியத்தினை மட்டும் இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்கள் என்னும் இப்பாடத்தில் நோக்குவோம்.

## 5.2 இஸ்லாமிய மெய்ஞ்ஞானம்

இஸ்லாமிய மெய்ஞ்ஞானம், சூஃபி என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றது. இச்சொல் சோபாஸ் (Sophas) என்ற கிரேக்கச் சொல்லடியாகத் தோன்றியது என்றும், அஹலுல் சுஃபா என்ற அறபுச் சொல்லடியாகத் தோன்றியது என்றும் சூஃப் என்ற பாரசீகச் சொல்லடியாகத் தோன்றியது என்றும் ஆய்வாளர்கள் பலரும் பலவாறாகக் கருதுகின்றனர். எவ்வாறாயினும் சூஃபி என்ற சொல், இஸ்லாமிய மெய்ஞ்ஞானியர்களைக் குறிக்கும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடில்லை.

சூஃபி மெய்ஞ்ஞான நெறி அறபு நாட்டில் தோன்றிப் பாரசீக நாட்டில் நிலை பெற்று வளர்ச்சியுற்று, உலகளாவிய நிலையில் வெள்ளமெனப் பரவியது. இந்நெறி மனுக்குல முதல்வரான ஆதம் நபியிலிருந்து தொடங்கியது என்பதற்கான சான்றுகள் இஸ்லாமியத் திருமறையாகிய அல் குர்ஆனில் காணக் கிடைக்கின்றன (அல்குர் ஆன் 5 : 28,29) அல்குர் ஆன் திருவசனங்களை நடைமுறைப்படுத்தி, அதன் வழியில் நடந்து காட்டிய நபிகள் பெருமானாரே சூஃபி மெய்ஞ்ஞான நெறியின் ஊற்றுக் கண்ணாக விளங்குகின்றார். இதனை இவர் மிகுராசுப் பயணத்தில் கைவரப் பெறறார்.

சூஃபி மெய்ஞ்ஞான நெறிக்கு அடிப்படையானது தஸவ்வுஃப் கோட்பாடாகும். தஸவ்வுஃப் என்பதற்கு 'நோக்கு' என்று பொருள் கொள்ளலாம். இஸ்லாமிய மார்க்கச் சட்டங்கள் பிக்ஹு எனப்படும். இது மனிதனுடைய வெளிப்படையான செயலுடன் தொடர்புடையது. பிக்ஹு சட்டங்கள், இஸ்லாமியர்க்கு இடப்பட்டுள்ள கட்டளைகளை, அவர்கள் எவ்வாறு நிறைவேற்றுகிறார்கள் என்று நோக்குகின்றது. கட்டளைகள் இடப்பட்டவாறே நிறைவேற்றி இருந்தால் அவர்களுடைய மனநிலை எத்தகையது என்று பிக்ஹுக்குக் கவலை இல்லை. மன நிலை எப்படி இருக்கிறது என்று எது நோக்குகின்றதோ அதற்குப் பெயர்தான் தஸவ்வுஃப் எனப்படும். அல்குர் ஆனில் இதற்குத் தஸ்கியா அல்லது ஹிக்மத் என்றும், அல் ஹதீசில் இஹ்சான் என்றும் பெயரிடப்பட்டிருக்கிறது.

தஸவ்வுஃப் கோட்பாடு ஷரீஅத்தின் அடித்தளத்தில் அமைந்ததாகும். இஸ்லாமிய மார்க்கம் வகுத்துரைக்கும் கட்டாயக் கடமைகள் ஐந்தினில் அமைந்த மாடம் தஸவ்வுஃப் எனலாம். இம்மாடத்தில் கூடுவோருக்கு ஒரே நோக்கம் இறையன்பு என்ற ஒன்றை எய்தப் பெறுதலேயாம். இறையன்பைப் பெற இறைவனைத் தேடல், இறைவனுக்கு இணங்கல் என்னும் இருகுறிக்கோளுடன் இஸ்லாமிய மெய்ஞ்ஞானிகள் முயல்கின்றனர். இத்தகைய குறிக்கோளுடையவர்கள் செல்லும் பாதை சுலூக் என்றும், சுலூக்கில் நிற்பவர்கள் சாலிகு என்றும் சுட்டப்படுகின்றனர்.

இஸ்லாமிய மெய்ஞ்ஞானி மேற்கொள்ளும் ஆத்மீகப் பயணத்தில் முதற்கண் வேண்டுவது ஆத்ம சுத்தியாகும். ஆத்மசுத்தி என்பது 'தான்' என்னும் அகங்காரம் அழித்து, காமம், வெகுளி, மயக்கம் என்னும் முப்பாழ் கடந்து அனைவரிடமும் பணிவு

மேற்கொள்வதாகும். இது ஒரு நிலை, அடுத்த நிலை இறைவனுக்கு முற்றிலும் சரணடைந்து அவனிடமே பாதுகாவல் நாடி (தவக்குல்) வணங்குதல், வரும் இன்ப துன்பங்கள் யாவும் அவனிடமிருந்தே வருகின்றன எனச் சகிப்புத் தன்மையை மேற்கொள்ளல், தனித்திருத்தல், விழித்திருத்தல், பசித்திருத்தல், நோன்பிருத்தல், இறைத்தியானம், மறைத்தியானம் இன்ன பிறவற்றில் வழுவாமல் செயலாற்றல் மூன்றாம் நிலை, இம்மூன்று நிலைகளிலும் நின்ற மெய்ஞ்ஞானியர்களே சித்தி பெறுவர்.

**5.2.1** நான்கு படித்தரங்கள்

இஸ்லாம் சமயம் கண்ட மெய்ஞ்ஞான நெறி நான்கு படித்தரங்களைக் கொண்டது. அவைகள் ஷரீஅத், தரீக்கத், ஹக்கீகத், மாரிஃபத் என்பனவாகும்.

- ஷரீஅத் (சட்டம்)

ஷரா என்ற அறபுமொழிச் சொல்லுக்குச் சட்டம் என்று பொருள். இஸ்லாமிய வாழ்வியல் சட்டங்கள் யாவும் ஷரீஅத் எனப்படுகின்றன. இச்சட்டங்கள் யாவும் இறைவனால் அருளப்பட்டன, நபிபிரானால் நடைமுறைப்படுத்தப்பட்டன. இறை நம்பிக்கையை மொழிதல் (கலிமா), இறைவழிபாடு (தொழுகை), ஈகை (சக்காத்), நோன்பு, புனித ஹஜ் பயணம் என்னும் ஐந்து கடமைகளில் இஸ்லாம் அமைந்துள்ளது. இவற்றில் புனித ஹஜ் பயணம் வசதி உள்ளோருக்குக் கட்டாயம் என்றாலும் இந்த ஐந்து கடமைகளும் இஸ்லாமியர் யாவருக்கும் உரிய கடமைகள் ஆகும். இஸ்லாமிய ஞானியர்கள் இக்கடமைகளில் தவறாமல் ஊறித் திளைத்தனர் என்பது வெள்ளிடைமலை.

- தரீக்கத் (வழிமுறை)

தரீக் என்னும் அறபுச் சொல்லுக்கு வழி என்று பொருள். தரீக் என்னும் சொல்லடியாகத் தோன்றியதே தரீக்கத் ஆகும். இதற்கு வழிமுறை என்று பொருள்.

ஷரீஅத்தின் முதிர்ந்த நிலையே தரீக்கத்தின் ஆரம்ப நிலையாகும். அதாவது ஷரீஅத்தின் இறுதிப்படியே தரீக்கத்தின் முதற்படியாகும். ஒருவகையில் ஷரீஅத்தின் புறம்தான் வெளிப்படையான தொழுகை, நோன்பு, சக்காத், ஹஜ் போன்றன. அதன் அகம்தான் தரீகத் என்பது. இஸ்லாமிய அகச் சட்டங்களைப் பின்பற்றிய வாழ்க்கை முறை தரீகத் எனலாம். ஷரீஅத்தும் தரீக்கத்தும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்றும் கூறலாம். இரு பக்கங்களும் பழுதில்லாமல் செம்மையாக அமைந்திருந்தால் தான் அந்த நாணயம் செலாவணிக்கு ஏற்றதாகக் கொள்ளப்படும். ஐயப்பாட்டுடன் உற்று நோக்க வேண்டியதில்லை. அவ்வகையில் ஷரீஅத்தும் தரீக்கத்தும் செம்மையாகக் கடைப்பிடித்த ஞானியர்களே தம் ஞானப் பயணத்தைத் தொடரத் தகுதி படைத்தவர் ஆவர்.

தரீக்கத்தின் செயல்முறை திக்ர் (இறைத்தியானம்), தவக்குல் (பரஞ்சாட்டல்),

ஸப்ர் (பொறுமை), ஷுக்ர் (நன்றி செலுத்தல்) ஆகியனவாகும். தரீக்கத்தின் குறிக்கோள் தமது உள்ளத்தை இறைவனோடு தொடர்பு கொண்டு இணைப்பதேயாகும். ஷரீஅத் சட்டங்களைத் தெளிவுபடுத்தி வழி நடத்த ‘ஆலிம்’ எனப்படும் சமய அறிஞர்களின் வழிகாட்டுதல் தேவை என்பதைப்போல, தரீக்கத்தின் அகச்சட்டங்களைப் பின்பற்ற விருப்பம் உடையவர்களை வழி நடத்த ஞானாசிரியர் ஒருவர் தேவைப்படுகிறார். அந்த ஞானாசிரியர் முர்ஷித் அல்லது பீர் (Peer) எனப்படுகிறார். ஞானாசிரியர் ஒருவர் இல்லாமல் தரீக்கத் வழியில் செல்வோரைத் தக்கலை பீர்முகம்மது சாகிப் மிகுதியாகச் சாடுவதும் குறிப்பிடத்தக்கது.

- ஹகீகத் (தெளிவு)

ஹக் என்பதற்கு உண்மை, தெளிவு என்று பொருள், எல்லாம் வல்ல அல்லாஹ்விற்கு ஹக் என்ற திருப்பெயர் இருப்பதும் காட்டத்தக்கது. இறைவனைப் பற்றிய உண்மை அல்லது இறைவனைப் பற்றிய தெளிவே ஹகீகத் எனலாம்.

ஆத்ம ஞானி முதலில் ஷரீஅத்தை வன்மையாகப் பின்பற்றி நடந்து, தரீக்கத்தை அறிந்து, ‘சுலூக்’ என்றும் ஞானப்பாதையைக் கடந்து, ஹகீகத்தின் உன்னத நிலையை அடைந்து விடுகிறார் என்பர். ஆத்ம ஞானியின் குறிக்கோள் இறைவனைத் தவிர வேறு எதுவும் இல்லை. இறைநாட்டத்தில் – இறைக்காதல் பாதையில் – வேறு எந்தச் சிந்தனையும் இல்லாமல் இதய சுத்தியுடன் தினமும் தவறாமல்

...அல்லாஹ்...... அல்லாஹ்....

என்று மெதுவாக வாய்விட்டுச் சொல்லிய வண்ணம் தியானத்தில் (திக்ரில்) ஈடுபடவேண்டும். அந்தச் செயலில் முழுக்கவனமும் செலுத்தப்படவேண்டும். அப்போதுதான் அந்தத் தியானத்தில் தோன்றும் வன்மையை மனம் பற்றிக் கொள்ளும். அந்தப் பற்றுதலைக் கை விடாமல் மேலும் மேலும் தியானத்தில் ஈடுபட, பக்தன் தன்னை மறந்த நிலைக்குள்ளாகிறான். அவனுடைய நா அந்நிலையில் அனிச்சைச் செயலுக்குள்ளாகி (Reflex Action).

...அல்லாஹ்....அல்லாஹ்....

எனச் சொல்லத் தலைப்படும். அப்போது உள்ளத்தில் இதமான சூடும் ஒளியும் பிறக்கும். அந்த ஒளி மனம் முழுவதும் வியாபித்துவிடும். அந்த அடியானின் சொல்லும் செயலும் இயக்கமும் அந்நிலையில் ஒளிமயமாகிவிடும். திக்ர் என்னும் அந்த ஆழ்நிலைத் தியானம் உச்சநிலை அடையும்போது இவ்வொளி மிகுதியாகப் பிரவாகமெடுத்துப் பிரகாசிக்கத் தொடங்கும். இவ்வொளி தஜல்லி (Illumination) எனப்படும்.

தஜல்லி என்னும் தெய்வீக ஒளி மிகுதியாகப் பிரவாகம் எடுக்கப்பெற்ற அந்த பக்தன், ஜஸ்பா என்னும் பரவச நிலையில் ஆழ்ந்து விடுகிறான். ஹகீகத்தின் உச்ச

நிலையில் கால் வைக்கிறான்.

ஹக்கீகத் நிலைக்கு வந்த பக்தன், மேலும் மேலும் இறைத்தியானத்தைக் கைக்கொள்ளும் பொழுது 'ஹிஜாப்' என்னும் திரை நீங்குகின்றது. தன்னை அறியத் தொடங்குகின்றான். ஆத்மாவின் உண்மை, அல்லாஹ்விற்கும் தனக்கும் இடையில் இருக்கும் தொடர்புகள், இறை ரகசியம் இன்னபிற யாவும் அந்த ஞானிக்குத் தெளிவாகத் தெரிய ஆரம்பிக்கின்றது. அந்நிலையில் அம் மெய்ஞ்ஞானி மாரிஃபா நிலை எய்தப் பெறுகிறான்.

- மாரிஃபத்து

மாரிஃபத்து என்பதற்கு அறிந்து கொள்ளுதல் அல்லது புரிந்து கொள்ளுதல் என்று பொருள். இறை இயல்புத் தத்துவத்தை அல்லது இறை ரகசியத்தைப் புரிந்து கொள்ளுதல் மாரிஃபத் எனலாம்.

ஹகீகத்தின் இறுதி நிலையே மாரிஃபத் ஆகும். மாரிஃபத் நிலையை அடைந்தவர்கள் இறைவனுடன் நேரடித் தொடர்பு எய்தப் பெற்றவர்கள் என்பர். அவ்வாறான இறைத் தொடர்பு எய்தப் பெற இதயம் முதலிடம் வகுக்கிறது. இதயம் என்பது வெறும் தசைக் கட்டி அல்ல. இயங்கும் மற்றும் இயங்காப் பொருட்களின் உண்மையை அறியும் உள்ளம் ஆகும். அவ்வாறு அறியும் வகையில் திக்ர் முதலான தியானம் மேற்கொண்ட உள்ளம் ஒளியைப் பெற்றுவிட்டால், இறை உள்ளத்தின் பிம்பமாகவே அது விளங்குகிறது. தஜல்லி என்னும் ஞானஒளி 'இல்ஹாம்' என்னும் தெய்வ வெளிப்பாடு ஆகிய இரண்டின் மூலமாகத்தான் இந்த அறிவைப் பெற முடியும். ஞானியர்கள் பெறும் இந்த ஞானமே மாரிஃபத் எனலாம்.

- உவமைகள்

தமிழ் மெய்ஞ்ஞான இலக்கியங்கள் ஷரீஅத், தரீக்கத், ஹகீகத், மாரிஃபத் ஆகிய நான்கும், ஒரு மெய்ஞ்ஞானிக்கு இன்றியமையாதது என்னும் வகையில் அழகியதோர் உவமை காட்டுவதும் காணத்தக்கது.

ஒரு மனிதனுக்கு பேச்சு, மூச்சு, காது, கண் ஆகிய உறுப்புக்கள் எவ்வகையில் இன்றியமையாததோ அவ்வகையில்

பேச்சு ஷரீஅத்து ; மூச்சானது

பெரியோன் தரீக்கத்து; கேள்விதானும்

ஆச்சு ஹக்கீகத்; கண்ணானது

அருளும் மாஅரிஃபத் தென்று ஓதினார்

எனப் பெரிய நூகுலெப்பை ஆலிம், வேத புராணத்துள் குறிப்பிடுகின்றார்.

வெள்ளாட்டி மசலா என்னும் இஸ்லாம் சமயத் தத்துவ உரைநடை இலக்கியம், ஷரீஅத் என்பது நபிபிரானின் சொல் என்றும், தரீக்கத் என்பது நபிபிரானின் செயல் என்றும், ஹகீகத் என்பது நபி பிரானின் தோற்றம் என்றும், மாஅரிஃபத் என்பது நபிபிரானின் நிலை என்றும் வகுத்துரைப்பது வேதபுராணத்துடன் ஒப்புநோக்கத்தக்கது. மேலும் கடல், தோணி, சிப்பி, முத்து என்பன போலவும் என்றும், ஷரீஅத் கண்; தரீக்கத் காது; ஹகீகத் மூக்கு; மாரிஃபத்து நா என்றும் குறிப்பிட்டு, இந்நான்கும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்க இயலாது என்னும் வகையில் வலியுறுத்துவதும் சிந்திக்கத்தக்கது.

### 5.2.2 பெறும் பேறுகள்

இஸ்லாமிய மெய்ஞ்ஞானியர்கள் மேற்கொள்ளும் ஆத்மப் பயணம் நாசூத்து, மலக்கூத்து, ஜபறூத்து, லாஹூத்து என்னும் நான்கு பேறுகளையும் அளித்து ஈற்றில் லாஹூத்து நிலைக்கு உயர்த்தும் என்பர். நாசூத்து என்பது இந்த ஜடலோகத்தைக் குறிக்கும். மலக்கூத்து என்பது வானவர் உலகத்தையும், ஜபறூத்து என்பது சக்திலோகத்தையும், லாஹூத்து என்பது தெய்வ லோகத்தையும் குறிக்கும். ஞானப் பயணம் அதன் முதிர்ச்சியால் இந்த ஜட லோகத்தை விட்டு வானவர் உலகத்தில் முதலில் புகச் செய்யும். பின் ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் செயற்பண்பினை அடையச்செய்து சக்தி லோகத்தைப் பெறச் செய்யும்; அதற்குப் பின்னும் மேற்கொள்ளும் செப தப வாழ்வு உருவமற்று, காணல், கேட்டல், பேசல் முதலிய பண்பினை எய்தச்செய்து, தெய்வ லோகத்தை எட்டச் செய்யும். அதற்குமேல் இறைப்பண்பில் அந்த ஆத்ம ஞானி தோய்ந்து லாஹூத்துப் பேறு பெறுகிறான்.

- வாசிநிலை

இந்த ஜடலோகம் வாசியில் அமைந்தது. (வாசி = பிராணவாயு) சாதாரணப் பாமரன் முதல் பரமன் அருள் வேண்டித் தவம் செய்யும் ஞானியர்கள் வரை வேண்டுவது வாசி நிலையேயாகும். இதனில் ஞானியர்கள் கைக்கொள்ளும் வாசிநிலை அவர்களை உயர்த்தி மலக்கூத்து என்னும் வானவர் உலகில் சேர்க்கும். அவ்வாறு வானவர் உலகில் சேர்ந்த ஞானியர்கள் மேலும் முயன்று வாசி நிலையால் ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் செயற்பண்பினைப் பெற்று ஜபறூத் என்னும் சக்தி உலகில் புகுவர். பின்னும் மேற்கொள்ளும் வாசி, தவம் ஆகியவற்றால் காணல், கேட்டல், பேசல் ஆகிய லாஹூத்து என்னும் தெய்வ நிலைக்கு உயர்த்தும் என்பதாகும்.

நாசூத்து, லாஹூத்து, மலக்கூத்து, ஜபறூத்து என்னும் நான்கு உலகும் வாசி நிலை என்ற ஒன்றின் அடிப்படையில் அமைந்தன என்பதனை, தமிழ் மெய்ஞ்ஞான இலக்கியங்கள் புனைந்திருப்பதும் இங்குச் சுட்டத் தக்கது.

பூவாற்றில் அடக்கமாகி இருக்கும் பெரிய நூகு லெப்பை ஆலிம் புலவர் அருளிச் செய்த வேதபுராணம்.

நாசூத் தானது நாசிநுனி

நலமான மலக்கூத்து நாசிநீளம்

வாசி ஜபறூத்து நாசி மூடு

வடிவாம் லாகூத்துக் கண்பார்வை

என வாசி நிலையிலும் கண் பார்வையிலும் இந்நான்கு தலமும் அமைந்திருப்பதாகக் கூறுவதும் நோக்கத் தக்கது.

காயல்பட்டினத்து ஞானி முகம்மது முகைதீன் ஆலிம் அருளிய ஷாதுலி நாயகம் என்னும் மெய்ஞ்ஞான இலக்கியம் இதனை,

வாசிநிலை நாசூத்து; வளர்ந்த நிலை மலக்கூத்து

பிரிசமுடன் ஜபறூத்து; பேணும் தலம் லாகூத்து

(பிரிசமுடன் = பிரியமுடன்)

எனக் குறிப்பிடுகிறார்.

### 5.2.3 ஞான பீடங்கள்

சமய சம்பந்தமான நெறிமுறைகளைக் கற்பிக்கும் இடம் ஞானபீடம் எனப்படும்.

கி.பி 12ஆம் நூற்றாண்டில் பாரசீக நாட்டிலும், அறபு நாட்டிலும் அதன் அண்டை அயல் நாடுகளிலும் இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறியை முறையாகப் பயிற்றுவிக்க ஞான பீடங்கள் பல தோன்றின. இறைத்தியானம் (திக்ர்), பரஞ்சாட்டல்(தவக்குல்), பொறுமை(சபர்), நன்றி செலுத்துதல் (ஷுக்கூர்) ஆகிய இன்னபிற அடிப்படை நெறிகளை இந்த ஞான பீடங்கள் பயிற்றுவித்தன. இவற்றில் மாணவர்கள் நிரந்தரமாகத் தங்கி உணவு முதலான வசதிகளுடன் பயிற்சி பெற்றனர். இத்தகைய ஞான பீடங்கள் கான்கா என்று அழைக்கப்பட்டன. கான்கா என்பதற்குத் தியானக் கூடம் என்று பொருள் கொள்ளலாம். சில இடங்களில் இத்தகைய கான்காக்கள் ஜாவியா (Zaviya) என்றும் தக்கியா (Dhakhiya) என்றும் ரிபாத் (Ribath) என்றும் வழங்கப்பட்டன.

ஞானபீடம் கண்ட ஞானியர்கள் தத்தம் அனுபவ ஆற்றலுக்கு ஏற்ப மெய்ஞ்ஞான நெறிமுறைகளை வகுத்தளித்தனர். அம்முறைகள் யாவும் 'தான்' என்பதிலிருந்து பிரிந்து இறைவனை எய்தப் பெறும் மார்க்கமாக இருந்தன. ஒரு ஞானி வகுத்தளித்த அணுகுமுறை இன்னொரு அணுகுமுறையிலிருந்து வேறுபட்டதாக இருந்தது. அவைகள் யாவும் தனித்தனித் தரீக்காக் (Form or Order) களாக இருக்கின்றன. ஆனால் எல்லா அணுகு முறைகளும் பரவச நிலை (ஜஸ்பா – Ecstacy) பெறும் வகையிலும், ஞானஒளி (தஜல்லி – Illumination of Heart), தெய்வ வெளிப்பாடு (இல்ஹாம் Intuition) தோற்றுவிக்கும் வகையிலும் அமைந்து விளங்குகின்றன. இவ்வகையில் அமைந்த தரீக்காக்கள் யாவும், ஞானபீடம் கண்ட ஞானியர்களின் பெயரைப் பெற்றமைகின்றன. சான்றாக முகியித்தீன் ஆண்டகை எனத் தமிழக மக்களால் அழைக்கப்படும் அப்துல்காதர் ஜீலானி அருளிய நெறி காதிரியாத் தரீக்கா என்றும், அபுல்ஹசன் ஷாதுலி இமாம் வகுத்தநெறி ஷாதுலியாத் தரீக்கா என்றும், அபு இஸ்ஹாக் சிஸ்தி தந்தநெறி சிஸ்தியாத் தரீக்கா என்றும் வழங்கப்படுகின்றன. இவ்வாறே அனைத்துத் தரீக்காக்களும் அவற்றை அருளிய ஞானியர்களின் பெயராலேயே குறிப்பிடப்படுகின்றன.

உலகளாவிய நிலையில் பதினான்கு தரீக்காக்கள் நிலைபெற்றுள்ளன. அவற்றுள் காதிரியா, ஷாதுலியா, சிஸ்தியா ஆகிய மூன்று தரீக்காக்களே தமிழகத்தில் பெரும்பான்மை பெற்று விளங்குகின்றன. இம்மூன்று தரீக்காக்களுடன், நக்ஷபந்தி, சுஹ்ராவர்தி, ஷத்தாரி ஆகிய மூன்று தரீக்காக்களுமாக ஆறு தரீக்காக்கள் வட இந்தியாவில் நிலை பெற்றிருக்கின்றன.

**5.2.4** இந்திய நாட்டு ஞான பீடங்கள்

- சிஸ்தியா

இந்தியத் திருநாட்டில் கால்கொண்ட முதல் இஸ்லாமிய மெய்ஞ்ஞான பீடம் சிஸ்தியா நெறி (தரீக்கா) ஆகும். இது சிரியா நாட்டவரான அபு இல்ஹாக் சிஸ்தி என்னும் மெய்ஞ்ஞானியாரால் நிறுவப்பட்டது. பாரசீக நாட்டில் உள்ள குரசான் மாநிலத்தில் உள்ள சீஸ்தான் என்னும் ஊரினரான காஜா முஜனுதீன் சிஸ்தி (கி.பி 1116-1229) என்னும் மெய்ஞ்ஞானி ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள அஜ்மீரில் சிஸ்தியா ஞான பீடத்தை நிறுவினார். வாழ்வின் இறுதிவரை அவர் அங்கு வாழ்ந்து, சாதி மதச் சார்பற்ற முறையில் சிஸ்தியா மெய்ஞ்ஞான நெறியைப் போதித்தார். இவருடைய காலத்திலும் இவருக்குப் பின்வந்த நிஜாமுதீன் அவுலியா காலத்திலும் இந்தோ – இஸ்லாமியக் கலாச்சாரங்கள் சங்கமம் கொண்டன. இசை, இஸ்லாமியர் வாழ்வுடன் கலந்தது. கொட்டடித்தல், தேர்த்திருவிழா போன்ற இந்துத்துவச் சடங்குகள் இஸ்லாமியத்தில் ஏறின. சமூக சேவை மெய்ஞ்ஞான நெறியின் ஓர் அங்கமாகக் கொள்ளப்பட்டது. இந்தியக் கலாச்சாரப் பண்பாட்டில் வேற்றுமையில் ஒற்றுமை நிலவியது. மன்பதை நலனுக்கு இறைவனை யார் நேசிக்கிறார்களோ அவர்களையும் இறைவன் தனக்கு நெருக்கமுள்ளவராகக் கொள்கிறான் என்றார் நிஜாமுதீன் அவுலியா. யாவருக்கும் சாந்தி

என்ற தாரக மந்திரத்தையும் அவர் போதித்தார். எல்லா மதங்களின் இறுதி நோக்கமும் இறைவனுக்கு அடிபணிந்து அவனில் சரண் புகுவதே என்றும் போதித்தார். சிஸ்தியாத் தரீக்காவின் கோட்பாடுகள், கலாச்சாரச் சங்கமங்களைத் தன்மயம் ஆக்கிக் கொண்டது. அதனால் மிக வேகமாகப் பரவியது.

- சுஹ்ராவர்தியா

சுஹ்ராவர்தியா என்னும் ஞானபீடத்தை நிறுவியவர் அப்துல் காதர் சுஹ்ராவர்தி (மரணம் 1167), உமர் சுஹ்ராவர்தி என்னும் இரு சகோதரர்கள் ஆவர். இவர்கள் ஈராக்கின் தலைநகரான பாக்தாத்தில் பிறந்தவர்கள், இந்த இயக்கம், பிறந்த மண்ணில் செல்வாக்குப் பெறவில்லை. இந்தியாவில் ஆப்கானிஸ்தானத்தில் நன்கு வேரூன்றியது.

ஷத்தாரியா

கி.பி 1415இல் அப்துல்லா ஷத்தார் என்னும் ஞானியரால் ஷத்தாரியா நெறி ஆரம்பிக்கப்பட்டது. ஷத்தாரியா அமைப்புத் தொடங்கப்பட்ட போது சிஸ்தி, சுஹ்ராவர்தி அமைப்புகளின் செல்வாக்குக் குறைந்தது. ஷத்தாரியா அமைப்பினால் இந்திய இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறி மாறுபட்ட கருத்தின்பால் நழுவத்தொடங்கியது. இந்து மக்களிடையே வேற்றுமையைக் களைந்து ஒற்றுமைப்படுத்தத் துணை நிற்கும் யோகம் போன்ற நியமங்களை ஷத்தாரியா அமைப்புத் தனதாக்கிக் கொண்டது. சுருங்கக் கூறினால் இஸ்லாமிய மெய்ஞ்ஞானத் தத்துவ இயலை வேதாந்தச் சாயலோடு ஒப்புமைப்படுத்தியது.

- நக்ஷபந்தி

நக்ஷபந்தித் தரீக்காவை நிறுவியவர் நக்ஷபந்த் முஹம்மது (கி.பி.1317-1389) என்னும் மெய்ஞ்ஞானி ஆவார். இவருடைய தந்தையார் முகம்மது பஹாவுதீன்; பாரசீக நாட்டிலுள்ள புகாரா என்னும் நகரத்திற்கு அருகில் உள்ள ஷந்தவான் என்னும் ஊரினர் ஆவார். நக்ஷ் என்பதற்கு ஓவியம் என்று பொருள். இவ்வியக்கம் மெய்ஞ்ஞானத் தத்துவத்தை ஓவியமாகப் புனைந்து அருளியது. நக்ஷபந்தி இயக்கம் சமூகத் தொண்டை ஓர் அங்கமாகப் பின்பற்றியது. ஆனால் காலம் செல்லச் செல்ல இந்நிலை மாறியது. இஸ்லாமியத்திற்குப் புறம்பான கலாச்சாரச் சங்கமத்தைக் கொண்டது. சமய நல்லிணக்கமே குறிக்கோளாகக் கொண்டது.

- ஷாதுலியா

ஷாதுலியா தரீக்காவை நிறுவியவர் அபுமதியான் என்னும் மெய்ஞ்ஞானியர் ஆவார். உலகளாவிய நிலையில் பரப்பியவர் ஆப்பிரிக்காவில் உள்ள கெமாரா என்னும் ஊரினரான அபுல் ஹசன் அலி ஷாதலிஇமாம் (கி.பி. 1116-1259) ஆவார். ஷரீஅத்தை

மிகக்கடுமையாக பேணித் தரீக்கத்தை எய்துவதையே இவர் போதித்தார்.

- காதிரியா

ஷரீஅத் என்னும் அஸ்திவாரம் ஆட்டம் கண்டு, தரீக்கத் இந்நாட்டில் கலாச்சாரச் சங்கமங்களுடன் பேணப்பட்டு வரும் நிலையில், கி.பி 1481இல் காதிரியா தரீக்கா வட இந்தியாவிற்கு வருகை தந்தது. இக்காலத்தில் வடஇந்தியாவில் சிக்கந்தர் லோடியின் ஆட்சி அமைந்திருந்தது. முகியித்தீன் ஆண்டகையின் தலைமகன் வழிப் பெயரர் முகம்மது கவுது ஜீலானி இங்கு இத்தரீக்காவிற்கு வித்திட்டார். அரசரும் அமைச்சரும் மற்றும் அரசியல் ஆயத்தார் பலரும் காதிரியாத் தரீக்காவை ஏற்றனர். முகலாய மன்னர் ஷாஜஹான் காலத்தில் இந்தியாவிற்கு வந்த அபுல் அலி காதிரியும் மியாமீர் என்ற ஆத்ம ஞானியும் பஞ்சாபில் காதிரியாத் தரீக்காவைப் பரப்பினர். அரசரின் பேராதரவு இருந்ததால் கான்காக்கள் பல நிறுவப்பட்டன.

வடஇந்தியாவில் காதிரியாத் தரீக்காப் பரவிய அதே வேகத்தில் தமிழகத்திலும் பரவியது எனலாம். முகியித்தீன் ஆண்டகையின் வழித்தோன்றல் ஷைகு அஹமது ஜலாலுதீன் காயல்பட்டினத்திற்கு வந்து சுலைமான் காஹிரி, கோட்டைப்பட்டினம் ஷெய்க் முகம்மது ஷா; திருமங்கலம் லானா அபுபக்கர் ஒலியுல்லா முதலானோருக்குக் காதிரியாத் தரீக்காவின் ஞான தீட்சை வழங்கினார்.

சுலைமான் காஹிரியின் மகன் சதக்கத்துல்லா அப்பா அன்றைய நிலையில் பார்சி மொழிவல்ல மெய்ஞ்ஞானக் கடலாகத் திகழ்ந்தார். இவருடைய சீடர்களான மஹ்முது தீபியும் வேதபுராணம் அருளிய பூவாற்று பெரியநூகுலெப்பையும் தமிழகத்தில் காதிரியாத் தரீக்காவைப் பரப்பிய நல்லார் ஆவார். சதக்கத்துல்லா அப்பாவின் மகன் உமர் ஒலியும், காயல்பட்டினம் தைக்காசாகிபும், கள்ளிக் கோட்டை, கண்ணனூர், தலைச்சேரி, கோட்டாறு, திருவனந்தபுரம் முதலான பகுதிகளில் காதிரியாத் தரீக்காவைப் பரப்பினர்.

தமிழகத்து மெய்ஞ்ஞானியர் பலரும் முகியித்தீன் ஆண்டகையைத் தம் ஆன்மீகக் குருவாகக் கொண்டு தத்தம் மெய்ஞ்ஞான இலக்கியங்களில் குருவணக்கம் அருளியுள்ளனர். சான்றாக,

இணங்குமெய்ஞ் ஞானப் பேரின்பக் கடலில்

இன்னமு தெடுத்தெமக் களிப்போன்;

பிணங்கிய கோச பாசமா மாயைப்

பின்னலைப் பேர்த்தெரிந் திடுவோன்;

வணங்கயி தவத்தி னோர்க்கருள் புரிய

வள்ளலாய் வந்தமா தவத்தோன்

குணங்குடி வாழு முகியித்தீ னாமென்

குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம்.

என்று குணங்குடி மஸ்தான் சாகிபு அருளிய திருப்பாடற்றிரட்டு நூலில் (செய்யுள் -1) கடவுள் வாழ்த்துப்பா அமைந்திருப்பதைக் காட்டலாம்.

## தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 5.3 இஸ்லாமியத் தமிழ் மெய்ஞ்ஞானம்

இஸ்லாம் சமயம் கண்ட மெய்ஞ்ஞான நெறி இந்தியத் திருநாட்டிற்கு வெளியே தோன்றியது; என்றாலும் அந்நெறி இந்நாட்டில் மகத்தான வெற்றியைக் கண்டிருக்கிறது. அதற்குக் காரணம் இந்நாட்டு மக்களிடம் இருந்த இயல்பான மனோநிலையும் மத சகிப்புத் தன்மையுமேயாம். அடிக்கடி தோன்றிய அரசியல் மாற்றமும் ஒரு காரணம் எனக் கூறலாம். இந்திய இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறி ஒரு புறம் ஷரீஅத்திலிருந்து வழுவி இந்நாட்டு யோகம் முதலான நியமங்களைக் கைக் கொண்டு தரீக்கத்தை வளர்த்தால், மறுபுறம் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்குப் பாடுபட்டது. இத்தகைய நிலையில் தான் இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறி தமிழகத்தில் வித்திடப்பட்டது.

தமிழகம் மிகப் பழங்காலம் முதலே சித்தர்களின் இயல்புத் தத்துவங்களில் ஊறித் திளைத்திருந்தது. இஸ்லாமிய மெய்ஞ்ஞானச் சித்தாந்தங்களைப் பயின்ற தமிழகத்து இஸ்லாமிய மெய்ஞ்ஞானியர்கள் அவற்றை ஒப்பீட்டு முறையில் நோக்கினர். இஸ்லாமியம் கூறும் ஷரீஅத், தரீகத், ஹகீகத், மாரிஃபத் என்னும் நெறிகளைச் சரியை, கிரியை, ஞானம், யோகம் என்பவற்றுடன் ஒப்பு நோக்கினர். அந்நெறி தரும் பேறுகளாக இஸ்லாமியம் குறிக்கும் நாசூத்து, மலக்கூத்து, லாகூத்து, ஜபறூத்து என்பவற்றைச் சைவ சித்தாந்தம் சொல்லும் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுஜ்ஜியம் என்னும் பேறுகளுடன் ஒப்பு நோக்கினர். சைவம் காட்டும் போதம் இஸ்லாமியம் காட்டும் இல்ம் (கல்விஞானம்) ஆகும். ஆலமே மீதால் எனப்படும் மூலமாதிரி உலகு வேதாந்தத் தத்துவத்தில் உள்ள மாயாவோடு ஒப்பிடத்தக்கது. இவ்விரு நெறிகளும் அறிவின் துணையின்றி ஆத்தும விடுதலை பெற இயலாது என்பதை மிக அழுத்தம் திருத்தமாக வலியுறுத்துகின்றன என்பர். இவ்வகை ஒப்பாய்வுச் சிந்தனை வயப்பட்ட இஸ்லாமிய மெய்ஞ்ஞானியர்கள் பலரும் எழுச்சி பெற்றனர். இஸ்லாமிய மெய்ஞ்ஞானப் பாடல்கள் அருளிச் செய்துள்ளனர். ஷரீஅத், தரீகத், ஹகீகத், மாரிஃபத் என்னும் நான்கு நெறிகளையும் அருளியுள்ளனர். ஆனால் அவற்றில் சைவச் சித்தாந்தச் சாயலோ சித்தரியல்புத் தத்துவ மணமோ வீசாமல் இல்லை.

### 5.3.1 யோக நிலை (Gnosis)

மனிதன் இறைவனிடம் தொடர்பு கொள்வதில் உள்ளம் முதலிடம் வகிக்கிறது. உள்ளம் என்றால் உடலில் உள்ள தசைக்கட்டி அல்ல. எல்லாப் பொருட்களிலும் உள்ள உண்மைத் தன்மையை உணரும் உணர்வே உள்ளம் எனப்படும். மெய்ஞ்ஞானத்தால் அஃது ஒளி பெற்று விட்டால் இறை உள்ளத்தின் பிம்பமாக விளங்கும். இத்தகைய ஒளியைப் பகுத்தறிவால் பெற முடியாது. தஜல்லி எனப்படும் ஞானஒளி (Illumination of Heart), இல்ஹாம் எனப்படும் தெய்வ வெளிப்பாடு (Inspiration) ஆகிய இரண்டின் மூலமாகத்தான் அடையமுடியும். மெய்ஞ்ஞானி எய்தப்பெறும் இத்தகைய அறிவே

மாரிபஃத் என்கிறோம். இதனை இர்ஃபான் (Irfan) என்றும் கூறுவர். இர்ஃபான் என்பதே யோகநிலை ஆகும்.

யோகம் என்பது நெடுநாள் உயிர் வாழ்தலாகிய காயசித்தியைக் கருவியாகக் கொண்டு இறைவனை நினைந்து வழிபடும் முறையாகும். மூலாதாரத்திற்கு மேலுள்ள அனலை நுண்ணிய சுழுமுனை என்னும் நாடியின் வாயிலாகச் சிரசில் சேர்த்து அதன்கண் நின்றொழுகும் அமுதத்தை உலகெங்கும் பரவச் செய்வதே காயசித்தியாகும்.

யோகத்தில் ஆறு ஆதாரமும் மூன்று மண்டலமும் இன்றியமையாதன.

**5.3.2** நாடிகள்

நாடிகள் மூன்று வகைப்படும். அவை சுழுமுனை, இடகலை, பிங்கலை என்பனவாகும்.

ஆறு ஆதாரங்களையும், மூன்று மண்டலங்களையும் இம்மூன்று நாடிகளும் ஊடுருவிச் செல்வனவாகும்.

இடகலை என்பது இடது நாசியினால் உள்ளே செல்லும் மூச்சு ஆகும்.

பிங்கலை என்பது வலது நாசியின் வழியாக உள்ளே செல்லும் மூச்சு ஆகும்.

சுழுமுனை என்னும் நாடியை இஸ்லாமிய மெய்ஞ்ஞானியர் அபுல் என்பர். உடம்பிற்குள் ஒரு குழல் இருக்கிறது. இது மூக்கிலிருக்கும் இருதுவாரங்களுக்கும் அடிமூலம் வழியாகும். அதற்குள் ஒரு நரம்பு இருக்கிறது. அது பொற்கம்பி போல் பிரகாசித்துக் கொண்டிருக்கும். அதனை தத்தியா என்றும் பிரம்ம நாடி என்றும் கூறுவர்.

மண்டலங்கள் மூன்று

நெருப்பு மண்டலம், ஞாயிறு மண்டலம், திங்கள் மண்டலம் என மண்டலம் மூன்றாகும். நெருப்பு மண்டலம் மூலாதாரத்திற்கு இருவிரற்கிடைக்குமேல் நாற்கோணமாய் நடுவே ஒரு முக்கோணமுடையதாய் நாலிதழ்ப் பூப்போல் இருக்கும்.

ஞாயிறு மண்டலம் உந்திக்கு நாலு விரற் கிடைக்குமேல் இதய கமலத்திற்கு அருகில் அறுகோணமாய் எட்டிதழ்ப் பூப்போல் இருக்கும்.

திங்கள் மண்டலம் தலை நடுவில் மிகுந்த ஒளியோடு அமுதக் கலை உள்ளதாய் விளங்கும்.

இவ்வகையில் அமைந்த யோக நிலையைத் தமிழில் அருளிய இஸ்லாமியத் தமிழ் மெய்ஞ்ஞானியர்கள் பலரும் தம்வயப்டுத்தி, இஸ்லாமியத் தமிழ் மெய்ஞ்ஞான இலக்கியம் அருளியுள்ளனர்.

## 5.4 இஸ்லாமிய மெய்ஞ்ஞானி

இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறியை யோகம் முதலான கலாச்சார சங்கமங்களுடன் அருளியவர்களுள் பெரிய நூகுலெப்பை ஆலிம் முன்னோடியாகிறார். அவர் அருளிய வேதபுராணம் என்னும் இலக்கியமே இந்த வகையில் முதல் நூலாக அமைகிறது.

- பெரிய நூகுலெப்பை ஆலிம்

நெல்லை மாவட்டத்திலுள்ள காயல்பட்டினத்தில் நூகுலெப்பை ஆலிம் பிறந்தார். இவருடைய தந்தை அப்துல்காதிர் ஆலிம் ஆவார். இவர் சில காலம் மஞ்சக்கொல்லையில் தங்கி இருந்து அங்கேயே இறப்பெய்தினார். இளைய நூகுலெப்பை, மஞ்சுக் கொல்லையில் இருந்த சதக்கத்துல்லா அப்பாவின் உடன் பிறந்தாரான அஹமதொலி என்பாரிடம் மார்க்கக்கல்வியைக் கற்றார். (மார்க்கக் கல்வி = இஸ்லாம் சமயக் கல்வி) பின் பரங்கிப் பேட்டைக்குச் சென்று மஹ்மூது தீபியிடம் காதிரியா மெய்ஞ்ஞான நெறியினைப் பயின்றார். கற்று வல்ல பெருஞானியாகப் பல்வேறு இடங்களுக்குச் சென்று மெய்ஞ்ஞானம் போதித்தார். பின் பூவாறு என்னும் ஊருக்கு வந்து நங்கை நல்லார் ஒருவரை மணந்து நன்மக்களை ஈன்று தவ வாழ்வை மேற்கொண்டார். நிரந்தரமாக அவ்வூரிலேயே தங்கி வேதபுராணம் அருளினார்.

வேதபுராணம் சமயச் சார்பான கருத்துக்ளையே முதன்மையாகக் கொண்டுள்ளது. திருமறையாகிய அல் குர்ஆனின் கருத்துகள் இலக்கியத்தின் கருப்பொருளாக அமைந்துள்ளன. அதேசமயம் சைவச் சித்தாந்தச் சாயலும் கொண்டுள்ளது. இந்நூல் 26 படலங்களும் 910 செய்யுட்களையும் பெற்றுள்ளது. இவர் கி.பி 1741இல் பூவாற்றில் சமாதி பெற்றார்.

# 5.5 மெய்ஞ்ஞானத் திறன்

சைவ சமயச் சித்தாந்திகளும் தமிழ்ச் சித்தர்களும் யோகத் தமர்ந்து ஓம் என்னும் பிரணவ நாதத்தைச் செபித்து மூலாதாரத்தில் உள்ள அனலைச் சிரசில் சேர்த்து, அதன்கண் நின்றொழுகும் அமுதத்தினை உடலெங்கும் பரவச்செய்து நீண்ட நாள் வாழ்ந்திருந்ததைப் போலவே, இஸ்லாமிய மெய்ஞ்ஞானியர்களும் வாழ்ந்திருக்கின்றனர். தக்கலை பீர்முகம்மது அப்பா முந்நூறு ஆண்டுக்காலம் வாழ்ந்ததாகவும் பெரிய நூகுலெப்பை நூறாண்டுக் காலம் வாழ்ந்திருந்ததாகவும் நம்பப்படுகிறது.

பெரியநூகுலெப்பை யோகத்தைப் பல்வேறு படலங்களில் மிகப் பரவலாகக் காட்டி இருந்த போதிலும் மூலாதாரப் படலம் என்று தனி ஒரு படலத்தையும் அமைத்துக் கொண்டுள்ளார். இஸ்லாமிய மூலக் கொள்கையான லாயிலாஹா இல்லல்லாஹ் என்பதையே மூலாதார அனலைச் சிரசில் சேர்க்க வல்லதாகக் கொள்கிறார். இதனை,

லாயிலாஹா வென்றான நாலாறாம் எழுத்து மூலம்

ஓய்வில்லா இல்லல் லாகூ உயர்த்திடு சுவாதிட்டானம்

(செய்யுள் – 14 : 7)
எனக் காட்டுகின்றார்.

லாயிலாஹா இல்லல் லாஹூ; முஹம்மதுற் றசூலுல்லா

என்னும் அறபி மொழித் திருவசனத்தில் இருபத்து நான்கு எழுத்துகள் இருக்கின்றன என்பதை நோக்கி நாலாறாம் எழுத்து மூலம் – எனக் குறிப்பிடுகின்றார்.

- ஆதாரங்களில் படரல்

பெரியநூகு லெப்பை ஆலிம் காயசித்தித் தியானத்தை தௌஹீது படலத்துள், ஒரு செய்யுளில் விவரிக்கிறார்.

இதைக் கூறும் செய்யுளில், முப்பாழ் என்பது அஹத், உஹத், வாஹிதியத் என்னும் பரம் பொருளின் மும்மையில் ஒருமை நிலைகளாம்.

அஹத் என்பதற்கு ஒருமை நிலை என்றும், உஹத் என்பதற்கு சத்தையும் பண்புகளையும் வகுக்காமல் தொகுப்பாக இருந்த நிலை என்றும், வாஹிதியத் என்பதற்கு – சத்தையும் பண்புகளையும், அனைத்துப் படைப்புகளையும் வகுத்து விவரமாக அறிந்திருக்கும் நிலை என்றும் பொருளாகும்.

இவ்வகையில் வேதபுராணம் மெய்ஞ்ஞான ஒருமைப்பாட்டைக் கொண்டிருக்கக் காணலாம்.

- உவமை அணிகள்

இலக்கியத்திற்கு அழகு தருவது அணிகளாகும். அவ்வகை அணிவகைகளில் உவமை அணி என்பதும் ஒன்று. அறியாதவற்றை, அவற்றுக்கு ஒப்பானவற்றைக் கூறித் தெளிவாக அறியச் செய்வது உவமை அணியாகும்.

பெரிய நூகு லெப்பை ஆலிம் அருளிய வேதபுராணத்துள் உவமை அணிகள் மிகப் பரவலாகப் பயின்று வந்துள்ளன. அவற்றுள் இன்றியமையாத சிலவற்றை மட்டும் காண்போம்.

- போலி மெய்ஞ்ஞானிகள்

மெய்ஞ்ஞான நெறியின் ஆழத்தை அறிந்த மெய்ஞ்ஞானிகட்குள் சில போலி மெய்ஞ்ஞானியர்களும் அன்றைய நிலையில் இருந்தனர். அவர்கள் மெய்ஞ்ஞானப் போதையில் மூழ்கிக் கிடப்பதாகக் கூறி, கண்களை மூடிக்கொண்டு பத்மாசன இருப்பில் இருந்து கொள்வார்கள். கஞ்சா, அபின், சாராயம், கள் என யாருக்கும் தெரியாமல் உண்டு விட்டு, இறைத்தியானத்தில் மூழ்கி இருப்பவர்போல் அமர்ந்திருப்பார்கள். இவர்களுடைய இந்தச் செயல் நீர்க்கோழி மூச்சடக்கி நீருக்குள் நெடுநேரம் மூழ்கி இருப்பதைப் போலாம். இதனை,

கஞ்சா சாராயம் அபினும் கள்ளும்

கள்ள மாய்த்தின் றுக்க விழ்ந்திருக்கும்

அஞ்சா முஷாஹிதா தனிலிருந்து

அமுதம் வாங்கினா னுண்டேன் என்பார்

நெஞ்சால் நீர்க்கோழி ஜலத்திற் குள்ளே

நெடு நேர மதாக மூச்சடக்கித்

துஞ்சாப் பெருமூச்சை விட்டது போல்

துய்ய நபிறசூல் ஓதினார்

**(செய்யுள் – 10 : 32)**

எனக் காட்டுகின்றார்.

முஷாஹிதா என்பதற்கு நிஷ்டை என்று பொருள்.

- மூலக்கொள்கை

பெரியநூகு லெப்பை ஆலிம் இஸ்லாமிய மூலக்கொள்கைகளான தொழுகை கலிமா ஆகியவற்றை உறுமீன் என்கிறார். குளக்கரையில் கொக்கு ஒன்று அமர்ந்து கொண்டு சிறிய மீன்களை எல்லாம் விட்டு விட்டுப் பெரிய மீன் வந்ததும் எட்டிக் கவ்விப்பிடித்துக் கொள்வதைப் போல மெய்ஞ்ஞானியர்கள், சிறுசிறு செபதபங்களை எல்லாம் விட்டு விட்டுத் தொழுகையும் கலிமாவும் பிடித்துக் கொள்ள வேண்டும் என்கிறார். இவ்வாறு பற்றிப் பிடித்துக் கொள்வது

மடைத்தலக் கொக்குக் காத்திருந்தே

வரும்அம் மச்சத்தைப் புசிப்பது போலாம்

(செய்யுள் **– 15 : 10)**

என வேத உதிப்புப் படலத்துள் காட்டுகின்றார்.

- இறையியல்பு

உலக மக்களின் வாழ்க்கை தோணியைப் போன்றது. தோணியைச் செலுத்தத் துடுப்பு இன்றியமையாததாகும். துடுப்பில்லாமல் செல்லும் தோணி தடுமாற்றத்திற்கு உள்ளாகும். நீருக்குள் அமிழ்ந்து போகும். இறைவன் தோணியை நடத்தும் துடுப்பாக இருக்கிறான். அந்த இறைவனை நான் அறிவது எந்த நாளோ என்னும் துடிப்பில்,

கடத்துகின்ற தோணிதனைக் கழைக்குற்றி விட்டாற்போல்

நடத்துகின்ற சித்திரத்தை நானறிவ தெந்நாளோ

என (20:45) விளக்குகின்றார்.

- கூட்டில் அடைபட்ட குளவி

கூட்டுப்புழுவென்னும் நிலையில் குளவி கூட்டிற்குள் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து முழு உருப்பெற்று, கூட்டை உடைத்துக் கொண்டு வெளியே வரும். இவ்வகையில் மெய்ஞ்ஞான நெறியில் கூட்டுப்புழுவென இருக்கும் தான் முதிர்ச்சி பெறுவது எந்த நாளோ என்னும் அங்கலாய்ப்பில்

கூட்டில் அடைபட்ட குளவியுருப் படுவதுபோல்

பாட்டில் அடைபட்ட பயன்அறிவ தெந்நாளோ

என (எண் 45) விளக்குகின்றார்.

- மனத்தில் அமைதி

மெய்ஞ்ஞானியர்கள் தங்கள் மனத்தில் அமைதியை இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறு இணைத்துக் கொண்டால் தான் மெய்ஞ்ஞானச் சித்தியில் வெற்றி பெறமுடியும் என்றும் கூறுவர். இதனை ஊசியில் நூல் கோப்பது போல மனத்தில் அமைதியைச் சேர்த்து இறைத்தியானத்தைத் தொடர வேண்டும் என்று கூறுகிறார்.

## 5.6 தொகுப்புரை

இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறி சூஃபி என்னும் பெயரைக் கொண்டது. இதற்குப் பரிசுத்தம் என்று பொருள் கொள்ளலாம். சூஃபி மெய்ஞ்ஞானியர்கள் பரிசுத்த வாழ்வை மேற்கொண்டனர். இறைத்தியானம், மறைத்தியானம், விருந்தோம்பி வேளாண் செய்யும் வகையில் இருந்தோம்பி இல் வாழ்வும் மேற்கொண்டனர். துறவறத்தையும் வெறுத்தனர்; கண்டித்தனர். இவ்வகையில் அமைந்த சூஃபித்துவம் அறபு நாட்டில் பிறந்து பாரசீக நாட்டில் வளர்ந்தது. வளர்ச்சிக்கும் மெய்ஞ்ஞானம் பரப்புவதற்கும் என்று ஜாவியா, தக்கியா, கான்கா எனப் பல்வேறு பெயர்களில தியானக் கூடங்கள் தோன்றின. அவைகள் சூஃபி மெய்ஞ்ஞான நெறியை முறையாகப் பயிற்சி அளித்தன. முறையான பயிற்சி இல்லாத பலர் அக்காலத்தில் தோன்றி மெய்ஞ்ஞானம் பேசினர். அவர்களிடம் இறைத்தியானமோ, மறைத்தியானமோ இல்லை. பெண்மையைப் பழித்தனர்; இழித்துப் பேசினர். அக்காலத்திலிருந்த சூஃபி மெய்ஞ்ஞானியர்கள் இவர்களை சூஃபியாகக் கொள்ளவில்லை. தர்வேஷ் என்றழைத்தனர்.

சூஃபி மெய்ஞ்ஞான நெறி கி.பி 12ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் வித்திடப்பட்டது. ராஜஸ்தான் மாநிலத்தில் அஜ்மீர் நகரில் தலம் கொண்டு துயிலும் காஜா முஜனுதீன் சிஸ்தி என்னும் ஆன்ற பெயர் கொண்ட ஞானியரே வட இந்தியாவில் சிஸ்தியா என்னும் சூஃபி நெறியை வித்திட்ட நல்லார் ஆவார். சாதி ஒருமை, சமய ஒருமை, கலாச்சார சங்கமங்களை சிஸ்தியா நெறி ஊக்குவித்தது. அதே சமயம் சிஸ்தியாக்களால் இஸ்லாமியம் போற்றப்பட்டது. சூஃபி மெய்ஞ்ஞான நெறி சூஃபி மெய்ஞ்ஞான நெறியாகவே போற்றப்பட்டது. வேற்றுமையில் ஒற்றுமையை வலியுறுத்தியது.

கி.பி 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சூஃபி மெய்ஞ்ஞான நெறி தமிழகத்தில் தூவப்பட்டது. இக்காலத்தில் இந்நாட்டில் நிகழ்ந்த அரசியல் மாற்றங்களால் சைவ சித்தாந்தம் மேலோங்கி இருந்தது. சிவவாக்கியர் முதலான பதினெண் சித்தர்கள் சாதி ஒருமை, சமய ஒருமையை மக்களிடையே போதித்து வந்தனர். இந்நிலையில் இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறியை இஸ்லாமிய ஆன்ம ஞானிகள் பலரும் வரவேற்றனர். ஒப்பு நோக்கினர். நோக்கில் வேறுபட்டிருந்தாலும் பல்வேறு வகைப் போக்கில் ஒன்றுபட்டிருப்பதை உணர்ந்தனர். எழுச்சி பெற்றனர். தமிழ் மக்களிடையே வேற்றுமையைக் களைந்து ஒற்றுமைப் படுத்தும் யோகம் முதலான நெறிகளைத் தன்வயப்படுத்தினர். வேற்றுமையில் ஒற்றுமை என்ற நிலையில் இஸ்லாமிய மெய்ஞ்ஞானம் தன் தனித் தன்மை இழந்து விடாத வகையில் மெய்ஞ்ஞான இலக்கியங்கள் இயற்றினர். இவைகள் யாவும் இஸ்லாம் தமிழ் ஆகிய இரு இன மக்களின் சங்கமச் சிகரமே என்றும் வேற்றுமையில் ஒற்றுமையின் சின்னமே என்றும் வகுக்கலாம்.

## தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 6

## P20246 இக்கால இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள்

இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

இந்தப் பாடம் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றைக் கால வகையில் பாகுபாடு செய்து இக்கால இலக்கியங்களைத் தெளிவுபடுத்துகிறது. இக்கால இலக்கியங்களின் பிரிவுகள், அவற்றின் தோற்றம், வளர்ச்சி, உரையாசிரியர்கள், உரைநடை ஆசிரியர்கள் பற்றியும் கூறுகிறது. உரைநடையாசிரியர்கள் ஆற்றியுள்ள தமிழ்த்தொண்டைப் புலப்படுத்துகின்றது. இக்கால இஸ்லாமியக் கவிதை – உரைநடை இலக்கியங்கள் பற்றிப் பார்க்கும் போது, இஸ்லாமியப் படைப்பாளிகள் இஸ்லாமிய இலக்கியம் அல்லாத பொதுவான படைப்புகளைப் படைத்துள்ளமை கவனிக்கத்தக்கது. அது இப்பாடத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. முதல் இஸ்லாமிய உரைநடை இலக்கியம் வெள்ளாட்டி மசலா என்பதையும் அவ்விலக்கியம் தோன்றிய சூழலையும் தெளிவுபடுத்துகின்றது.

இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றைக் குறைவற நுகரும் பேறு பெறலாம்.
- தமிழிலக்கிய வரலாற்றில் புறக்கணிக்கப்பட்ட அருட்பா மருட்பாப் பூசல், விடுதலை வேள்வியில் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களின் பங்களிப்பு போன்றவற்றை உணர்ந்து கொள்ளலாம்.
- இஸ்லாமியப் படைப்பாளிகள் சமயத்திற்கும் அப்பாற்பட்ட பொதுக் கருத்துகளையும் படைப்பாக்கியுள்ளனர் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். படைப்பாளிகள் பதிப்பாளர்களாகவும் இருந்து பல நூல்களை வெளியிட்டனர் என்பதை அறியலாம்.
- இஸ்லாமிய இதழ்கள் பல தோன்றி வளர்ந்து வருவதை உணரலாம்.

## பாட அமைப்பு

6.0 பாட முன்னுரை
6.1 இசுலாமிய இலக்கியங்கள்
6.1.1 தொடக்கக் கால இலக்கியங்கள்
6.1.2 இடைக்கால இலக்கியங்கள்
6.1.3 இக்கால இலக்கியங்கள்
6.2 இக்காலச் செய்யுள் இலக்கியங்கள் / படைப்பாளர்கள்
6.2.1 மரபுக் கவிதை
6.2.2 புதுக் கவிதை
தன் மதிப்பீடு : வினாக்கள் – I
6.3 உரைநடை இலக்கியங்கள்
6.3.1 வெள்ளாட்டி மசலா
6.3.2 பிற கதை இலக்கியங்கள்
6.4 புனைகதை (fiction) இலக்கியங்கள்
6.4.1 சிறுகதை
6.4.2 புதினம்
6.5 பிற உரைநடை வகைகள்
6.5.1 உரை நூல்கள்
6.5.2 மொழி பெயர்ப்பு நூல்கள்
6.5.3 பிற உரைநடை நூல்கள்
6.6 தொகுப்புரை
தன் மதிப்பீடு : வினாக்கள் – II

## 6.0 பாட முன்னுரை

இலக்கிய வரலாற்றை, பரப்பும் காலமும் நோக்கிப் பொருள் நோக்கிலோ கட்டமைப்பு நோக்கிலோ பாகுபாடு செய்து கொண்டு நோக்குவது மரபு. இத்தகைய மரபிற்கேற்ப இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இக்கால இலக்கியங்கள் என்னும் பிரிவில் அடங்கும் இலக்கியம் பற்றிப் பயில இருக்கின்றோம்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இக்காலத்திற்கு முற்பட்ட காலங்களைப் பற்றியும் அக்கால இலக்கியங்களைப் பற்றியும் சுருக்கமாகக் காண்போம்.

## 6.1 இசுலாமிய இலக்கியங்கள்

இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பரப்பு ஒன்பது நூற்றாண்டுக் கால வரலாற்றினைக் கொண்டது. இந்நீண்ட நெடும்பரப்பில் காணக்கிடைக்கும் இலக்கியங்களைக் கால வகையில், மூவகையாகப் பாகுபாடு செய்கின்றனர். அவை:

அ) தொடக்கக் கால இலக்கியங்கள்
ஆ) இடைக்கால இலக்கியங்கள்
இ) இக்கால இலக்கியங்கள்

### 6.1.1 தொடக்கக் கால இலக்கியங்கள்

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் காணக் கிடைக்கும் முதல் நூல் பல்சந்தமாலையாகும். இதன் காலம் கி.பி 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். பல்சந்தமாலைக் காலம் முதல் சீறாப்புராணம் (கி.பி 1703) தாண்டி முப்பது அல்லது நாற்பது ஆண்டுகள் வரையுள்ள இலக்கியங்களைத் தொடக்க கால இலக்கியங்கள் என்பர். குறிப்பாக ஜவ்வாதுப் புலவரின் பிறப்பு (1745) வரை எனலாம். இக்காலத்தில் காப்பியங்களும், சிற்றிலக்கியங்களும், பள்ளு முதலான மக்கட் பிரபந்தங்களும் பல்கிப் பெருகியுள்ளன. இவ்வகை இலக்கியங்கள் யாவும் நபிகள் பெருமானாரையும் நபிக் குடும்பத்தவர்களையும் பாடுபொருளாகக் கொண்டுள்ளன. இஸ்லாமியப் பார்வையில் நபிபிரானும் நபிகளார் குடும்பமும் கண்ணியத்திற்கு உரியவர்கள் ஆவர்.

### 6.1.2 இடைக்கால இலக்கியங்கள்

கி.பி 17,18ஆம் நூற்றாண்டுகளில் வெளிவந்த இலக்கியங்களை இடைக்கால இலக்கியங்கள் என்பர். இஸ்லாம் சமயச் சான்றோர்களையும் பாடும் வகையில் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு ஒரு திருப்புமுனையைக் கண்டது. இத்திருப்புமுனையைக் காட்டியவர் முகியித்தீன் பிள்ளைத் தமிழ் படைத்த ஜவ்வாதுப் புலவர் ஆவார். இந்நூல் ஆர்க்காடு வாலாஜா முகம்மது அலிகான் (கி.பி 1723 – 1795) அவையில் அரங்கேறியது.

கி.பி 1807 – 1827 வரையுள்ள 20 ஆண்டுக் கால இடைவெளிக்குள் 9 காப்பியங்களை இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தந்துள்ளனர்.

### 6.1.3 இக்கால இலக்கியங்கள்

கி.பி 19ஆம் நூற்றாண்டு முதல் இன்றைய நாள் வரை வந்துள்ள இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் இக்கால இலக்கியங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

இக்காலம் என்பது நீண்ட நெடுங்காலக்கட்டத்தை உள்ளடக்கியது என்பதால், நம்நாடு தன்னாட்சி (1950) பெற்ற காலம் வரை வந்துள்ள இலக்கியங்களை ஐரோப்பியர் ஆட்சிக்கால இலக்கியங்கள் அல்லது விடுதலை வேள்விக் கால இலக்கியங்கள் என்றும் இதற்குப்பின் உள்ள காலங்களில் காணும் இலக்கியங்களை மறுமலர்ச்சிக் கால இலக்கியங்கள் என்றும் பாகுபாடு செய்து கொண்டு மிக நுணுக்கமாகவும் விரிவாகவும் காண்பர். இக்கால இலக்கியங்களைச் செய்யுள், உரைநடை, நாடகம் அறபுத்தமிழ் இலக்கியங்கள் எனப் பாகுபாடு செய்வர். பாட அளவு கருதி இங்குச் செய்யுள், உரைநடை இலக்கியங்கள் பற்றி மட்டும் காண்போம்.

இங்கு ஒரு கருத்தைத் தெளிவாக்க வேண்டும். முந்தைய காலப்பிரிவுகளில் இஸ்லாமியத் தமிழ்ப்புலவர்கள் தமிழுக்கும் இஸ்லாத்திற்கும் தொண்டு செய்யும் வகையில் நூல்களைப் படைத்தனர். இக்கால இஸ்லாமிய எழுத்தாளர்கள் இஸ்லாமிய இலக்கியம் மட்டுமன்றிப் பொதுவாகவும் எழுதி வருகின்றனர். ஆக, இஸ்லாமிய இலக்கியம் என்பதோடு இஸ்லாமியர் தமிழ் இலக்கியம் என்பதையும் சேர்த்தே இங்குப் பார்க்க விருக்கிறோம்.

## 6.2 இக்காலச் செய்யுள் இலக்கியங்கள்

இக்காலத் தமிழ்ச் செய்யுள் இலக்கியத்தை வளப்படுத்தியதில் இஸ்லாமியக் கவிஞர்களுக்கும் பெரும்பங்கு உண்டு. மரபுக் கவிதைகளையும் புதுக் கவிதைகளையும் தமிழ் மரபையும், பண்பையும் பின்புலமாகக் கொண்டு பாடியுள்ளனர்.

### 6.2.1 மரபுக் கவிதை

பழைய மரபைப் பின்பற்றி மிகச்சிறந்த மரபுக் கவிதைகளைப் பாடிய பெருமை, சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர், சாரண பாஸ்கரன், கவி. கா. மு. ஷெரீப் போன்றோரைச் சாரும்.

- செய்கு தம்பிப் பாவலர்

இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களுள் குறிப்பிடத்தக்க சாதனையாளர், 1876இல் நாஞ்சில் நாட்டில் பிறந்த சதாவதானி செய்கு தம்பிப் பாவலர். வள்ளலாரின் அருட்பாவை மருட்பா என்று கூறியவர்களுக்கு எதிராக வாதாடியவர். மறைமலை அடிகள், திரு.வி.க ஆகியோரால் போற்றப்பட்டவர். இவர் பாடிய செய்யுள் இலக்கியங்கள்: சம்சுத்தாசீன் கோவை, திருநாகூர் திரிபந்தாதி, திருக்கோட்டாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி, நபிகள் நாயக மான்மிய மஞ்சரி, நீதிவெண்பா, அழகப்பக்கோவை ஆகியன.

சிலேடையாகப் பாடல் இயற்றுவது என்பது மிகவும் கடினமான ஒன்று. நல்ல புலமையும், சொற்களைக் கையாளும் திறமையும், கூர் அறிவும் உடையோரே அத்தகைய பாடல்களை இயற்ற இயலும். ஒரு சிலரே சிலேடைக் கவிஞர்களாகப் புகழ் பெற்றுள்ளனர். அவர்களுள் செய்கு தம்பிப் பாவலரும் ஒருவர். அவரது புலமையையும் நினைவு ஆற்றலையும் அடிப்படையாகக் கொண்டு, ‘சதாவதானி’ என்னும் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது.

- சதாவதானம்

‘சதம்’ என்றால் நூறு என்று பொருள். ஒருவரது புலமையையும், நினைவாற்றலையும், நுண்அறிவையும் சோதிப்பதற்காக நடத்தப்படும் சோதனைகளில் ஒன்று சதாவதானம். சோதனைக்கு உரியவரிடம் ஒரே நேரத்தில் பலரும் பங்கு கொண்டு பல கேள்விகளைக் கேட்பார்கள். புலவரைச் சுற்றிலும் மணியடித்தல், மலர் எறிதல் போன்ற நிகழ்ச்சிகள் நடந்துக் கொண்டிருக்கும். இவை நூறு விதமானவையாக இருக்கும். இவை அனைத்தையும், நினைவில் வைத்துக் கொண்டு இறுதியில் ஒவ்வொன்றிற்கும் பதில் தரவேண்டும். சில பதில்கள் கவிதையில் சொல்லப்பட வேண்டியிருக்கும். இதற்கு மிகுந்த நினைவாற்றலும் திறமையும் தேவைப்படும்

அத்தகைய சதாவதான நிகழ்ச்சியில் செய்கு தம்பிப் பாவலரிடம் கேட்கப்பட்ட கேள்விகளில் ஒன்று ‘எல்லாச் சமயக் கடவுளையும் சுட்டும் வகையில் ஒரே வரியில் ஒரு கவிதை கூறுங்கள்’ என்பதாகும். உடனே பாவலர், சிலேடையாக,

சிரமாறுடையான்- என்று பாடினார். இதனைச்

சிரம் ஆறுடையான்- என்றும்
சிரம் மாறுடையான்- என்றும் பிரிக்கலாம்.

(சிரம் = தலை, தலைமை; ஆறு = நதி (River); ஆறு = எண்: 6 (Number); ஆறு = நெறி; மாறு = மாறியிருத்தல்)

இத் தொடருக்குரிய பொருள்கள் வருமாறு:







(1) தலையிலே கங்கை ஆற்றை உடைய சிவபெருமான் (2) தலையிலே ஆறுமுகங்களை உடைய முருகன் (3) தலையிலே மாறுபட்ட முகத்தை உடைய கணபதி

(சிரம் + மாறு = சிரமாறு உடையான். அதாவது மாறுபாடான முகம் உடையான்) (4) தலையாய நெறிகளை உடைய அல்லா அல்லது இயேசு அல்லது புத்தர்

மேற்குறிப்பிட்ட பொருளை விளக்கிக் கூறி அனைவரது பாராட்டையும் பெற்றவர் சதாவதானி செய்கு தம்பிப் பாவலர்.

இதைப்போலவே மேலும் பல சிலேடைப் பாடல்களை எளிமையாகப் பாடிப் புகழ் பெற்றவர் கவிஞர் செய்கு தம்பிப் பாவலர்.

- சாரண பாஸ்கரன்

1950ஆம் ஆண்டிற்குப்பின் அமைந்த மறுமலர்ச்சிக் காலத்தில் முதலில் வந்த இஸ்லாமியத் தமிழ்க்காப்பியம் யூசுப்- ஜுலைகா ஆகும். இதனை இயற்றியவர் சாரண பாஸ்கரன். இவரது இயற்பெயர் டி.எம்.எம். அஹமத்.

1957இல் வெளிவந்த இக்காப்பியம், குரானிலும், விவிலியத்திலும் சொல்லப்படும் இறைத்தூதர்களுள் ஒருவரான யூசுப் நபியின் வரலாற்றைக் கூறுவது. சகோதரர்களால் வஞ்சிக்கப்பட்ட யூசுப் நபி, படிப்படியாக உயர்ந்து, எகிப்து அரசில் பெரிய அதிகாரியாக ஆகித் தன் சகோதரர்களை மன்னித்துத் தன்னோடு வைத்துக் கொண்டதும், ஜுலைகா என்னும் எகிப்திய நங்கையை மணந்து கொண்டதும் ஆகிய வரலாறு 66 இயல்களில் விரிவாகப் பாடப்பட்டுள்ளது.

- கவி. கா. மு. ஷெரீப்

இஸ்லாமியக் கவிஞர்களுள் மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றவர் கவிஞர் கவி. கா. மு. ஷெரீப். திரை இசைப் பாடல்கள் வாயிலாக அறிமுகமான இக்கவிஞர், நபியே எங்கள் நாயகமே எனச் சதக முறைக் காவியம் ஒன்றை எழுதினார். மேலும், அந்தாதி வடிவத்தில் ஆன்மகீதம் என்ற நூலையும், மச்சகந்தி (பீஷ்மசபதம்) என்ற குறுங்காவியத்தையும் இயற்றினார்.

தாம் பாடிய கவிதைகளைத் தொகுத்து, கவி. கா. மு. ஷெரீப் கவிதைகள் என்னும் நூலையும் வெளியிட்டுள்ளார்.

- தேசியக் கவிஞர்கள்

ஐரோப்பியரின் ஆட்சியை அகற்றும் பணியில் பாடுபட்ட பாலகங்காதர திலகர், மகாத்மா காந்தியடிகள் ஆகியோரின் கோட்பாடுகள் யாவும் இக்காலத்தின் முதல் கட்டத்தில் இஸ்லாமியத்தமிழ்ப் புலவர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

காதர் முகைதீன் மஸ்தான் புலவரின் கள்குடி அகற்றும் அலங்காரம், என்.ஏ. அப்துல் லத்தீப்பின் இந்திய தேசிய அபிமானச் சிந்து, பீர் முகம்மது ராவுத்தரின் கதர் ஆனந்தக் களிப்பு, கம்பம் பீர் முகம்மதுப் பாவலரின் காந்தி மாலிகை, அசன் மோதின்

தேசிய கீதம், கே.எம் அல்லாப்பிச்சை ராவுத்தர் தேசிய திலகர் மாலிகை, காசிம் புலவர் சர்வ சமய கீர்த்தனை போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கன.

சமயம், சமயக் கோட்பாடுகள் எனக் குறிக்கோளோடு வாழ்ந்த இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள், விடுதலை வேள்விக்கடலில் சங்கமமானார்கள். இவர்கள் பொன்னேபோல் போற்றத் தக்கவர்கள் அல்லவா?

- சமயம் பற்றிப் பாடிய கவிஞர்கள்

போடிப்புலவர் கான்முகம்மது, இறைவனின் 99 நாமங்களை விளக்கி இனிய சந்தத்தில் கொள்கைமணிக்கோவை என்ற (மூன்று தொகுதிகளையுடைய) நூலைப் படைத்தார். புத்தர் வரலாற்றை 'ஆசியச்சுடர்' என்னும் காவியமாக்கித்தந்தார்.

மறுமலர்ச்சிக் காலத்தில், தொடக்க கால இஸ்லாமிய இலக்கியங்கள் சில புதிய வார்ப்புப் பெற்றுள்ளன. பனைக்குளம் மு. அப்துல் மஜிதுப் புலவர் நாயக வெண்பா படைத்துள்ளார். சீறாப்புராணமும் சின்னசீறாவும் இதன் உள்ளடக்கம் எனலாம். இதனைத் தொடர்ந்து அண்மையில் எம்.ஆர்.எம். அப்துல் ரஹீம், நபிகள் பெருமானாரின் வரலாற்றைக் காவியமாகப் படைத்துள்ளார். சித்திரக்கவி அலமுநூர் இவ்வரலாற்றை ஞான ஒளிச்சுடர் எனத் தந்துள்ளார்.

நபிகள் பெருமானார் மற்றுமுள்ள இறைநேசர்களைப் பிள்ளைத்தமிழாகப் பாடும் பழைய போக்கு வள்ளல்களைப் பாடும் நிலையில் திரும்பி உள்ளது. நாஞ்சில் ஆரிது பாளையம் கே.சி.எம். பிள்ளைத்தமிழ், புலவர் எஸ்.எம். ஏ. காதர் வள்ளல் சீதக்காதி பிள்ளைத்தமிழ் ஆகியவற்றைப் படைத்துள்ளனர்.

காரை இறையடியான் (1935-1994) நபிகள் பெருமானார் நவின்ற நல்லுரைகள் இரண்டாயிரத்தைத் தொகுத்துக் குறள் வெண்பா யாப்பில் நபிமொழிக்குறள் என்னும் நூலைப் படைத்துள்ளார். இந்நூல் பத்தொன்பது இயல்களையும் இருநூறு அதிகாரங்களையும் கொண்டுள்ளது. சான்றுக்கு ஒருகுறள்:

அறபு நாட்டிலிருந்து நோக்கச் சீனநாடு நெடுந்தொலைவில் உள்ளது. கல்வியின் இன்றியமையாமையை நோக்கிய நபிகள் பெருமானார், 'எத்தகைய தொலைவில் கல்வி கிடைத்தாலும் அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும்' என்ற கருத்தில்,

சீனா சென்றாகிலும் கல்வி கற்றுக் கொள்க

என்றார். இதனைக் காரை. இறையடியான்,

சீனத்தில் கல்வி செழிப்பெனினும் சென்றதனைத்

தானோடிக் கற்றல் தலை

(நபிமொழிக் குறள். எண் – 1551)
எனப் பாடியுள்ளார்.

தனித்தமிழ் இயக்கச் சிந்தனையாளராகிய காரை. இறையடியான், கன்னித் தமிழ் வளர்த்த காரைக்கால் அம்மையார், திருவருட்பாவை, திருநபி இரட்டை மணிமாலை, அறிவியல் ஆத்திசூடி, கல்லறைக் காதல், செந்தமிழ்த் தொண்டர் ஆற்றுப்படை முதலான நூல்களையும் இயற்றியுள்ளார். இவருடைய தமிழமுதம் என்னும் நூல் தமிழக அரசின் பரிசு பெற்றது. இளந்தென்றல் என்னும் நூல் குழந்தை இலக்கியப் போட்டியில் பரிசு பெற்றது. கவிமாமணி என இவர் போற்றப்பட்டார்.

### 6.2.2 புதுக்கவிதை

புதுயுகத்தின் தேவைகளான மனிதாபிமானம், சர்வதேசியம் போன்றன புதுக்கவிதையின் கருப்பொருள் ஆகும். குறிப்பாக, சமூகப்பார்வை கொண்ட மனிதாபிமானப் போக்கினையும், சாதிமத பேதங்களைக் கடந்த பொதுமைப் போக்கினையும் புதுக்கவிதைகள் கொண்டுள்ளன.

புதுக்கவிதை உலகில் சாதனை படைத்தவர்களாக கவிக்கோ. அப்துல்ரகுமான், மு. மேத்தா, இன்குலாப், அபி முதலான பலரைக் காண்கிறோம். இவர்களுடைய கவிதைகளில் இஸ்லாமியப் புராணவியல், மரபியல் படிமங்களைக் காட்டிலும் இந்தியப் புராணவியல், மரபியல் படிமங்களே மேலோங்கி நிற்கின்றன.

- கவிக்கோ. அப்துல் ரகுமான்

மதுரையில் 1937ஆம் ஆண்டு பிறந்தவர். வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர். பால்வீதி, நேயர்விருப்பம் சுட்டுவிரல், ஆலாபனை முதலிய கவிதை நூல்களையும், இன்றிரவு பகலில், அவளுக்கு நிலா என்று பெயர், கரைகளே நதியாவதில்லை, சலவை மொட்டு முதலான கவிதைத் திறனாய்வு நூல்களையும் படைத்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் பாரதிதாசன் விருதும், தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் தமிழன்னை விருதும் பெற்றுள்ளார். இவருடைய ஆலாபனை என்னும் நூல் சாகித்ய அகாதெமி பரிசுபெற்றுள்ளது.

ஆலாபனை கவிதைத் தொகுப்பிலுள்ள ஒரு கவிதையை நோக்குவோம்.

தற்செயலாக ஒரு நாள் தொலைபேசியில் தவறான எண்ணில் இறைவன் சிக்கிக் கொள்கிறான். கவிக்கோ கேட்கிறார்.

இங்கே என்ன நடக்கிறது என்று பார்!

இதோ உனக்கு வீடுகட்டுவதற்காக

உன் வீட்டை இடிக்கும் மூடர்கள்!

இடிக்கப்படுவதில் நீ இடிக்கப்படுகிறாயா?

கட்டப்படுவதில் நீ கட்டப்படுகிறாயா?

அயோத்தியில் பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்ட வரலாற்றைத் தொடர்கிறார்.

இந்த ராமர் யார்? ரஹீம் யார்!

பெயரால் அல்லவா இத்தனைப் பிரச்சனை

பெயர்களில் நீ இருக்கிறாயா?

எனக் கேட்கிறார்.

கடைசியாகக் கேட்கிறேன்

நீ இந்துவா? முஸ்லிமா?

அவ்வளவு தான்

ராங் நம்பர் என்ற பதிலோடு
இணைப்பு துண்டிக்கப்படுகிறது
கடவுளைக் கட்டடங்களுக்குள்ளும் மத வேலிகளுக்குள்ளும் அடைக்க முயலும் அறிவின்மையையே இப்பதில் உணர்த்துகிறது.

- மு. மேத்தா

புதுக்கவிதை உலகில் தனக்கெனத் தனி இடத்தைப் பிடித்துக் கொண்டவர் மேத்தா ஆவார். 1945ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்திலுள்ள பெரியகுளம் என்னும் ஊரில் பிறந்தவர். சென்னை மாநிலக்கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர். கண்ணீர்ப் பூக்கள், ஊர்வலம், மனச்சிறகு, அவர்கள் வருகிறார்கள், முத்துமுகம் முதலான முப்பது நூல்களை எழுதியுள்ளார். புதுக்கவிதையில் நபிகள் பெருமானாரின் வரலாற்றை – நாயகம் ஒரு காவியம் எனப்படைத்துள்ளார். தமிழக அரசின் பாரதிதாசன் விருது பெற்றுள்ளார்.

இவருடைய காற்றை மிரட்டிய சருகு என்னும் தலைப்பில் சிலவரிகள்:

சாதி -மனிதன் தன்முகத்தில்

தானே பூசிக் கொண்ட கரி !
அதனால் இது -பிறவினை அல்ல
தன்வினை !
இதனால் -செயப்படுபொருள்
பிரிவினை !

எனத் தமிழ் இலக்கண மரபினைக் கொண்டு சாதியின் கொடுமையைக் காட்டுகின்றார்.

கவிக்கோ அப்துல் ரகுமான், மேத்தா இவர்களைப் போலவே இன்குலாப், அபி போன்றோரும் புதுக்கவிதை உலகில் நிலை பெற்றோர் ஆவர்.

- இன்குலாப்

ஷாகுல் ஹமீது என்னும் இயற்பெயருடைய கவிஞர் இன்குலாப் தமிழ்ப் புதுக்கவிதையில் புரட்சிகரமான கருத்தோட்டங்களை நிரப்பியவர். இவருடைய இன்குலாப் கவிதைகள், வெள்ளை இருட்டு, ஆக்டோபஸ் போன்ற கவிதைத் தொகுப்புகள் ஒடுக்குமுறைக்கு இலக்காகும் பல்வேறு வகைப்பட்ட எளிய மக்களின் நிலைகளைக் கூறுவது மட்டுமன்றி, அவர்களைத் தலைநிமிர்ந்து போராடி, கை விலங்குகளை உடைக்கத் தூண்டுவனவாகவும் அமைகின்றன. மார்க்சீயக் கோட்பாடுகளும், தமிழ்த் தேசிய உணர்வும், மனிதாபிமானமும் இவர் கவிதைகளின் அடிநாதமாகும். விபசாரியைப் பற்றிக் கண்டனமாகவும் இகழ்ச்சியாகவும் எழுதப்பட்ட கவிதைகளின் இடையே, இன்குலாப் எழுதிய கீழ்க்குறிப்பிடும் இரண்டு வரிக் கவிதை இவருடைய ஆழ்ந்த மனிதாபிமானத்தை வெளிப்படுத்துகிறது. விபசாரியின் கல்லறை வாசகம் வருமாறு:

மரணமாவது இவளைக்
கபன்துணியால் கௌரவப்படுத்தியது
(கபன் துணி = அடக்கம் செய்வதற்காக உடலைப் போர்த்தும் துணி)

- அபி

தமிழ்க் கவிதையின் தனித்தன்மையான ஒரு போக்கை அபியிடம் காணலாம். உணர்வுகளின் நுட்பமான, அருவப் பிறப்பு நிலைகளைக் (abstract) கவிதையாக வடிப்பவர் இவர். கவிதைகளின் வாயிலாக அனுபவத்தைத் தாண்டிய நிலையையும், இருப்பின் முடிவின்மையையும் தேடுகிறவர் இவர். சமயம், தத்துவம் சாராத ஆன்மீகமே இவர் கவிதைகளின் அடிப்படை எனலாம். மௌனத்தின் நாவுகள், அந்தரநடை, என்ற ஒன்று ஆகியவை இவரது கவிதைத் தொகுதிகள் ஆகும். இவரது 'தெளிவு' என்ற கவிதை இந்தப் பிரபஞ்சப் பெருவெளி அனுபவங்கள் எல்லாவற்றையும் தாண்டித் தெளிவு காணமுயன்று, 'தெளிவு' என்பது இல்லாத பொருள் என்ற முடிவுக்கு வந்து சேர்கிறது. ஆனால் இந்தத் தேடலின் பரவசம் மகத்தானது. அதனை,

தனித்தலின் பரவசம்
அனுபவத்தின் கையிருப்பில்
அடங்காது
நழுவி
விரிவு கொண்டது
என்று குறிப்பிடுகிறார் அபி.

## தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 6.3 உரைநடை இலக்கியங்கள்

ஐரோப்பியரின் ஆதிக்கத்தின் கீழிருந்து வந்த தமிழகத்தில் கி.பி 18ஆம் நூற்றாண்டின் இறுதி வரை அரசியல் குழப்பங்கள் இருந்து அடங்கின. ஆங்கிலேயர்களின் வலுவான ஆட்சியும் அமைந்தது. 1850இல் சென்னைப் பள்ளிப் புத்தகக் கழகம் (தி மெட்ராஸ் ஸ்கூல் புக் சொசைட்டி) சிறந்த மொழி பெயர்ப்புப் புத்தகங்களுக்குத் தகுந்த பரிசு வழங்கி உரை நடைவளர்ச்சிக்கு வித்திட்டது. கிறித்தவ சங்கம் நாடெங்கும் அச்சுக்கூடத்தை நிறுவி எண்ணற்ற உரைநடை நூல்களை அச்சிட்டு வெளியிட்டது. கிறித்தவ மத சார்பான பலதரப்பட்ட உரைநடை நூல்களைக் குறைந்த விலைக்குக் கொடுத்தனர். சைவ சமயத் தொண்டர்களால் புராண இதிகாசங்கள் உரைநடையில் வெளிவந்தன. இந்நிலையில் இஸ்லாமிய உரைநடை நூல்களும் வெளிவரத் தொடங்கின.

### 6.3.1 வெள்ளாட்டி மசலா

முதல் இஸ்லாமிய உரைநடை இலக்கியம் வெள்ளாட்டி மசலா (1856) எனலாம். இஸ்லாம் சமய மார்க்கச் சட்டங்களை உண்மை மாந்தர்களும், கற்பனை மாந்தர்களும் கலந்த கற்பனைப் பின் புலத்தில் வினாவிடைப் பாங்கில் வெளிப்படுத்தும் இலக்கியமாகிய வெள்ளாட்டி மசலாவிற்கு நல்ல வரவேற்பு இருந்தது. 1856இல் வெளிவந்த முதற் பதிப்பிற்குப்பின், 1879, 1884, 1910, 1917, 1953ஆகிய ஆண்டுகளில் ஆறு பதிப்புகள் வெளி வந்துள்ளன.

வெள்ளாட்டி என்பதற்குப் ‘பணிப்பெண்’ அல்லது ‘அடிமைப்பெண்’ என்று பொருள். உணவும் உறையுளும் கொடுத்து இளைய தலைவியைப்போல் இருத்திக்கொள்ளும் பணிப்பெண் வெள்ளாட்டி ஆவாள். ‘மசலா’ என்பது அறபி மொழிச்சொல்லான ‘மஸ்லா’ என்பதன் தமிழ் வடிவமாகும். இதற்கு, கேள், விசாரி, தெளிவுபெறு என்று சொல்லகராதியில் பல பொருள்கள் உண்டு. இஸ்லாமிய சமய அறிஞரிடம் சென்று அம்மார்க்கத்தைப் பற்றிய ஐயப்பாடுகளைக் கேட்டுத் தெளிவு பெறுதலே மசலாவாகும் – என இஸ்லாமியக் கலைக் களஞ்சியத்தில் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது. தன்னை மன்னனுக்கு விலை பேச வந்த தவத்துது என்ற வெள்ளாட்டியிடம் அவளுடைய அறிவாற்றலைச் சோதிக்கும் வகையில் இஸ்லாமிய மார்க்க அறிஞர்களால் கேட்கப்பட்ட வினாக்களும் அவ்வினாக்களுக்கு வெள்ளாட்டி அளித்த மறுமொழிகளுமே வெள்ளாட்டி மசலாவின் உள்ளடக்கமாகும். வெள்ளாட்டி மசலா உரைநடை இலக்கியத்தின் ஆசிரியர் ஷெய்க் அப்துல் காதர் லெப்பை ஆலிம் ஹாஜி ஆவார். இஸ்லாமியத் திருமறையாகிய குர்ஆனிலிருந்தும் நபிகள் நாயகம் நவின்ற நல்லுரைகளான ஹதீஸ்களிலிருந்தும் இஸ்லாமிய வாழ்வியல் சட்டங்கள் 550 தேர்ந்தெடுத்து, முதலில் அச்சிட்டு வெளியிட்டதாகவும் பின்னர் முகையித்தீன் – இப்ன – அறபி முதலான மார்க்க அறிஞர் ஐவரின் கருத்துகளில் 119 – ஐ எடுத்துச் சேர்த்து,

இப்போது 619 மசலாக்களுடன் நூல் வெளி வருவதாகவும், 1856 ஆம் ஆண்டிற்குப் பின் வந்த பதிப்புகளின் முன்னுரையில் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

### **6.3.2** பிற கதை இலக்கியங்கள்

வெள்ளாட்டி மசலாவைத் தொடர்ந்து அறபுப் பாரசீக நாட்டுக் கதை இலக்கியங்கள் தமிழில் வந்தன. மகான் மாப்பிள்ளை வெலப்பை மதீனதுன் நூஹஸ் என்னும் பார்சி மொழிக் காவியத்தைத் தாமிரப்பட்டணம் (1859) என்ற பெயரில் தந்தார். ஹக்கீம் முகம்மது இஸ்மாயில் ஹாத்திம் தாய் (1877) என்னும் நூலை வெளியிட்டார். லைலா மஜ்னு, ஹூசிர்மூஸ் கதை போன்றனவும் தமிழில் வந்தன. அப்துல் வஹ்ஹாப், யூசுப் நபி கிஸ்ஸா (1882) என்னும் நூலைப் படைத்தார். 1888இல் ஆறுமுக முதலியார் அராபியக் கதைகளை மூன்று பாகங்களாக வெளியிட்டார். தொடர்ந்து அலிபாபாவும் நாற்பது திருடர்களும், அலாவுதீனும் அற்புத விளக்கும் போன்றனவும் பாரசீகத்திலிருந்து தமிழுக்குத் தாவின.

- அப்பாஸ் கதை

அந்துமான் நகரத்து இளவரசன் அப்பாஸ் என்பான் பலவிதத் துன்பத்திற்குள்ளாகி, சீனப்பதிக்கு வந்து சேர்கின்றான். சீனப்பதி ஆளும் மன்னனின் மகள் மெஹர் பானு, இஸ்லாமிய மார்க்க ஞானத்தில் முதிர்ச்சி பெற்று ஞானவல்லி என்னும் சிறப்புப் பெயருடன் விளங்கினாள். இவள் ”இஸ்லாம் சமயம் தொடர்பாகத் தான் கேட்கும் நூறு வினாக்களுக்கும் விடை அளிப்பவர்களுக்கே மாலையிடுவேன். விடை தராதவர்களை வெட்டித் துண்டாக்குவேன்” என்ற உறுதி மொழியில் வாழ்கிறாள். ஞான வல்லியை மணம் கொள்ள முற்பட்ட ஐந்நூறு இளவரசர்கள் தோல்வியுற்றுத் தலை இழந்தனர். இந்நிலையில் இளவரசன் அப்பாஸ் அவளைக் கண்டு அவள் கேட்ட வினாக்களுக்கு எல்லாம் சரியான விடையைச் சொல்லி மாலையிடுகிறான்.

# 6.4 புனைகதை (Fiction) இலக்கியங்கள்

மேற்கண்ட வெள்ளாட்டி மசலா, அப்பாஸ் கதை போன்றவை அறபு, பாரசீக மொழிகளிலிருந்து வந்தவை. தமிழில் புனைகதை இலக்கியம் தோன்றி வளர்ந்த வளர்ச்சியில் இஸ்லாமிய எழுத்தாளர் பலரும் பங்கு செலுத்தி வருகின்றனர்.

## 6.4.1 சிறுகதை

தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் வளர்ச்சிக்கு இசுலாமியச் சிறுகதை எழுத்தாளர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது.

மஹதி, ஜேஎம், ஜே.எம். சாலி, கருணாமணாளன், ஜியாவுடீன் ஆகியோர் மிகச் சிறந்த சிறுகதைகளை எழுதியுள்ளனர்.

- மஹதி

எழுத்துப் பணியை 1930ஆம் ஆண்டு தொடங்கியவர் மஹதி ஆவார். இவர் மதுரையைச் சேர்ந்தவர். இயற்பெயர் எஸ். சையத் அஹமத் என்பதாகும். புதுக்கவிதை உலகில் கவிக்கோவாகத் திகழும் முனைவர் அப்துல் ரகுமானின் தந்தை ஆவார்.

1957ஆம் ஆண்டு இவருடைய இமயத்தின் சிரிப்பு என்னும் சிறுகதைத் தொகுப்பு வெளிவந்தது. இத்தொகுப்பில் பதினைந்து சிறுகதைகள் அடங்கியுள்ளன. இவற்றில் ஐந்து சிறுகதைகள் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டவை. ஏழு சிறுகதைகள் முஸ்லிம்களின் வாழ்வியலைச் சுட்டுவதாகவும், மூன்று சிறுகதைகள் பொதுநிலையிலும் அமைந்துள்ளன. மேலும் மாவீரர் கான்சாகிப், முதல் சுதந்திர வீரன் குஞ்சாலி மரக்காயர் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

- ஜேஎம்

திருவாரூர் மாவட்டம் இரவாஞ்சேரி என்னும் சிற்றூரில் பிறந்தவர் ஜேஎம் ஆவார். இயற்பெயர் ஜே.எம். ஹுசைன். பொதுவாக, இஸ்லாமியச் சமுதாயச் சீர்கேட்டைப் பற்றி எழுதியுள்ளார். இவருடைய பத்துச் சிறுகதைகளைக் கொண்ட இஸ்லாமியச் சிறுகதைகள் என்னும் நூல் 1960இல் வெளிவந்தது. இவருடைய தம்பி இன்னொரு சிறந்த சிறுகதை எழுத்தாளராகிய ஜே. எம். சாலி ஆவார்.

- ஜே.எம். சாலி

ஜே.எம். சாலி ஆனந்த விகடன் இதழில் நீண்ட காலம் துணையாசிரியராகப் பணியாற்றினார். சிங்கப்பூர் தமிழ்முரசு இதழில் உதவி ஆசிரியராகவும், தொலைக்காட்சியில் செய்தி ஆசிரியராகவும் இருந்து வருகிறார். ஆயிரத்திற்கும்

மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். இவருடைய கதைகளில் குர்ஆன், ஹதீஸ் நுட்பங்களைக் காண முடிகிறது. ஐம்பதிற்கும் மேற்பட்ட நூல்களை அளித்துள்ளார். இவருடைய கனாக்கண்டேன் தோழி என்னும் நூல் தமிழக அரசின் பரிசும், நோன்பு என்னும் சிறுகதை சிங்கப்பூர் அரசின் சிறப்பு விருதும் பெற்றுள்ளன.

- கருணாமணாளன்

இஸ்லாமியத் தமிழ் இதழ்களிலும், தினமணி கதிர், குமுதம் போன்ற இதழ்களிலும் ஐந்நூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை வழங்கி இருப்பவர் கருணாமணாளன் ஆவார். இயற்பெயர் அப்துல் ரஹூப். 1934இல் ஆழ்வார் திருநகரியில் பிறந்தவர். நாவுகள் முதலிய சிறுகதைத் தொகுப்புகள் பல வெளிவந்துள்ளன.

- ஜியாவுடீன்

மதுரையில் 1937இல் பிறந்தவர் ஆவார். வனத்துறை சரக அலுவலராகப் பணியாற்றினார். இவருடைய முதற்சிறுகதை ஆட்டம் ஓய்ந்தது. இது 1957இல் வெளிவந்தது. இருநூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். வனவாழ்வை மிகுதியாகச் சித்திரித்துள்ளார். மனச்சுளுக்கு, மனிதாபிமானி, பெருநாள் பிறை ஆகிய மூன்று சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன.

### 6.4.2 புதினம்

தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தை வளப்படுத்தியது போல, தமிழ்ப் புதின இலக்கியத்தையும் வளப்படுத்திய பெருமை இசுலாமியப் புதின எழுத்தாளர்களுக்கு உண்டு. அவர்களுள், ஹசன் என்னும் செய்யது முஹம்மது, தோப்பில் முகமது மீரான் போன்றோர் குறிப்பிடத்தக்க சிறந்த புதினப் படைப்பாளர்கள்.

- மு. செய்யது முஹம்மது (ஹசன்)

செய்யது முஹம்மது ஹசன் 1918ஆம் ஆண்டு நாகப்பட்டினத்தில் பிறந்தார். ஹசன் என்ற பெயரில் வரலாற்று நாவல்களை எழுதியுள்ளார். சிந்து நதிக்கரையினிலே, மேற்கு வானம், மஹ்ஜபீன், புனித பூமியிலே ஆகிய நான்கு வரலாற்று நாவல்களைப் படைத்துள்ளார். மில்லத் பப்ளிகேஷன்ஸ் என்னும் நிறுவனத்தை நிறுவி இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களைப் பதிப்பித்து வெளியிடும் பணியும் ஆற்றி வருகிறார். சீறாப்புராணம், சின்ன சீறா, ஆயிர மசலா, திருமணி மாலை, கனகாபிசேக மாலை முதலான இலக்கியங்களைப் பதிப்பித்துள்ளார்

- தோப்பில் முகம்மது மீரான்

குமரி மாவட்டத்திலுள்ள தேங்காய்ப் பட்டினத்தில் 1950இல் பிறந்தவர். இளங்கலைப் பட்டதாரி. ஒரு கடலோரக் கிராமத்தின் கதை, துறைமுகம், கூனன்

தோப்பு, நாற்காலி முதலான புதினங்களும் அன்புக்கு முதுமை இல்லை என்ற சிறுகதைத் தொகுப்பும் வெளி வந்துள்ளன. இவருடைய நாற்காலி என்னும் நவீனம் சாகித்ய அகாதமி பரிசு பெற்றது. குமரி மாவட்டத்து நடையில், கீழ்நிலை மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களைக் கலை நேர்த்தியுடன் தீட்டுவதில் இவர் சிறந்தவர்

தமிழிலுள்ள சமூக அங்கத எழுத்தாளர்களுள் இவரும் ஒருவர். சமூகச் சீர்திருத்தக் கருத்துகளைத் தம் புதினங்களில் மையக் கருத்துகளாகக் கொண்டு எழுதியுள்ளார்.

- பிற புதின ஆசிரியர்கள்

சிறுகதைகள் பலவற்றைப் படைத்த ஜே.எம். சாலி, முள்ளும் மலரும், வெள்ளைக் கோடுகள், பணவிலங்கு, ஆயுள் தண்டனை ஆகிய புதினங்களையும் எழுதியுள்ளார். அதைப்போல சிறுகதை எழுத்தாளரான கருணாமணாளன், மும்தாஜ், அகத்தினா, மாமியார் ஆகிய புதினங்களையும் படைத்துள்ளார்

## 6.5 பிற உரைநடை வகைகள்

மேற்குறிப்பிட்ட பழங்கதைகள், புனைகதைகள் நீங்கலாகக் கீழ்க்காணும் பிற உரைநடைகளும் இஸ்லாமிய அறிஞர்களால் படைக்கப்பட்டுள்ளன.

### 6.5.1 உரை நூல்கள்

திருக்குர்ஆன், சீறாப்புராணம் போன்றவற்றிற்குச் சிறந்த உரைநூல்கள், இசுலாமிய அறிஞர்களால் எழுதப்பட்டன.

சதாவதானி செய்கு தம்பிப் பாவலர்
நாம் முன்பே பார்த்துள்ள செய்கு தம்பிப் பாவலர் சிறந்த நாவலாசிரியர், உரையாசிரியர்.

சீறாப்புராணத்தில் திருவுருவாய் எனத் தொடங்கும் செய்யுளுக்கு இவர் எழுதிய உரை, இருபதாம் நூற்றாண்டின் நச்சினார்க்கினியர் என்னும் புகழைத் தந்தது.

கவி. கா. மு ஷெரீப்
சீறாப்புராணத்தின் ஒவ்வொரு காண்டத்திற்கும் தனித்தனியே சிறந்த உரை எழுதியவர் கவி. கா. மு. ஷெரீப்

- பா. தாவூத்ஷா

பா. தாவூத்ஷா திருச்சியைச் சேர்ந்தவர். இஸ்லாமிய மறுமலர்ச்சி உரைநடையின் தந்தை எனப் போற்றப்படுபவர். தாருல் இஸ்லாம் என்ற இதழ் மூலம் இவர் தமிழ் – இஸ்லாமியத் தொண்டு ஆற்றியது மறத்தற் கரியது. திருக்குர் ஆன் விளக்கவுரை முதல் ஆயிரத்தோர் இரவுகள் வரை இவர் எல்லாத் துறையிலும் தமிழ்த் தொண்டாற்றியுள்ளார். நபிகள் நாயகம் வரலாற்றை நபிகள் நாயக மான்மியம் எனவும் முகம்மது நபி (ஸல்) எனவும் இரு நூல்களாகப் படைத்துள்ளார்.

- எம். ஆர். எம். அப்துற்றஹீம்

இவர் இஸ்லாம் சமயம் பற்றி மட்டுமல்லாது பொதுவகையில் வாழ்க்கை முன்னேற்ற நூல்கள் ஐம்பதிற்கு மேல் படைத்தவர்; தமிழக வாசகர்கள் மனங்களில் சிறப்பிடம் பெற்றவர். முகவை மாவட்டத்தில் உள்ள தொண்டி என்னும் ஊரினர்.

வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பதற்கு வழிகாட்டக் கூடிய வகையில் முதன்முதலில் வாழ்க்கையில் வெற்றி என்னும் நூல் படைத்தார். அதனைத் தொடர்ந்து, முன்னேறுவது எப்படி, கவலைப்படாதே, வாழ்வைத் துவங்கு, சுபிட்சமாய் வாழ்க, வாழ்வது ஒரு கலை போன்ற பல நூல்கள் வெளியிட்டார்.

நபிகள் பெருமானாரின் வாழ்க்கை வரலாற்றை நபிகள் நாயகம் என நல்ல தமிழ் நடையில் நூலாக எழுதினார். வலிமார் வரலாறு, அல்ஹதீஸ் பொன்மொழிப் பேழை, முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள், இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் (மூன்று தொகுதிகள்) ஆகியனவும் இவர் படைப்புகளாகும்.

- பிற உரையாசிரியர்கள்

இஸ்லாமிய வேத நூலான அல்குர்ஆன் மற்றும் நபிகள் பெருமானார் நவின்ற நல்லுரைகளான அல்ஹதீஸ் ஆகியவற்றை மொழி பெயர்த்து உரைவகுக்கும் பணியும் இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டது.

1908ஆம் ஆண்டு கா.மி. அப்துல் காதர்ராவுத்தர் முதன்முதலில் அல்குர் ஆன் விளக்கவுரை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து ஆ.கா அப்துல் ஹமீது பாக்கவி 1929இல் தர்ஜுமதுல்குர்ஆன் எனவும் எஸ்.எஸ். அப்துல்காதர் பாக்கவி, திருமறைத் தமிழுரை எனவும், ஈ.எம். அப்துல் ரஹ்மான் அன்வாருல் குர்ஆன் (ஏழு பாகங்கள்) எனவும், பா.தாவூத்ஷா குர்ஆன் மஜீத் பொருளுரை விளக்கவுரை எனவும், பி.எஸ்.கே. முகம்மது இப்ராஹிம், தர்ஜுமதுல் குர்ஆன் எனவும் திருக்குரான் மொழி பெயர்ப்பு, விளக்கவுரைகளை எழுதி வெளியிட்டனர்.

பி.எஸ்.கே. முகம்மது இப்ராஹிம் திர்மிதி எனும் நூலை வெளியிட்டார். பா. தாவுத்ஷா, எம்.ஆர்.எம். அப்துற்றஹீம், ஆர்.பி.எம். கனி, செய்யிது இப்ராஹீம் முதலான பலரும் நபிகள் பெருமான் நல்லுரைகளைத் தமிழில் வழங்கினார்.

### 6.5.2 மொழி பெயர்ப்பு நூல்கள்

பிற மொழிகளிலிருந்து, சிறப்புப் பெற்ற பல நூல்களை இக்கால இசுலாமிய எழுத்தாளர்கள் மொழி பெயர்த்து எழுதியுள்ளனர்.

திருச்சி சையித் இப்ராஹிம்

திருச்சியில் 1898இல் பிறந்தவர் சையித் இப்ராஹிம் ஆவார். கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றியவர். எழுபத்தைந்திற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். அபுல்கலாம் ஆஸாத் எழுதிய ஜுனைத் பக்தாதி என்னும் நூலைத் தியாகம் என மொழி பெயர்த்தளித்தார்.

- மணவை முஸ்தபா

இன்றைய நிலையில் பல்துறை அறிஞராகத் திகழ்பவர் மணவை முஸ்தபா, மொழி பெயர்ப்புத்துறைக்கு இவர் ஆற்றிய தொண்டு மிகவும் சிறப்பானது.

யுனெஸ்கோ வெளியீடான கூரியர் இதழ், தமிழாக்கம் பெற்று வெளி வருவது இவரது மொழி பெயர்ப்புப் பணிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

ஆங்கில மொழியில் மைக்கேல் ஹெச் ஹார்ட் எழுதிய The Hundred எனும் நூலை நூறுபேர் என மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார் இது ஒரு சிறந்த மொழி பெயர்ப்பு நூலாகப் போற்றப்படுகிறது.

- எஸ். எம். அப்துல் காதர் பாகவி

எஸ்.எஸ். அப்துல் காதர் பாகவி நபிகள் பெருமானார் நவின்ற நல்லுரைகளை (ஹதீஸ்கள்) ஸஹீஹுல் புகாரி என மூன்று தொகுதிகளாக வெளியிட்டார்.

**6.5.3** பிற உரைநடை நூல்கள்

மேற்குறிப்பிட்ட நூல்களைத் தவிர, மிகச்சிறந்த உரைநடைகள் பலவற்றை இஸ்லாமிய அறிஞர்கள் வெளியிட்டனர்.

- நீதிபதி மு.மு. இஸ்மாயில்

இவர் 1921ஆம் ஆண்டு பிறந்தவர். சென்னை உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாகப் பணியாற்றினார். பேச்சாளர்; பன்னூலாசிரியர் ஆவார். அல்லாஹ்வின் அழகிய திருநாமங்கள், இலக்கிய மலர்கள், இனிக்கும் இராஜநாயகம், நயத்தக்க நாகரிகம், மும்மடங்கு பொலிந்தான், தாயினும், உந்தும் உவகை முதலான இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். கம்ப இராமாயணத்தின் பெருமையை உலகறியச் செய்ததில் இவர் பெரும் பங்கு வகிக்கிறார்.

- ம.மு. உவைஸ்

இலங்கைத் தமிழறிஞராகிய இவர், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத் துறையின் தலைவராகப் பணியாற்றியவர்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆய்வில் மிக ஆழம் கண்டவர் உவைஸ் ஆவார். தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லிம்களின் பங்களிப்பு Muslim Contribution to Tamil Literature என்ற ஆங்கில நூலை வெளியிட்டார். இஸ்லாமியர்களின் கலைப் பண்பு குறித்த இவருடைய ஆய்வு நூல் கலையும், பண்பும் ஆகும். இலக்கியத் தென்றல், இஸ்லாம் வளர்த்த தமிழ், மருதை முதல் வகுதை வரை முதலான எட்டு நூல்களை இயற்றியுள்ளார்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இவர் ஆற்றியுள்ள தொண்டு சிறப்பானது. அறபு – தமிழ் சொல்லகராதி, இஸ்லாமியத் தமிழ் இலக்கிய நூல் விவரக் கோவை, இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு (தொகுதி ஒன்று, இரண்டு, மூன்று) ஆகியவற்றை வெளியிட்டார்.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளில் எழுதும் திறம் பெற்ற

இவர். எம்.ஆர்.எம். அப்துற்றஹீம் எழுதிய நபிகள் நாயகம் என்னும் நூலைச் சிங்கள மொழியில் மொழி பெயர்த்துள்ளார்.

- எம். அப்துல் வஹ்ஹாப்

செங்கோட்டையில் 1920இல் பிறந்த இவர், முதுபெரும் எழுத்தாளர். பிறை மாத இதழைப் பல்லாண்டுக் காலம் நடத்தி வந்தார். தித்திக்கும் திருமறை, நான்மணி நால்வர், சுவர்க்கத்துக் கவிஞர், மாநபி மகளார் முதலான நூல்களைப் படைத்துள்ளார். குர்ஆன் தர்ஜுமா என அல்குர் ஆன் பொருளுரையும் வெளியிட்டுள்ளார்.

- ஆர். பி. எம். கனி

நெல்லை மாவட்டத்திலுள்ள ரவண சமுத்திரம் என்னும் ஊரைச் சேர்ந்தவர். 1920இல் பிறந்தவர்.

1940ஆம் ஆண்டு ஜனாப் ஜின்னா என்ற நூலை வெளியிட்டுத் தமிழிலக்கிய உலகில் அறிமுகமானார். 1945-இல் இவருடைய அல்லாமாஇக்பால் வெளிவந்தது. 1947 முதல் சிங்கப்பூரிலிருந்து வெளிவந்த மலேயா நண்பன், தினசரி, வாரப் பதிப்புகளின் ஆசிரியராக இருந்தார். பின்னர்ச் சென்னையில் வெளியான முஸ்லிம் தினசரி இதழாசிரியரானார்.

இவருடைய இஸ்லாமியக் கருவூலம் மிகச் சிறந்த நூலாகும். இக்பால் கவியமுதம், முஸ்லிம் பெண்கள், பேரின்ப ரசவாதம், பிழையிலிருந்து விடுதலை, மெய்ஞ்ஞானப் பேரமுதம், பாரசீகப் பெருங்கவிஞர்கள் போன்ற இருபது நூல்களைப் படைத்துள்ளார்.

## 6.6 தொகுப்புரை

இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கப் பெறுகிறது. இக்காலத்திலிருந்து கி.பி 1750ஆம் ஆண்டு வரையிலுமுள்ள காலத்தைத் தொடக்கக்காலம் என்றும் கி.பி 1850 வரையிலுமுள்ள காலத்தை இடைக்காலம் என்றும், அதற்குப் பின் இன்றைய நாள் வரையிலுமுள்ள காலத்தை இக்காலம் என்றும், கால வகையில், நோக்கிப் பாகுபாடு செய்வர். அவ்வாறே இக்காலத்தை ஐரோப்பியர் ஆட்சிக் காலம் அல்லது விடுதலை வேள்விக் காலம் என்றும் அடுத்துள்ள கால அளவை தன்னாட்சிக் காலம் அல்லது மறுமலர்ச்சிக் காலம் என்றும் வகுப்பர். இக்கால இஸ்லாமிய இலக்கியம் கவிதை வடிவிலும் உரைநடை வடிவிலும் அளவாலும் தரத்தாலும் சிறப்புற்று விளங்கி, மேலும் வளர்ந்து வருகிறது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# P20241

# தன் மதிப்பீடு : வினாக்கள் - I

1.இயேசுவை எங்கே காணலாம் என்று சத்தியசாட்சி கூறுகிறார்?

விடை

மாடி வீடுகளில் இயேசுவைக் காண முடியாது; கொத்தடிமைகள் கூட்டத்திலும் குப்பை பொறுக்குவோர் கூட்டத்திலும் அவரைக் காணலாம் என்று சத்தியசாட்சி கூறுகிறார்.

2.கிறித்தவக் கவிதைகளில் வெளிப்படும் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

விடை

கிறித்தவக் கவிதைகள் சமுதாயச் சீர்கேடுகளை இடித்துரைப்பவை. பணம், செல்வாக்கு ஆகியவற்றுக்கு எதிரானவை. சுரண்டலைச் சாடுபவை.

3.இயேசுவைப் பற்றிப் பிற சமயக் கவிஞர்கள் இயற்றியுள்ள நூல்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

விடை

திரு.வி.கலியாண சுந்தரனார் இயற்றியுள்ள 'கிறிஸ்துவின் அருள் வேட்டல்', கண்ணதாசனின் 'இயேசு காவியம்', சுத்தானந்த பாரதியின் 'ஏசுநாதர் சரிதை' போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

முன்

# P20241

# தன் மதிப்பீடு : வினாக்கள் - II

1.கிறித்தவக் கீர்த்தனைக் கவிஞர்கள் சிலரைச் சுட்டுக.

விடை

கிறித்தவக் கீர்த்தனைக் கவிஞர்களுள் வேதநாயகம் சாஸ்திரியார், மரியான் உபதேசியார், ஞா.சாமுவேல், வே.மாசிலாமணி முதலியோர் குறிப்பிடத்தக்கவர்.

2.கிறித்தவ மெல்லிசைப் பாடல்களில் உள்ளடக்கம் பற்றி எழுதுக.

விடை

மெல்லிசைப் பாடல்கள் பொதுவாக இறைவனைப் போற்றிப் பாடுவனவாக அமைந்துள்ளன. வாழ்க்கையில் துயரப்படும் பலருக்கு ஆறுதல் அளிக்கும் முறையிலும் பல பாடல்கள் அமைந்துள்ளன.

3.நாட்டுப்புற மெட்டில் அமைந்த கிறித்தவ கிராமியப் பாடல்கள் பற்றி எழுதுக.

விடை

இவை எளிமையானவை; ஓரளவு பேச்சு வழக்குச் சார்ந்தவை; நாட்டுப்புறப் பாடல் மரபை அடியொற்றி எழுதப்பட்டவை.

# P20242

# தன் மதிப்பீடு : வினாக்கள் - I

1.தற்காலத் தமிழ் உரைநடையின் முன்னோடிகள் சிலரைக் குறிப்பிடுக.

விடை

அன்றிக்ஸ் அடிகள், தத்துவபோதகர், வீரமாமுனிவர் ஆகியோர் தற்காலத்தமிழ் உரைநடையின் முன்னோடிகளாவர்.

2.பெண் மேம்பாட்டுக்குக் கிறித்தவப் புதினங்களின் பங்களிப்பினை விளக்குக.

விடை

வேதநாயகரின் பிரதாப முதலியார் சரித்திரமும் சுகுண சுந்தரியும் பெண் மேம்பாட்டைக் கருவாகக் கொண்டவை. பெண்கல்வியை வற்புறுத்தியும் வரதட்சணை, குழந்தைத் திருமணம், கைம்மைத்துயர் ஆகியவற்றை எதிர்த்தும் இந்நூல்கள் பேசுகின்றன. ஞானாம்பாள், சுந்தரத்தண்ணி பாத்திரங்களும், சுகுணசுந்தரி கதையும் பெண்ணுரிமைகள், பெண்கல்வி ஆகியவை பற்றிப் பெரிதும் பேசுகின்றன.

3.வர்க்கப் போராட்டத்தைக் கிறித்தவப் புதின ஆசிரியர்கள் எங்ஙனம் எடுத்துக் காட்டியுள்ளனர்?

விடை

பணக்கார வர்க்கத்தின் வெறியாட்டம், அதற்குத் துணை போகும் காவல்துறை, ஏழைகள் படும் துன்பம், முதலாளி வர்க்கம் ஏழைகளுக்குக் கொடுக்கும் துயர், மானத்தோடு வாழ முடியாத ஏழைகளின் அவலம், விவசாயிகளின் துன்பம் ஆகியவற்றை விளக்கியுள்ளனர்.

4.கிறித்தவத்தில் காணப்படும் சாதிப் பாகுபாடு ‘கல்லறைப்பூக்கள்’ புதினத்தில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

விடை

வெவ்வேறு சாதிகளை, வெவ்வேறு சமயங்களைச் சேர்ந்தவர்கள் காதலிக்கும் போது ஏற்படும் சிக்கல்களை விவரிக்கிறது கல்லறைப்பூக்கள். மனித நேயத்தை வளர்ப்பதற்குப் பதில் சாதியும் சமயமும் மனிதர்களைப் பிரிக்கிறது. கல்லறையில் புதைக்கிறது என்பதை அந்தப் புதினம் விளக்குகிறது.

5.புத்தம் வீடு’ யார் எழுதியது? இப்புதினம் எதை மையப்படுத்துகிறது?

விடை

‘புத்தம் வீடு’ ஆசிரியர் ஹெப்சிபா ஜேசுதாஸ். மாறிவரும் சமுதாயப் போக்கினை மையப்படுத்துகிறது இப்புதினம்.

முன்

# P20242

# தன் மதிப்பீடு : வினாக்கள் - II

1.விவிலிய வசனத்தைக் கருவாகக் கொண்டு எழுதியுள்ள சிறுகதைக்குச் சான்று தருக.

விடை

ஒலிக்கவில்லை என்ற சிறுகதை 'சத்திரத்தில் அவர்களுக்கு இடமில்லாமல் இருந்தது' என்ற விவிலிய வசனத்தைக் கருவாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

2.எளிமையே இறைவன் விரும்பும் கோலம்' என்பதை எந்தச் சிறுகதை உணர்த்துகிறது ?

விடை

எளிமையே இறைவன் விரும்பும் கோலம் என்பதைக் 'குடில்' என்ற சிறுகதை உணர்த்துகிறது.

3.பூக்களைப் பறிப்பது வருந்தத்தக்கது' என்ற சிறுகதைத் தலைப்பில் பூக்கள் எதைக் குறிக்கின்றன ?

விடை

இளம் சிறுவர்கள் கல்வி பயில வாய்ப்பின்றி இளம் வயதிலேயே வாழ்வு பறிபோகும் நிலையைக் குறிக்கிறது 'பூக்கள்'.

4.நல்ல சமாரியன்' நாடகம் புலப்படுத்தும் செய்தி யாது ?

விடை

'நல்ல சமாரியன்' நாடகம் மனித உறவுகள் மதச்சட்டங்களை விட மேலானது

என்பதைப் புலப்படுத்துகிறது.

முன்

# P20243

# தன் மதிப்பீடு : வினாக்கள் - I

1.கிறித்தவச் சிற்றிலக்கியங்களின் பண்புகள் யாவை?

விடை

கிறித்தவச் சிற்றிலக்கியங்கள் இயேசு பெருமானின் புகழைப் பாடுகின்றன. விவிலியச் செய்திகளைக் கூறுகின்றன.

2.கிறித்தவர்கள் கையாண்டுள்ள சிற்றிலக்கிய வடிவங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

விடை

கிறித்தவக் கவிஞர்கள் அந்தாதி, அம்மானை, உலா, கலம்பகம், குறவஞ்சி, சதகம், பள்ளு முதலிய பல்வேறு சிற்றிலக்கிய வடிவங்களைக் கையாண்டுள்ளனர்.

3.கிறித்தவச் சிற்றிலக்கிய முன்னோடிகள் இருவரைக் குறிப்பிடுக.

விடை

கிறித்தவச் சிற்றிலக்கிய முன்னோடிகளாக வீரமாமுனிவரையும் வேதநாயகம் பிள்ளையையும் குறிப்பிடலாம்.

4.பெத்லகேம் குறவஞ்சியில்' குறவஞ்சியின் பங்கு யாது?

விடை

பெத்லகேம் குறவஞ்சியில் குறத்தியின் பங்கு முதன்மையானது. தலைவனை நினைத்து ஏங்கும் தலைவிக்குக் குறத்தி ஆறுதல் மொழிகள் கூறுகிறாள்; பெத்தலகேம்

நாதர் உன்னை மணம் செய்ய நாளை வருகிறார் எனக் குறி சொல்கிறாள். மேலும், நாட்டுவளம், மலைவளம் முதலியவற்றை நயம்பட எடுத்துரைக்கிறாள்.

5.திருக்காவலூர் அன்னையின் சிறப்புகளை வீரமாமுனிவர் எவ்வாறு கூறுகிறார்?

விடை

திருக்காவலூர் அன்னை கருணை கொண்டவள், பாவம் போக்குபவள்; உயிர்களுக்கு மீட்பு வழங்குபவள் என்று கூறுகிறார்.

முன்

# P20243

# தன் மதிப்பீடு : வினாக்கள் - II

1.தேவ மாதா அந்தாதியின் ஆசிரியரைப் பற்றிக் குறிப்பிடுக.

விடை

தேவ மாதா அந்தாதியின் ஆசிரியர் வேதநாயகம் பிள்ளை. இவர் மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றியவர். தமிழில் முதல் புதினத்தைப் படைத்தவர். பெண் கல்விக்காகப் பாடுபட்டவர்.

2.தேவ மாதா அந்தாதியின் சிறப்புகள் யாவை?

விடை

தேவ மாதா அந்தாதி இயேசுவின் தாயாகிய மரியாளின் பெருமைகளை எடுத்துரைக்கிறது. பக்திச் சுவையும் இலக்கியச் சுவையும் மிகுந்தது.

3.அமலகுரு சதக ஆசிரியர் இறைவனிடம் வேண்டுவன யாவை?

விடை

தம் குறைகளுக்காக வருந்தி, இறைவனின் அருளை வேண்டிப் பாடுகிறார் கவிஞர். இயேசு சிலுவையில் பட்ட துன்பங்களிலும் தமக்குப் பங்கு வேண்டும் எனக் கேட்கிறார் கவிஞர்.

4.முக்தி வழி அம்மானை' எந்த நூலைத் தழுவி அமைந்துள்ளது?

விடை

இந்நூல், ஜான் பனியன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய 'மோட்சப் பிரயாணம்' (Pilgrim's Progress) என்ற நூலைத் தழுவி அமைந்துள்ளது.

5.முக்தி வழி அம்மானை உணர்த்தும் செய்தி யாது?

விடை

மனிதன் பல்வேறு தடைகளையும் எதிர்கொண்டு நம்பிக்கையுடன் முன்னேறினால், தான் நினைத்த இலக்கை அடைய முடியும் என்பது முக்தி வழி அம்மானை உணர்த்தும் செய்தியாகும்.

# P20244

# தன் மதிப்பீடு : வினாக்கள் - I

1.இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் எண்ணிக்கை யாது?

விடை

இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவை ஆகும்.

2.இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் மொத்தம் எத்தனை? அவற்றின் வகைகள் யாவை?

விடை

இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் இருநூற்றுக்கும் அதிகமாக இருக்கின்றன. தமிழ் மரபு வழிப்பட்ட இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள், புதுவகைச் சிற்றிலக்கியங்கள், மக்கட் பிரபந்தங்கள் என்று மூன்று வகையில் அவை அமையும்.

3.இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் காணும் முதல் இலக்கியம் எது? அதனைப் பற்றிக் குறிப்பு வரைக.

விடை

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் காணும் முதல் இலக்கியம் பல்சந்த மாலையாகும். இந்நூல் அகத்துறைப் பொருளில் அமைந்தது. நூல் முழுவதும் கிடைக்கவில்லை. எட்டு செய்யுட்களே கிடைத்திருக்கின்றன. ஆசிரியரின் பெயரோ, காலமோ தெரியவில்லை. இவ்விலக்கியத்தில் பயின்று வரும் சொல்லாட்சியைக்

கொண்டு பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை இவ்விலக்கியத்தின் காலம் 13ஆம் நூற்றாண்டு என நிறுவுகின்றார்.

4.முதல் மாலை இலக்கியம் எனக் கொள்ளத்தக்க இலக்கியம் எது?

விடை

முதல் மாலை இலக்கியம் எனக் கொள்ளத்தக்க இலக்கியம் மிகுராசு மாலையாகும்.

5.மிகுராசு மாலை – நூற்குறிப்பு வரைக.

விடை

பல வண்ண மலர்களால் தொடுக்கப்படும் மாலை போல, பலவகை யாப்பு வகையினால் தொடுக்கப்படும் இலக்கியம் மாலை இலக்கியம் எனலாம். மிகுராசு என்பது அறபு மொழிச் சொல்லாகும். இதற்கு உயருதல், விண்ணேற்றம் பெறுதல் என்று பொருள். இஸ்லாம் சமயத் தீர்க்கதரிசியாகிய நபிகள் பெருமானார் புறாக் என்னும் மின்பரி மேலேறி விண்ணேற்றம் பெற்ற வரலாற்றைக் கூறுவது மிகுராசு மாலையாகும். இந்நூல் நெல்லை மாவட்டத்திலுள்ள மங்கை நகர் என்னும் ஊரினரான ஆலிப்புலவரால் இயற்றப்பட்டது. பன்னிரண்டு இயல்களும் கடவுள் வாழ்த்து உட்பட 743 செய்யுட்களும் கொண்டுள்ளது. இவ்விலக்கியத்தின் காலம் கி.பி. 1590ஆம் ஆண்டாகும்.

6.மிகுராசு மாலையின் அரங்கேற்ற வரலாற்றைக் கூறுக.

விடை

ஆலிப்புலவர் தமிழில் மிகுராசு மாலை என்னும் சிற்றிலக்கியம் இயற்றினார். ஆனால் அதனை அரங்கேற்றம் செய்விக்க நெல்லை, காயல் முதலான பலவூர் இஸ்லாமியக் குடிமக்கள் தயாராக இல்லை. அந்நிலையில் கோட்டாறு வந்து தன் மாணவர் சிவலிங்கம் என்பாரின் உதவியுடன் அவ்வூரில் இருந்த செல்வந்தரும் அந்தகருமான பாவாடைச் செட்டியாரின் தலைமையில் கைக்கோளர் சமுதாயத்தவர் முன்னிலையில் அரங்கேற்றினார். புலவர் ஒவ்வொரு செய்யுளையும் உரக்கப்பாடி உரை நிகழ்த்தி வந்தார். நபிகள் பெருமானார் புறாக் மின்பரி ஏறி ஜெருசலேம் தேவலாயத்தை அடைந்தார். அங்கு, தொழுவதற்காக இறங்கி, தான் ஏறி வந்த புறாக் என்னும் மின்பரியைக் கட்ட அங்கிருந்த தூணில், இறைவனை எண்ணித் தன் விரலை வைத்தார். என்றும், அத்தூணில் துளை ஏற்பட்டது என்றும் வரும் பகுதியைப் பாடும்போது விண்ணில் பேரொளி தோன்றியது. இவ்வொளியால் அந்தகரான பாவாடைச் செட்டியார் பார்வையைப் பெற்றார். இதற்குப் பின் ஆலிப்புலவர் நாயகப் பேரொளியைக் கண்ட கண்களால் வேறு எதனையும் காண மாட்டேன் எனக் கண்களைக் கட்டிக்கொண்டு தன் இறுதிக் காலம் வரை வாழ்ந்து மறைந்தார். என்று

மிகுராசு மாலையின் அரங்கேற்ற வரலாறு அறியக் கிடக்கிறது.

7.மிகுராசு மாலையின் வழி நூல்கள் யாவை?

விடை

மிகுராசு மாலையை முதல் நூலாகக் கொண்டு, மதார் சாகிப் புலவர் மிகுராசு நாமா என்றும், மெய்ஞ்ஞானி தக்கலை பீர்முகம்மது அப்பா மிகுராசு வளம் என்றும், காளை ஹசனலிப் புலவர் மிகுராசு-லி-ஆரிஃபீன் என்றும் வழிநூல்களை வழங்கியுள்ளனர்.

முன்

# P20244

# தன் மதிப்பீடு : வினாக்கள் - II

1.சமய வரலாறு என்பது யாது?

விடை

சமய வரலாறு என்பது ஒவ்வொரு சமயமும் இவ்வுலகில் தோன்றி வளர்ந்த வரலாற்றுப் பின்னணியே ஆகும். இவ்வரலாற்றுப் பின்னணியில் அந்தந்தச் சமயங்களின் நிறுவுநர்கள் முன்னணி வகிப்பர். காலத்தாக்கத்தால் அவ்வப்போது வரும் சிற்சில மாற்றங்கள் – தேற்றங்களைத் தந்தவர்களும் அந்தச் சமய வரலாற்றில் இடம் பெற்று, சமய வரலாறு விரிவாக்கம் பெறும். இவ்வகையில் நோக்கும் பொழுது சமய வரலாறு என்பது சமயத் தத்துவங்கள் அடங்கிய சமயச் சான்றோர்களின் வரலாறே எனலாம்.

2.நபிகள் பெருமானார் காலத்தில் அறபு நாட்டில் இருந்த சமயங்கள் யாவை? அவற்றைப் பற்றிக் குறிப்பு வரைக.

விடை

இஸ்லாம் சமயத்திற்கு முன் அறபு நாட்டில் இஸ்ரேலிய, யூத, கிறித்தவ சமயங்கள் இருந்தன. இஸ்ரேலிய சமயம் மூசா நபியாலும், யூதசமயம் தாவூது நபியாலும், கிறித்தவ சமயம் ஈசா நபியாலும் நிறுவப்பட்டனவாகும். இவற்றிற்கு முறையே தவுராத், சபூர், இஞ்சில் என்னும் வேதங்கள், எல்லாம் வல்ல அல்லாஹ்வால் அருளப்பட்டன.

3.இஸ்ரேலிய, யூத, கிறித்தவ, இஸ்லாமிய சமயங்கட்கு மூலப்பிதா யார்? அவரை இறைவன் ஆட்கொண்ட விதத்தைப் புலப்படுத்துக.

விடை

இஸ்ரேலிய, யூத, கிறித்தவ இஸ்லாமிய சமயங்கட்கு மூலப்பிதா இப்ராஹிம் நபி ஆவார். இவர் தென் ஈராக்கிலுள்ள ஊர் என்னும் பேரூரில் பிறந்தார். அரூபியாகத் திகழும் ஏக இறைவன் ஒருவனுக்கே முற்றிலும் சரணடைந்தவராக வாழ்ந்தார். சிலை வணக்கத்தை வெறுத்தார். விவரம் அறிந்த மன்னன் நமுறூது ஆணையால் இவர் நெருப்புக் குண்டத்தில் கிடத்தப்படும் போது பெருமழை பெய்து நெருப்பை அணைத்தது. அதே சமயம் திரள் திரளாகக் கொசுக்கள் எங்கிருந்தோ பறந்து வந்து நமுறூது மன்னன் மூக்கினுள் புகுந்து இறப்பிற்குள் ஆழ்த்தியது. அவ்வாறே இப்ராஹிம் நபியை ஏற்காதோறும் மடிந்து வீழ்ந்தனர். இப்ராஹிம் நபி தன்தலைமகனான இஸ்மாயில் நபியை இறைவழியில் பலியிடக் கனவு கண்டார். மகனை அழைத்துக் கொண்டு மோரியா மலைக்குச்சென்றார். மகனின் கை கால்களைக் கட்டிக் கிடத்தி விட்டு தன் கண்களைக் கட்டிக்கொண்டு கத்தியை மகனின் கழுத்தில் செலுத்தினர். இரத்தம் பீரிடுவதை உணர்ந்தார். கண்களைத் திறந்து பார்த்த போது மகன் சேதமின்றி அருகில் நின்றிருந்தான். மகனுக்குப் பதிலாக ஆடு ஒன்று அறுபட்டுக் கிடந்தது. அது கண்டு உவந்தார். இவ்வகையில் இறைவன் அவரை ஆட்கொண்டான்.

4.நபிகள் நாயகம் நிகழ்த்திக் காட்டிய அற்புதங்களில் இரண்டினைக் கூறுக.

விடை

நபிகள் பெருமானார் இளமையில் கதீஜா பிராட்டியாரிடம் பணிக்கு அமர்த்தப்பட்டார். அவருடைய கூர்த்த மதியைக் கண்ட கதீஜா பிராட்டியார் அவரைச் சிரியா நாட்டிற்குச் சென்று வணிகம் செய்து வர அனுப்பினார். அவருக்கு ஓர் ஒட்டகமும் அதனை நடத்திச் செல்லப் பணியாளும் கொடுத்தார். ஆனால் அந்தப் பணியாள், ‘சிறிய நபிபிரானுக்கு இத்தனைச் சிறப்பா’ எனப் பொறாமை கொண்டான். ஊர் எல்லையைத் தாண்டி வணிகக் குழு வந்ததும் நபிபிரானை ஒட்டகத்தை விட்டு இறங்கி நடந்து வருமாறு செய்தான். ஏற்கெனவே அவருடைய தலைக்கு மேல் நிழலிட்டு வந்த மேகம் இன்னும் அகலப் பரவி நிழலிட்டது.

மக்கமா நகரத்தில் நபிகள் பெருமானார் பரப்பி வந்த ஓரிறைக் கோட்பாட்டை அவ்வூரார் ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்வாறு ஏற்றுக் கொள்ளாத எதிர்ப்பாளர்களுக்குத் தலைவராக அபுஜகில் என்பார் அமைந்தார். நபிகள் பெருமானாரைக் கொன்று விடக் கருதிய அபுஜகில் நபிபிரானிடம் ஊருக்கு வெளிப்புறம் உள்ள வெட்ட வெளிக்கு வந்தால், தான் இஸ்லாம் சமயத்தை ஏற்றுக்கொள்வதாகக் கூறினான். நபிபிரானும் ஒப்புக் கொண்டு புறப்பட்டார். இருவரும் நடந்து பெரும் வனாந்தரத்திற்கு வந்தனர். அபுஜகில் தனக்குத் தாகம் எடுப்பதாகவும், இங்கு நீர்ச்சுனை ஒன்றைத் தோற்றுவித்தால் அத்தண்ணீரைக் குடித்தபின், தான் இஸ்லாம் சமயத்தை ஏற்றுக்கொள்வதாகவும் கூறினான். அவ்வளவில் நபிகள் பெருமானார் இறைவனின் திருநாமத்தை மனத்தில் நினைத்து கைநகத்தால் தரையைக் கீறினார். உடனே குபுகுபுவென்று இன்சுவை நீர் வெளிப்பட்டது.

இவை இரண்டும் நபிகள் நாயகம் நிகழ்த்திக் காட்டிய அற்புதங்கள் ஆகும்.

5.மிகுராசு மாலையில் விவரித்துள்ள இஸ்லாம் சமயத் தத்துவங்கள் சிலவற்றைச் சுருக்கித் தருக.

விடை

இஸ்லாம் சமயத்தவருக்கு வரையறுக்கப்பட்ட கட்டாயக் கடமைகளில் கலிமா, தொழுகை, நோன்பு ஆகிய மூன்றும் மிகுராசு மாலையில் காட்டப்பட்டுள்ளன. கலிமா என்பதற்கு மொழிதல் என்று பொருள். தொழுகை – இஸ்லாம் சமயத்தவர் தினம் ஐந்து வேளை இறைவழிபாடு செய்ய வேண்டும். இது கட்டாயக் கடமை ஆகும். நோன்பு – முப்பது நாட்கள் நோன்பு நோற்க வேண்டும் என்பது கட்டாயக் கடமையாகும்.

முன்

# P20245

# தன் மதிப்பீடு : வினாக்கள் - I

1.இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறியின் பெயர் யாது? அது எந்த நாட்டில் தோன்றி எந்நாட்டில் வளர்ச்சி பெற்றது?

விடை

அது எந்த நாட்டில் தோன்றி எந்த நாட்டில் வளர்ச்சி பெற்றது? சூஃபி என்பது இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறி. இது அறபு நாட்டில் தோன்றி, பாரசீக நாட்டில் வளர்ச்சி பெற்றது.

2.இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறியின் அடிப்படை யாது?

விடை

இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறியின் அடிப்படை தஸவ்வுஃப் கோட்பாடாகும்.

3.இஸ்லாமிய மெய்ஞ்ஞானி மேற்கொள்ளும் ஆன்மீகப் பயணத்தில் முதற்கண் வேண்டுவது யாது?

விடை

ஆத்ம சுத்தி.

4.இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறியின் படித்தரங்கள் யாவை?

விடை

இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறியின் படித்தரங்கள் நான்கு. அவை, ஷரீ அத், தரீக்கத், ஹக்கீகத், பாரிஃபத் என்பனவாகும்.

5.இஸ்லாமிய மெய்ஞ்ஞானி பெறும் பேறுகள் யாவை?

விடை

இஸ்லாமிய மெய்ஞ்ஞானியர், நாசூத்து, மலக்கூத்து, ஜபறூத்து, லாஹுூத்து என்னும் நான்கு பேறுகளைப் பெறுவர். இறுதியில் லாஹுூத்து நிலைக்கு உயர்வார்கள்.

6.தமிழகத்திலும் வட இந்தியாவிலும் தோன்றிய மெய்ஞ்ஞான பீடங்கள் யாவை?

விடை

தமிழகத்தில் காதிரியாத் தரீக்கா என்ற ஞான பீடம், ராஜஸ்தான் மாநிலத்தில் (அஜ்மீரில்) சிஸ்தியா ஞான பீடம்.

முன்

# P20245

# தன் மதிப்பீடு : வினாக்கள் - II

1.தமிழகத்து இஸ்லாமிய ஞானியர்கள் சூஃபி மெய்ஞ்ஞான நெறியை எவற்றுடன் – எவ்வகையில் – ஒப்பு நோக்கினர்?

விடை

சரியை, கிரியை, ஞானம், யோகம் என்பவற்றுடன் ஒப்பு நோக்கினர்.

2.தமிழகத்து இஸ்லாமிய மெய்ஞ்ஞானியர்கள் எவ்வகை ஒப்பாய்வுச் சிந்தனை வயப்பட்டு எழுச்சியுற்றனர்?

விடை

இஸ்லாமிய நெறி தரும் பேறுகளான நாசூத்து, மலக்கூத்து, லாகூத்து, ஜபறூத்து என்பவற்றைச் சைவம் காட்டும் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுஜ்ஜியம் என்பவற்றுடன் ஒப்பு நோக்கினர். சைவம் காட்டும் போதம் இஸ்லாமியம் காட்டும் இல்ம் (கல்வி ஞானம்) ஆகும். இவ்விரு நெறிகளையும் ஒப்பாய்வு செய்து சிந்தனை வயப்பட்டு எழுச்சி பெற்றனர்.

3.தமிழகத்து இஸ்லாமிய மெய்ஞ்ஞானியர்கள் யோக நிலையை எவ்வகையில் கொள்கின்றனர்?

விடை

இறைவனிடம் தொடர்பு கொள்வதில் உள்ளம் முதலிடம் வகிக்கிறது. பொருள்களில் உள்ள உண்மைத் தன்மையை உணரும் உணர்வே உள்ளம், மெய்ஞ்ஞானத்தால் அது ஒளி பெற்றுவிட்டால் இறை உள்ளத்தின் பிம்பமாக விளங்கும்.

இதைப் பகுத்தறிவால் பெற முடியாது. தஜல்லி (ஞான ஒளி), இல்ஹாம் (தெய்வ வெளிப்பாடு) ஆகியவற்றின் மூலம் பெறும் அறிவே மாரிபத் எனப்படும். இதனை யோக நிலை (இர்ஃபான்) என்பர்.

4.காயசித்தியாவது யாது?

விடை

மூலாதாரத்திற்கு மேலுள்ள அனலை நுண்ணிய சுழுமுனை என்னும் நாடியின் வாயிலாகச் சிரசில் சேர்த்து அதன்கண் நின்றொழுகும் அமுதத்தை உடலெங்கும் பரவச் செய்வதே காயசித்தி ஆகும்.

5.சுழுமுனை யாவது யாது?

விடை

சுழுமுனை என்னும் நாடியை ‘இஸ்லாமியர்’ ‘அபுல்’ என்பர். உடம்பிற்குள் ஒரு குழல் இருக்கிறது. மூக்கிலிருக்கும் இரு துவாரங்களுக்கும் அடி மூலம் வழியாகும். அதற்குள் ஒரு நரம்பிருக்கிறது அதனைப் பிரம்ம நாடி என்றும் தத்தியா என்றும் கூறுவர்.

6.இஸ்லாமிய மூலக்கொள்கைகளான தொழுகை கலிமா ஆகியவற்றை எங்ஙனம் வழங்குவர்?

விடை

உறுமீன் என்று வழங்குவர்.

# P20246

# தன் மதிப்பீடு : வினாக்கள் - I

1.இக்கால இஸ்லாமிய இலக்கியத்தைக் கால அடிப்படையில் எத்தனை பிரிவுகாளகப் பிரிக்கலாம்?

விடை

19ஆம் நூற்றாண்டு முதல் 1950 வரையுள்ள காலப்பகுதிக் குரியவற்றை ஐரோப்பியர் ஆட்சிக்கால இலக்கியங்கள் என்றும், அதற்குப்பின், வருகிற இலக்கியங்களை மறுமலர்ச்சிக் கால இலக்கியங்கள் என்றும் பாகுபடுத்தலாம்.

2.சிலேடையைச் சமய நல்லிணக்கத்துக்காகப் பயன்படுத்திய இஸ்லாமியப் புலவர் யார்? எவ்வாறு?

விடை

சதாவதானி செய்கு தம்பிப் பாவலர், எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகக் கடவுளைச் சுட்டும் ஒரு தொடர் சொல்லுங்கள் என்று கேட்கப்பட்டபோது, அவர் சிரமாறுடையான் என்று பாடினார். இதைச் சிரம் ஆறு உடையான் எனவும் சிரம்மாறு உடையான் எனவும் பிரிக்கலாம். சிரம் = தலை, தலைமை என்னும் பொருள்கள்; ஆறு = நதி, எண்(6) என்னும் பொருள்கள்; ஆறு = நெறி; சிரமாறு = சிரம்மாறு (மாறுதல்); சிரம் ஆறு உடையான் – சிரத்தில் கங்கை ஆற்றை உடையவன் (சிவன்) தலை ஆறு உடையான் (முருகன்) தலை மாறி இருப்பவன் (யானைமுகன்) தலைமையான நெறிகளை உடையவன் (அல்லா, இயேசு, புத்தர்) இவ்வாறு அனைத்து மதக் கடவுளரையும் இரண்டு சொற்களுள் சிலேடையாக அமைத்துக்காட்டினார் புலவர்.

3.‘நபிமொழிக் குறள்’ எனும் நூலின் உள்ளடக்கம் யாது?

விடை

காரை இறையடியான் எனும் கவிஞர் பாடிய நூல் இது. நபிகள் பெருமானாரின் பொன்மொழிகளுள் (ஹதீஸ்கள்) இரண்டாயிரத்தைத் தொகுத்துக் குறள்வெண்பா வடிவில் அமைக்கப் பெற்றது இந்நூல்.

4.நீ இந்துவா? முஸ்லிமா? என்ற அப்துல் ரகுமானின் கேள்விக்குக் கடவுள் தந்த பதில் என்ன?

விடை

தொலைபேசி உரையாடலில் கவிஞரிடம் ‘சிக்கிக்’ கொண்ட இறைவனிடம் கவிஞர் இறுதியாகக் கேட்ட மேற்குறிப்பிட்ட கேள்விக்கு இறைவன் சரியான பதில் அளிக்கவில்லை. ‘ராங் நம்பர்’ என்ற பதிலோடு இணைப்புத் துண்டிக்கப்பட்டது. கடவுளை மதவேலிக்குள் அடைக்க முயலும் அறிவின்மையை உணர்த்துவதாக உள்ளது கடவுளின் பதில்.

முன்

# P20246

# தன் மதிப்பீடு : வினாக்கள் - II

1.இஸ்லாமிய எழுத்தாளர்களின் உரைநடைப் படைப்புகளை எத்தனை வகையாகப் பாகுபடுத்தலாம்? அவை யாவை?

விடை

தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட அறபு, பாரசீகக் கதைகள், தமிழிலேயே படைக்கப்பட்ட சிறுகதை புதினம் ஆகிய புனைகதைகள், உரைநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், பிற உரைநடை நூல்கள் என ஐந்து வகையாகப் பாகுபடுத்தலாம்.

2.முதல் இஸ்லாமிய உரைநடை இலக்கியம் யாது? அதன் உள்ளடக்கம் யாது?

விடை

கி.பி. 1856 இல் வெளிவந்த வெள்ளாட்டி மசலாவே முதல் இஸ்லாமிய உரைநடை இலக்கியம் ஆகும். தவத்துது என்னும் வெள்ளாட்டி (அடிமைப்பெண்) மார்க்க அறிஞர்களின் வினாக்களுக்கு விடைகூறும் முகமாகத் திருக்குரான் மற்றும் நபிகள் நாயகம் அவர்களின் பொன்மொழிகள் ஆகியவற்றில் கூறப்படும் வாழ்வியல் சட்டங்களை எடுத்துரைப்பதே இந்நூலின் உள்ளடக்கம் ஆகும்.

3.தோப்பில் முகம்மது மீரானுடைய புதினங்களின் தனிச்சிறப்பைக் குறிப்பிடுக.

விடை

இஸ்லாமியர்களுள் கீழ்நிலையில் உள்ள ஏழை மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களை, சீர்திருத்த நோக்கில் கலை உணர்வுடன் சித்திரிப்பதில் இவரது புதினங்கள் முன்னிற்கின்றன.

4.இஸ்லாமிய உரைநடை எழுத்தாளர்களுள் எம்.ஆர்.எம். அப்துற்றஹீம் பெறும் சிறப்பிடம் யாது?

விடை

இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் என்னும் பயன்மிக்க மூன்று தொகுதிகளை உருவாக்கியதும், நபிகள் பெருமானாரின் வரலாற்றை நல்ல தமிழ் நடையில் எழுதியதும், அனைவர்க்கும் உரிய வாழ்க்கை முன்னேற்ற நூல்கள் ஐம்பதிற்கு மேல் படைத்ததும் இவருக்குத் தனிச்சிறப்புத் தருவன.

முன்